# மக்கள் முடிவை மறுக்க

Phone : 85777
தந்தி:—"ஜனசக்தி"
விலை 3 அணு
இலங்கையில் 25 சதம்
(விமானப் பதிப்பு)

# ஜனசக்தி

(கம்யூனிஸ்ட் கட்சி வார இதழ்)

மலர் 12] 18—3—56 [இதழ் 26

## மீண்டும் தட்சிண ராஜ்யபேச்சா?

**பிப்ரவரி 20ந் தேதி ஹர்த்தாலுக்குப் பிறகு 'தட்சிண ராஜ்ய' ஆலோசனை கைவிடப்பட்டு விட்டதென்று சிலர் நினைக்கலாம். ஆனல் சென்ற இரண்டு மூன்று வாரங்களாக நமது மாகாணத்தில் சில காங்கிரஸ் தலைவர்கள் பேசிவருவதைப் பார்த்தால் மக்கள் உஷாராயிருக்கவேண்டுமென்று தெரிகிறது.**

நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் இதைத் தொடர்ந்து வற்புறுத்திவருவது அனைவரும் அறிந்ததே. தஞ்சையில் ஒரு பொதுக் கூட்டத்திலும், சென்னையில் ஒரு பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலும் இதை மீண்டும் வலியுறுத்தியிருக்கிருர். சட்டசபையிலும் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் மறைமுகமாகவாவது இதைப் பற்றி அவர் பேசி வருகிருர். இது தன்னுடைய சொந்த அபிப்பிராயமென்றும், இதனல் மந்திரி சபையில் ஒரு பிளவும் ஏற்பட்டுவிடவில்லையென்றும் அவர் சேர்த்துச் சொல்லிக்கொள்ளத் தவறுவதில்லை.

மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபாவில் 13ந் தேதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு சி. ராஜகோபாலாச்சாரியார், திரு. சுப்ரமணியத்தின் தைரியத்தைப் பாராட்டியும், திரு. காமராஜரின் மௌனத்தை விமர்சித்தும், 'தட்சிண பிரதேச'த்திற்கு வக்காலத்து வாங்கி நீண்டதொரு சொற்பொழிவாற்றியிருக்கிருர். "கல்கி" பத்திரிகையும் தலையங்கம் தீட்டி இதற்கு ஆதரவு திரட்டும் பணியில் இறங்கியிருக்கிறது.

### மூடி மறைக்கிருர்கள்

"பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடும்போது அந்தந்த பிரதேச மொழியில் கிளர்ச்சி நடத்துவதற்காக பிரதேசவாரியான அமைப்பை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. அதே அடிப்படையில் சுதந்திரம் வந்த பிறகு மாகாணங்கள் திருத்தி அமைக்கடபடுமென்ற சிபாரிசு அல்ல அது" என்ருர் ராஜாஜி. (ஹிந்து 14-3-56)

தேசிய இயக்கம் நீண்ட காலமாக உறுதிப்படுத்தி வந்த கொள்கையையே மூடி மறைக்கப் பார்க்கிருர் ராஜாஜி. பண்டித மோதிலால் நேருவைத் தலைவராகவும் பண்டித ஜவஹர்லால் நேருவை காரியதரிசியாகவும் கொண்ட நேரு கமிட்டி 1928ம் வருடத்தில் வெளியிட்ட முடிவுகளையே மழுப்புகிருர். சென்ற வருடம் வெளியான ராஜ்ய புனரமைப்புக் கமிட்டியின் அறிக்கையின் முதற்பகுதியில் மொழிவழி மாகாணக்கொள்கையை காங்கிரஸ் கட்சி நீண்ட காலம் ஏற்றுக்கொண்டு வந்துள்ளதென்று உள்ளது. இதையும் மறைக்கிருர் ராஜாஜி.

### அங்கீகரித்ததால்

பிரிட்டிஷாரை எதிர்த்து இந்திய மக்கள் போராடியபோது பிரதேச மொழிகளில் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியத்தை அன்று காங்கிரஸ் கட்சி உணர்ந்தது ஏன்? பன்மொழி பேசும் இந்திய மக்கள் திரட்டப்படாமல் சுதந்திரப் போராட்டம் வெற்றிகாண முடியாது. அவ்வாறு மக்கள் திரட்டப்படுவதற்கு ஆங்கிலத்தையோ ஹிந்தியையோ உபயோகித்தால் பயனில்லை. அந்தந்தப் பிரதேசத்திலுள்ள தாய்மொழிகளின் மூலமே கோடிக்கணக்கான இந்திய மக்கள் தட்டியெழுப்பப்பட்டு சுதந்திரப் போராட்டத்திற்காதரவு தந்தார்கள். மக்களின் சக்தியை வளர்க்

**எம்.ஆர். வெங்கட்ராமன்**

கவும், மக்களின்விருப்பம் வெற்றி காணவும் ஒரு முற்போக்கான லட்சியத்திற்கு மொழி பேராயுதமாக விளங்கியது. இந்த மொழி அடிப்படையை அங்கீகரித்ததால் தான் பல்வேறு மொழிகள் பேசும் இந்திய மக்கள் ஒரே போராட்டத்தில் ஒன்றுபட்டு நின்று அன்னிய ஆட்சியை அகற்றினுர்கள். ஒரு புறம் பல்வேறு மொழி பேசுபவர்களிடம் தோழமையும் ஒற்றுமையுணர்ச்சியும் போராட்டத்தில் வளர்ந்தது. மறுபடியும் இந்த வழியில் இந்திய தேசிய இனங்களின் மகத்தான ஒற்றுமையும் நிகரற்ற மக்கள் சக்தியும் உலகுக்கு நிரூபிக்கப்பட்டது.

### மேலும் முன்னேற

சுதந்திர இந்தியாவில்—மேலும் மக்கள் முன்னேறவேண்டியுள்ளது. வாழ்க்கை நிலையில் பெருமபிவிருத்தி காணவேண்டும். நாட்டின் புனரமைப்பு விரைவில் முன்னேறவேண்டும். இதைச் செய்து முடித்து வெற்றி காண்பதில் இந்திய மக்களுக்குப் பெரும் பொறுப்பும் பங்குமுண்டு. இவ்வாறு உருவாகவேண்டியுள்ள ஜனநாயக வாழ்க்கைக்கு மொழிவழி மாகாணங்கள் இன்றியமையாதது. அப்பொழுதுதான் அந்தந்தப் பிரதேச மக்கள் நிகழ்ச்சிகளைப் புரிந்துகொண்டு, கல்வியிலும் நிர்வாகத் திறனிலும் அபிவிருத்தி பெறுவதுடன் மேன்மேலும் பங்குகொண்டு பலம் பெற்ற ஜனநாயக சமுதாயத்திற்கு முன்னேற முடியும். மேல் தட்டிலுள்ள ஒரு சிலரோ, ஆங்கிலம் தெரிந்த ஒருசிலரோ இனி நிர்ணயிக்கக்கூடிய விஷயங்கள் அல்ல இவை.

'தட்சிணப் பிரதேச' ஆலோசனையைக் கூறும் அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்[illegible] உறுதியாக நிறைவேற்றியிருக்கின்ற[illegible] காமராஜருக்கு உபதேசி[illegible]ருர் ராஜாஜி.

காங்கிரசின் தீர்மானம் மக்களின் விருப்பத்திற்கும் ஜனநாயகத்திற்கும் மாருனதென்று கூறத் தேவையில்லை. இது ஏட்டோடு தான் நிற்கும். வங்காள - பிகார் இணைப்பு மக்களின் எதிர்ப்பினல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. தட்சிணப்பிரதேசத்தை பொறுத்தமட்டில் "ஐக்கிய கேரள" லட்சியத்தைக் கைவிடவில்லையென்று திரு—கொச்சி காங்கிரஸ் தலைவர் திரு. கோவிந்தமேனன் கூறும்படி கேரள மக்கள் நிர்ப்பந்தித்தனர். இதுபற்றி ஒரு முடிவையும் ஆரத்திர ஆலோசிக்காமல் செய்ய முடியாதென்று மைசூர் சட்டசபையில், கர்நாடக மக்களின் எதிர்ப்பைக் கணக்கிலெடுத்துக்கொண்டு முதலமைச்சர் ஹனுமந்தையா கூறிவிட்டார். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் பிப்ரவரி 20-ந் தேதி ஹர்த்தால் கண்டிப்பாக இப்பிரச்சினையில் தமிழ் மக்களின் எதிர்ப்பை, முடிவை சர்க்காருக்கு உணர்த்தியிருக்கிறது.

### காமராஜரின் முரண்

இப்படியிருந்தும்—"தட்சிண ராஜ்யப் பேச்சு" மீண்டும் தலை தூக்குகிறதென்ருல்—சென்னை சர்க்கார் இதை அடியோடு கைவிட்டுவிட்டோமென்று கூருததன் காரணமென்றே கருதவேண்டியிருக்கிறது.

பிப். 16ந் தேதி திரு. காமராஜ் வெளியிட்ட அறிக்கையில் இந்த ராஜ்ய மக்கள்மீதோ சர்க்கார் மீதோ, இணைப்பு அல்லது ராஜ்யங்களின் சேர்க்கை என்ற எந்தத் திட்டமும் திணிக்கப்படுவதற்கான ஆலோசனைகளோ சந்தர்ப்பமோ இல்லை, எத்தகைய இணைப்புத் திட்டத்தையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிடவில்லை என்று மக்களுக்கு சர்க்கார் உறுதிகூற விரும்புகிறது" என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கதே. ஆனல் அதே அறிக்கையில் 'எந்தக் கட்டத்திலாவது ஸ்தூலமான எந்த ஆலோசனையும் உருவானல் அது மக்களின் நலனை யொட்டி அங்கீகரிக்கப்படவேண்டுமா இல்லையா என்று ராஜ்ய சர்க்கார் முடிவு செய்யவேண்டும்" என்றும் கூறியிருப்பது, "தட்சிண ராஜ்யம்" போன்ற கோஷங்களுக்கு மீண்டும் வழிதிறந்துவிடுவதாகும்.

### தெளிவாக்கி விடுக!

ஐக்கிய கேரளம், ஐக்கிய தமிழகம் முதலிய மொழிவழி மாகாணங்கள் அமைவது இனி விவாதத்திற்குரிய பிரச்சினையே அல்ல. இதை சென்னை ராஜ்ய சர்க்கார் திட்டவட்டமாகத் தெளிவாக்கி விடவேண்டும். தமிழ் மாகாணம் அமைக்கப்படுவதை துரிதப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டின் எல்லைகள், தமிழகத்திற்கு என்ன பெயரிடுவது என்ற பிரச்சினைகள் இத்துடன் இணைந்திருந்தாலும் இதற்கு உட்பட்டவையேயாகும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## போலந்து நாட்டின் கலைஞர்கள்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்ருன மக்கள் ஜனநாயக போலந்திலிருந்து அந்நாட்டின் தூதுவர்களாக கலாகோஷ்டி ஒன்று சென்னைக்கு விஜயம் செய்தது. டெல்லி, கல்கத்தா நகரங்களுக்குச் சென்ற பின் சென்னைக்கு வந்தார்கள். மக்கள் போலந்தின் கலை வளர்ச்சியையும் அந்தக் கலையின் தன்மையையும் அவர்களது இன்னிசை கானத்தையும் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நமது நாட்டுப் பிரதமர் ஜவஹர்லால் நேரு சோவியத் யூனியன் விஜயம் முடித்துக்கொண்டு திரும்பும் தருவாயில் மக்கள் போலந்திற்கு விஜயம் செய்தார். அன்று போலந்து மக்கள் நமது பிரதிநிதிக்கு அளித்த வரவேற்பு சரித்திரப்பிரசித்தி பெற்றதாகும். இந்தியாவிற்கும் போலந்திற்குமிடையே பிரதமர் நேருவின் விஜயத்திலிருந்து துவங்கிய நட்புறவு இன்று மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. கொரிய நடுநிலைமைக் கமிஷனிலும், இந்தோ-சீன யுத்த நிறுத்தக் கமிஷனிலும் அங்கம் வகித்து இந்தியா போலந்துடன் சேர்ந்து நின்று பணியாற்றும் மகத்தான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம்இந்தியாவும் போலந்தும் சமாதானத்திற்காகவும் தேசங்களிடை நல்லுறவிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் ஒரே அபிப்பிராயத்துடன் இயங்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இந்தோ-சீன விவகாரத்திலும் அவ்விதமே.

இவ்விதம் இரு நாடுகளிடையேயும் வளர்ந்துவரும் நல்லுறவு மேலும் மேலும் வளர பேருதவி செய்யும் விதத்தில் மார்ச் 6-ந் தேதி வந்த போலந்து கலா கோஷ்டியினரின் விஜயம் உள்ளது.

### நமது கலையைக் கண்டனர்

சென்னையில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தனர். நமது சர்வ கலாசாலையை கண்டனர். அங்கு எழுத்தாளர்களையும் மற்றவர்களையும் சந்தித்துப் போலந்து நாட்டின் முன்னேற்றத்தைக் கூறினர். அடையாரில் உள்ள கர்னுடக சங்கீத காலேஜிற்கு விஜயம் செய்தனர். தமிழ்நாட்டின் சங்கீதத்தைப் பற்றி முசிரி சுப்ரமண்ய அய்யர், புரபசர் சாம்பமூர்த்தி ஆகியோரிடம் கேட்டபின் நமது சங்கீதக் கருவிகளைப் பற்றியும் விசாரித்துத் தெரிந்துகொண்டனர். மகாபலிபுரம் சென்று நமது அரும்பெரும் சிற்பக் கலையைக் கண்டு களித்தனர்.

பின்னர் மியூசியம் தியேட்டரில் அவர்களுக்கென்று ஏற்பாடு செய்யப்பட்ட பாலசரஸ்வதி நடனத்தைப் பார்த்தனர். டி. கே. பட்டம்மாளின் சங்கீதத்தைக் கேட்டுக் களித்தனர்.

8ந் தேதி அதே மியூசியம் தியேட்டரில் போலந்து நாட்டின் சங்கீதத்தை நமக்கு அளித்தனர்.

உலகப் புகழ்பெற்ற சோப்பின் என்ற போலந்து நாட்டு சங்கீத விற்பன்னரின் (நமது நாட்டு தியாகராஜர் போன்றவர்) சங்கீதத்தை பியானே, வயலின் ஆகிய கருவிகள் மூலமும், வாயிலாகவும் பாடினர். மேற்கத்திய நாட்டுப் பாணியில் சங்கீதம் இருந்தபோதிலும் வந்திருந்த மக்கள் அதை நன்கு ரசித்தனர்.

### மக்களுக்கு சங்கீதம்

கடைசியில் போலந்து தூதுவராக இந்தியாவிலுள்ளவரும் இந்தக் கலாகோஷ்டியின் தலைவருமான ஜான் கரோல்வெண்டே நமது இரு நாடுகளுக்கிடையே மேலும் உறவு வளர இவ்வித கலாகோஷ்டிகள், எழுத்தாளர், பத்திரிகையாளர் போன்ற கோஷ்டிகள் இரு நாடுகளும் பரஸ்பரம் அடிக்

(2-ம் பக்கம் பார்க்க)

மேல் படங்கள்: செர்கிஸ் நாத்கிரி பியானு வாசிக்க நட்டாலியா பாடுகிருர்.—ஈஜினியவிஸ் பனுசிக் பாடுகிருர்.—பார்பாரா ஹெஸ்வி பியானு வாசித்துவிட்டு வணங்குகிருர். கீழ் படம்: சென்னை மந்திரிகள் பரிசுகள் வழங்கிய காட்சி.

18-3-56

தலையங்கம்

# டல்லஸின் மிரட்டலுக்கு இந்தியா அஞ்சாது

கராச்சியில் நடந்த தென் கிழக்கு ஆசிய ராணுவக் கூட்டணியான ஸியாட்டோ கவுன்சில் கூட்டம் முடிவடைந்தது. மார்ச் 9ந் தேதி அமெரிக்க ராஜாங்க மந்திரி டல்லஸ் புது டெல்லி வந்து சேர்ந்தார். முப்பது அமெரிக்கப் பிரமுகர்கள் 500 போலீஸ் இரகசியப் போலீஸ் பந்தோபஸ்தாளர் தவிர அவரை வரவேற்க எவருமில்லை. சோஷலிச சோவியத் நாட்டின் தலைவர்களின் விஜயத்திற்கும் அமெரிக்க ஏகாதிபத்திய மந்திரியின் விஜயத்திற்குமுள்ள வித்தியாசந்தான் என்னே!

அன்று ஜனக்கடலாகத் திகழ்ந்த விமான நிலையம் டல்லஸ் வரும்போது நிர்மானுஷ்யமான பாலைவனம்போலக் காட்சியளித்தது. கராச்சித் தீர்மானங்களுக்கு இந்திய மக்கள் கொடுத்த வரவேற்பு இது என்றால் பொருந்தும்.

மறுநாள் டல்லஸ் பிரதமர் நேருவைச் சந்தித்தார். சர்வ தேச விஷயங்கள் தொட்டு இந்திய அமெரிக்க உறவு வரை பல பல பேசியதாகக் கூறப்பட்டது. பல விஷயங்களில் இரு நாடுகளுக்கும் உடன்பாடு இருப்பதாக அவர் பசப்பினார். ஆனால் அப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக ஒரு கூட்டறிக்கை விட முடியவில்லை; விட வழியில்லை. ஏன்?

### விசித்திர பதில்!

ஸியாட்டோ கவுன்சில் முடிவுகள் ஆசியாவில் சமாதானத்தைச் சீர்குலைக்கும் முடிவுகள். ஆசிய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யும் முடிவுகள். இந்திய பாகிஸ்தான் உறவுகளைப் பாதிக்கும் விதத்தில் காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு எதிராக காஷ்மீர் பிரச்சினையும், பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் உறவைப் பாதிக்கும் புஷ்டூனிஸ்தான் பிரச்சினையையும் இக் கவுன்சில் எடுத்து விவாதித்தது. ஸியாட்டோ நாடுகளிடை உள்ள வேற்றுமைகளையும் பிணக்குகளையும் [illegible] சீறுவுக்கும் இதர ஆசிய நாடுகளுக்கும் எதிர[illegible] தனது ராணுவக் கூட்டணியைச் சாணை தீட்டிக் [illegible] படுத்த மந்திரா லோசனைகள் நடத்தியது.

ஆனால் இந்த முயற்சிகள் யாவும் வெற்றிகாண முடியவில்லை. காஷ்மீர் பிரச்சினையை எடுப்பதற்கு ஸியட்டோவுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று இந்தியா ஆட்சேபித்தது. இதற்கு சமாதானம் காணும் முறையில் டல்லசும் பிரிட்டிஷ் மந்திரி லாயிடும், ஆஸ்திரேலிய மந்திரி கேஸியும் விசித்திரமான பதில் கூறியுள்ளனர்.

சோவியத் தலைவர்கள் தமது இந்திய விஜயத்தின் பொழுது காஷ்மீர் இந்தியாவுக்குரியது என்று திட்ட வட்டமாகக் கூறியது ஆசிய நாடுகளிடையே மோதல்களையும் முரண்பாட்டையும் அவிழ்த்து விட்டு விட்டதாம். இந்தக் கொந்தளிப்பை சாந்தப்படுத்தவே இப் பிரச்கினை விவாதிக்கப் பட்டதாம். இதுதான் அவர்கள் பதில்.

### தலையீடுதானே!

காஷ்மீர் பற்றி பிரிட்டன் தனது அபிப்பிராயத்தை சொல்லட்டும்; அமெரிக்கா தனது அபிப்பிராயத்தைச் சொல்லட்டும் அவ்விதம் செய்திருந்தால் அது தனித் தனி தேசங்களின் அபிப்பிராயமாக இருந்திருக்கும். மாறாக ராணுவக் கூட்டணியாகிய சியாட்டோக் கூட்டத்தில் இதைப் பற்றிப் பேசுவது ஏன்? மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதல்லாது வேறு என்ன?

ஸியாட்டோ கவுன்சில் முடிவுகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்குப் பதில் வெடிப்புக்களைத் தீவிரப்படுத்தியுள்ளன. பாக்கிஸ்தானை இந்தியாவிற்கு எதிராக உசுப்பிவிடும் நிலைமையே உருவாகியுள்ளது. ஸியாட்டோ கவுன்சில் கூட்டத்தில் நிகழ்த்திய பகிரங்கப் பிரசங்கங்கள் எல்லாம் பொருளாதார கலாசார உறவுகளைப் பற்றி விண்ணுரமாக வர்ணித்தன. அந்தரங்கக் கூட்டங்கள் யாவும் ராணுவக் கூட்டணி என்ற பாசவலையை வீசுவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தது அப்பட்டமாகி விட்டது.

### முரண்பாடுகள் முற்றுகின்றன

*தென் கிழக்காசியாவில் தனது ஆதிக்கக் கொடி பறக்க வேண்டும் என்ற ஏக நோக்கத்துடன் இந்தோ-சீனவில் பிரான்ஸை மெள்ள மெள்ள வெளியேற்ற முனைகிறது அமெரிக்கா, பிரிட்டனின் கொழும்புத் திட்டத்தை மூழ்கடிக்கும் வகையில் 'கடன் உதவி'த் திட்டங்களைப் போடுகிறது. எனவே இந்த முரண்பாடுகள் பெருகியே வருகின்றன.*

*இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் மந்திரி லாயிட் இக் கூட்டம் காஷ்மீர் பிரச்சினையை எடுக்காது என்று புதுடெல்லியில் பேசும்போது உறுதி கூறிவிட்டு கராச்சி சென்று அங்கே அமெரிக்காவுக்குச் சரணடைந்திருக்கிறார்.*

*பிரெஞ்சு மந்திரி பினோ தனிப்பட்ட ஒரு போக்கைப் பின்பற்றியிருக்கிறார். தனது சொந்தமான சமாதானக் கொள்கையை வலியுறுத்தி யிருக்கிறார். "இரு வேறு சமூக அமைப்புகள் (முதலாளித்துவ–சோஷலிஸ அமைப்புகள்) இன்னும் நீண்ட நெடுங்காலம் சகஜீவிகளாக இயங்குவது தவிர்க்கமுடியாதது" என்கிறார் அவர். அதோடு ஆயுதக் குறைப்புக்கான புதிய முயற்சிகளை பிரான்ஸ் எடுத்துக் கொள்ளும் என்று கூறினர்.*

### அமெரிக்க – பிரெஞ்சு முரண்பாடு

*ஐஸன் ஹோவர் புல்கானின் கடிதங்களை வரவேற்றும், அணுகுண்டு ஆயுதங்களைக் குவித்து வைப்பதற்கு முடிவு காண்பது என்ற ஆலோசனையின் அடிப்படையில் லண்டனில் நடைபெறப் போகும் ஐ.நா. ஆயுதப் பரிஹரண மகாநாட்டில் மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம் என்றார்.*

*ஒரு முகாமுக்கு எதிராக ஒரு முகாம் கச்சை கட்டிக்கொண்டு இரு முகாம்களாக உலகம் நிரந்தரமாகப் பிரிந்து கிடப்பதைவிட நாடுகளிடையே நட்புறவை வர்த்தக உறவை வளர்த்துவரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்.*

*காஷ்மீர் பிரச்சினையை சியாட்டோ கவுன்சில் எடுப்பது அதன் அதிகாரத்திற்கும் நோக்கத்திற்கும் அப்பாற்பட்டதென்றார். இது பிரெஞ்சு மந்திரியின் கருத்து. அமெரிக்க பிரெஞ்சு முரண்பாடுகள் முற்றி வருவதை இது காட்டுகிறது.*

### அப்பாவி நடிப்பு

டல்லசின் அறிக்கைகளைப் பார்ப்போம். காஷ்மீர் விஷயத்தில் ஒன்றும் தெரியாத அப்பாவிபோல நடித்தார். 1947 அக்டோபர் மாதம் காஷ்மீர் ஜம்மு எல்லையில் பாகிஸ்தான் ஆக்கிரமித்ததையும் இது சம்பந்தமாக ஐ.நா. சர் ஓவன் டிக்சன் தலைமையில் விசாரணைக் குழுவை நியமித்ததும் அவர் விசாரணை நடத்தி ஐ.நா. பந்தோபஸ்துக் கவுன்சிலுக்கு அறிக்கை விடுத்ததும் யாவரும் அறிவர். அதில் பாகிஸ்தான் நடவடிக்கை சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது என்று டிக்ஸன் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். இது தமக்குத் தெரியாது என்று முழுப் பூசனிக்காயை பிடி சோற்றில் மறைக்க முயலுகிறார் டல்லஸ். சுமூகமாக காஷ்மீர் விவகாரத்தைத் தீர்ப்பது தான் தமது நோக்கமாம்; அடடா எவ்வளவு அக்கரை! யார் சுமூக முடிவுக்கு எதிராக இருப்பது? அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானை உசுப்பிவிடும் கொள்கையைக் கைவிட்டிருந்தால் காஷ்மீர் பிரச்னை என்றைக்கோ சுமூகமாகத் தீர்ந்திருக்கும்.

### வெறும் பித்தலாட்டம்

கோவா விஷயத்தில் போர்த்துகீசிய மந்திரி குன்ஹாவுடன் சேர்ந்து டல்லஸ் விடுத்த அறிக்கை நம் நாட்டில் புயல் கிளப்பியதை நாமறிவோம். அதைப்பற்றி டெல்லி நிருபர்கள் கேள்வி கேட்ட பொழுது டல்லஸ் கூறியதென்ன? போர்த்துகல்லின் அரசியல் சட்டப் பிரகாரம் கோவா ஒரு போர்ச்சுகீசிய மாகாணம் என்றிருக்கிறது என்ற ஒரு சட்ட சம்பந்தமான விஷயமாகத்தானே பேசினேன் என்று பதிலளிக்கிறார். 'சட்டப் பாயிண்ட்' பேசும் டல்லசே! கோவா உண்மையில் யாருடையது என்பது பற்றிப் பேச உம் நா ஏன் எழவில்லை? பதில் கூறும். பதில் சொன்னால் உமது குட்டு வெளியாகும். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் ஆயுதங்கள் இந்தியாவுக்கு எதிராக உபயோகிக்கப்படாது எனவும் இந்தியா தாக்கப்பட்டால் அமெரிக்கா உதவிக்கு வருமென்றும் நாக்கில் நரம்பின்றிப் பேசுகிறார். சியாட்டோ கவுன்சில் நடைபெற்று வந்த நாட்களில் பாகிஸ்தான் இந்திய எல்லையில் தாக்குதல் நடத்திய சமாசாரமே தெரியாது என்றே பசப்பினர். வடிகட்டிய ஏகாதிபத்திய பித்தலாட்டப் பேர்வழிதான் டல்லஸ் என்பது ஊர்ஜிதமாயிற்று. வஞ்சனையும் திமிரும் நிறைந்த அட்டகாசம் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடை உள்ள தகராறை ஆயுதமாக்கி கெடுபிடி யுத்தத்தை ஆசியாவின் இந்தப் பகுதியில் மூட்டும் கொடிய முயற்சி இது.

### சாணக்கியம் செல்லாது

காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்துவிட்டது தீர்ந்துபோன விஷயம். இனி மாற்ற முடியாத விஷயம் என்று காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகம்மது கர்ஜனை செய்கிறார். இந்தியா ராணுவக் கூட்டணிகளுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. பஞ்சசீலத்தையே விரும்புகிறது. இது இந்திய மக்களின் ஏகோபித்த அபிப்பிராயம்.

கம்யூனிஸ்டு எதிர்ப்பு என்று சொல்லிக் கொண்டு டல்லஸ் புரிந்துள்ள படுமோசச் செயல்களை மூடிமறைக்கவோ திரித்து விமர்சனம் செய்யவோ உலக முற்றுமுள்ள அமெரிக்க நிருபர்களும், செய்தி ஸ்தாபனங்களும் அவர்களது கைக்கூலிகளும் பகீரதப் பிரயத்தனம் செய்தாலும் இந்திய மக்கள் ஏமாறப் போவதில்லை. சுதந்திர ஆசியாவிற்கு மிகப் பெரிய ஆபத்து அமெரிக்க ஏகாதிபத்தியந்தான், இந்திய-பாகிஸ்தான் நல்லுறவு வளர்வதற்கு எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியந்தான் என்பதை இந்திய மக்கள் உணர்ந்து விட்டார்கள். விழிப்படைந்து விட்ட ஆசியா இது. பஞ்சசீலப் பாதையில் முன்னேறும் ஆசியா! டல்லசே! உம் யுத்த வெறி சாணக்கியம் செல்லாது; இந்தியா தலை வணங்காது.

# நெய்வேலி சுரங்கம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

### விவசாயிகளுக்கு

பார்வையிட்ட பிறகு கூடிய கூட்டத்தில், சுரங்க ஏரியாவில் வசித்த விவசாயிகளின் நிலைமை என்ன என்று கேட்டபோது, அவர்களுடைய நிலத்தின் கிரையமும், மேற்கொண்டு 15 சத விகித பணமும், சுரங்கத்திற்கு அப்பால் 5 ஏகர் சர்க்கார் நிலம் இனாமாகவும், தண்ணீர், விளக்கு வசதிகளும் தருவதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது சர்க்கார்" என்றார் ஸ்ரீ டி. எம். எஸ். மணி. ரொம்பவும் சந்தோஷப்பட்டோம். ஒருவர் 100 ஏகர் வைத்திருந்தால், அவருக்கு 5 ஏகர்தான் கொடுக்கப் படும் என்றார். ரொம்ப ரொம்ப சரி என்றோம்.

### தொழிலாள[illegible] நிலை

"விவசாயிகளுக்குத் தரும் சலுகைகண்டு சந்தோஷப் படுகிறோம். ஆனால் தொழிலாளர் சம்பளம் ரூ. 1–8–0 தான் தரப்படுகிறது. கண்ட்ராக்டர்களிடம் வேலை செய்பவர்களுக்கு ரூ. 1–4–0 தான் தருகிறார்கள். 70 கோடி மூலதனமுள்ள, தென்நாட்டையே செழிப்படைய வைக்கும் இத் தொழிலில் $1\frac{1}{2}$ ரூபாய் தருவது மிகவும் குறைவு" என்றேன். அதற்கு ஸ்ரீ மணி அவர்கள், "பி. டபிள்யூ டி. பிரகாரம்தான் சம்பளம் தருகிறோம்" என்றார். இது ரோட்டுக்கு சரளை கொட்டும் வேலை அல்லவென்றும், கூடுதலாக சம்பளம் தந்தால், வரி கொடுக்கும் மக்கள் கோபிக்க மாட்டார்கள் என்றும் கூறினேன்.

சென்னைக்குத் திரும்ப காரில் ஏறும்போது, ஒரு தொழிலாளி, எங்களைப் பார்த்து, "ஸார், ஸார் அதோ மலைபோல் உயர்ந்துள்ள மண்மேட்டை, நாங்கள் தான் எழுப்பினோம். பாதாளக் குவாரியை நாங்கள்தான் தோண்டினோம். ஆள்குறைப்பு காரணமாக 304 பேர் ஒரு வருஷமாக வேலையில்லாமல் இருக்கிறோம். புதிதாக 300 பேர் எடுத்திருக்கிறார்கள். எங்களை எடுப்பதாகக் கூறினாலும், இன்னும் எடுக்கவில்லை. கண்ட்ராக்டர்கள் கூட எங்களை எடுக்காதபடி உத்திரவிடப்பட்டிருக்கிறார்கள்" என்று பரிதாபமாகச் சொன்னார். பெரிய அளவில் வேலை நடக்கும்போது எடுக்காமலா போவார்கள் என்றோம். அதுவரை எப்படி உயிர் வாழ்வது? என்று திருப்பிக் கேட்டார். எங்கள் கார் பறந்துவிட்டது. சுரங்கத்தைப் பார்வை யிட்டதால் ஏற்பட்ட இன்பப் பூரிப்பும் தற்காலிகமாகப் பறந்து விட்டது.

### இரும்பு - அலுமினியம்

நெய்வேலியிலிருந்து 90-வது மைலில் உள்ள சேலத்தில் 30 கோடியே 75 லட்சம் டன் இரும்பும், 9 கோடி டன் அலுமினியமும், 60 லட்சம் டன் பாக்ஸைட்டும் கிடைக்கிறது. இவற்றைப் பயன்படுத்தி, இரும்பு, ரஸாயனம், அலுமீனியம் முதலிய தொழில்களை வளர்க்கலாம். அந்தத் திட்டம் எப்போது வரப் போகிறது என்று ஏங்கிறோம்.

வேலையிழந்தவர்களுக்கு வேலை தந்தும், அனைவருடைய சம்பளங்களை உயர்த்தியும், உற்சாகமூட்டினால், நெய்வேலி வேலை துரிதமாக நடைபெறும். இதை தமிழ் மக்கள் கருத்தில் பதித்து சகல முறைகளிலும் சர்க்காருக்கு எடுத்துரைப்பார்கள் என்று நம்புகிறேன்.

### முன் வருக!

நெய்வேலிச் சுரங்கப் பயன்களைப் பற்றியும், நடைபெறும் வேலைகளைப்பற்றியும், தொழிலாளர் நலன்களைப்பற்றியும் எல்லாக் கூட்டங்களிலும் எல்லாக் கட்சியாரும் பேசவேண்டும். சகல போகமும் பெற்று, நமதருமைத் தமிழகம்

தொழில் வளர் நாடாய்
கலை வளர் ஏடாய்

ஆவதற்கு அனைவரின் கண்களும் நெய்வேலியில் பதியுமாக!

# போலந்து நாட்டின் கலைஞர்கள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

[illegible] பார்மாறிக்கொள்[illegible] அவசியம் என்றார். போலந்தில் எவ்விதம் ஹிட்லரின் நாசகார யுத்தத்திற்குப் பிறகு நாட்டைப் புனருத்தாரணம் செய்து, இன்று வரை மேல்தட்டுக்காரர்களின் சங்கீதமாகவும் நடனங்களாகவும் திகழ்ந்த போலந்து நாட்டின் கலையை மக்கள் கலையாக ஒவ்வொரு கிராமந்தோறும் மலர்ந்துவிட்ட கலையாக மாற்றினார்கள் என்பதை எடுத்துச் சொன்னார். கலையையும் கலைஞர்களையும் சர்க்காரே அங்கு பாதுகாக்கின்றது. கலையில் ஆர்வம் காட்டுவோருக்கு சர்க்காரே பயிற்சி தந்து அவர்கள் முன்னேற உதவுகிறது என்றார்.

### சென்னை சர்க்காரின்போக்கு

முடிக்குமுன், ஒரு விஷயம். சென்னை சர்க்கார் இந்தக் கலா கோஷ்டியினரை வரவேற்க சிரத்தை எடுத்துக்கொண்டபோதிலும் [illegible] பெரும்பகுதி [illegible] சென்னை மக்கள் கலா கோஷ்டியினரைப் பார்க்கும், கேட்கும் சந்தர்ப்பத்தை உண்டாக்கித் தரவில்லை. மியூசியம் தியேட்டர் எங்கோ ஒரு மூலையில் 500 பேர் கூட பிடிக்காத ஒரு இடம். இங்கு காசு கொடுத்து டிக்கெட் வாங்கி செல்வது என்றால் மேல்தட்டுக்காரர்களால்தான் செல்லமுடியும். இப்படிப்பட்ட கலாகோஷ்டிகள் மக்களை அணுகக்கூடாது; மக்கள் அவர்களைப் பார்க்கக்கூடாது என்ற கொள்கையை சென்னை சர்க்கார் வகுத்திருக்கிறதா என்று கேட்கிறோம். இன்றேல் ஏன் சகல மக்களும் திரளாக இவ்வித வரவேற்புகளில் பங்கு கொள்ளும் ஏற்பாடுகள் செய்யக்கூடாது என்று கேட்கிறோம்.

**இந்திய-போலந்து நட்புறவு வாழ்க!**

# மீண்டும் தட்சிண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மாகாண அமைப்புக்கே உலைவைக்க விரும்பும் முயற்சிகள் முதலில் முளையிலேயே கிள்ளியெறியப்படவேண்டும்.

### கேரளம், கன்னடம், தமிழகம்

இதை உணர்ந்தே தமிழ்நாடு கட்சியின் திண்டுக்கல் மகாநாடு ஐக்கிய தமிழகத்தை வலியுறுத்தியும் தட்சிண ராஜ்ய ஆலோசனையை எதிர்த்தும், எல்லைக் கோடுகளை வரையறுக்கும் ஜனநாயக கோட்பாட்டை காட்டியும், முக்கியமான தீர்மானம் நிறைவேற்றியது. அதேமாதிரி—கம்யூனிஸ்டு கட்சியின் கர்னாடக மாகாண மகாநாட்டிலும் தட்சிண ராஜ்ய அமைப்பை எதிர்த்து பிரதான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கேரளத்திலும் கம்யூனிஸ்டு கட்சி தட்சிண ராஜ்ய அமைப்பை எதிர்த்து மக்களைத் திரட்டி மொழிவழி மாகாண அமைப்பை வலியுறுத்தி வருகிறது.

காங்கிரஸ மேலிடம் "தட்சிண ராஜ்ய முயற்சிக்குத் தந்துள்ள ஆதரவையும், இந்த ராஜ்பத்திலேயே மக்களின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்து சிலர் பேச முன்வந்துள்ளதையும் கணக்கிலெடுத்து இந்த முயற்சியின் உண்மை சொரூபத்தை மக்களுக்கு விளக்கி முறியடித்தாகவேண்டும். குறிப்பாகக் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் பொது மக்களிடையே இதுபற்றி ஏற்படும் சந்தேகங்களையும் தீர்த்து அவர்களுடைய ஆதரவைத் திரட்டவேண்டியது, இந்தச் சதி இறுதியாக முறியடிக்கப்படுவதற்கு இன்றியமையாததாகும்.

சர்வகட்சிக் கூட்டணியிலுள்ள எல்லாக் கட்சிகளும் தமிழ் மக்களை இது விஷயமாகத் தெளிவாகவும் உறுதியாகவும் எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

# வீடுதோறும் 'பிடியரிசி'

# கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டுக்கு

## பாலக்காட்டில் தயாரிப்புகள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாலாவது காங்கிரஸ் ஏப்ரல் மாதத்தில் பாலக்காட்டில் நடைபெறப் போகிறது. தியாகிகள் பலரை ஈன்றளித்த மலையாள மாநிலத்தில் தயாரிப்புகள் அதி மும்முரமாக நடக்கின்றன. செங்கொடிக் கட்சியின் மகாநாட்டுக்கு இப் பகுதி மக்கள் அளித்துவரும் அமோகமான ஆதரவுபற்றி பொலிட் பிரோ உறுப்பினர் தோழர் இ. எம். எஸ். நம்பூதிரிப்பாட் தமது செழுமையான அனுபவங்களைத் தொகுத்துப் பரவசத்துடன் தந்திருக்கிறார் 'நியூ ஏஜ்' பத்திரிகையில்.

அதன் சாரத்தைத் தருகிறோம்.

கிராமத்துக் கட்டை வண்டிகள், எருமைகள் பூட்டிய மொட்டை வண்டிகள் இரண்டு. அவற்றில் நெல் மூட்டைகள். செங்கொடிகளால் அலங்காரம். பின்னால் உடையணிந்த தொண்டர்கள் அணி வகுப்பு. இந்த வண்டிகள் கிராமத்திலிருந்து ஆலத்தூர் செல்கின்றன. அங்கே கட்சிக் காங்கிரஸின் முக்கியத்துவத்தை விளக்கக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த நெல் எத்தனையோ பல விவசாயிகள் சேர்த்துக் கொடுத்தது. தொண்டர்கள் தாலுகா கமிட்டியால் பயிற்சியளிக்கப் பட்டவர்கள். தங்கள் தாலுகா தலைநகரான பாலக் காட்டில் மகாநாடு நடப்பது பற்றி இவர்களுக்கெல்லாம் எல்லையற்ற பெருமை இணையற்ற ஆர்வம்.

5,000 பறை நெல் ரூ. 10,000. இது தாலுகாவுக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள கோட்டா. இதை வசூலிப்பதற்கும் கட்சிக் காங்கிரஸ் பற்றிப் பிரசாரம் செய்வதற்கும் பம்பரம் போலச் சுழலும் சுறுசுறுப்புள்ள கட்சி ஊழியர்கள் கிராமம் கிராமமாகச் சென்று வேலை செய்கிறார்கள்.

தமது அன்னையினும் பரிவுடையதாகக் கருதும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சகல மக்களும் இரு கரங்களாலும் அள்ளித் தருகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பானை வைத்து அதில் பிடி அரிசி பிடி அரிசியாக போட்டுச் சேமித்து வருகின்றனர் தாய்மார். தொண்டர்கள் வந்ததும் ஒப்படைக்கின்றனர். பானை நிறைந்துபோச்சே இன்னும் தொண்டர்களைக் காணவில்லையே என்று புகார் கிளப்புகின்றனர்.

இன்னும் ஒருவிதத்தில் இந்த நன்கொடை தரப்படுகிறது. அறுவடை வரப்போகிறது. நிலத்தில் செஞ்சாலிக் கதிர்கள் தலைசாய்த்துக் கிடக்கின்றன. "இதோ! இந்தப் பகுதி கட்சிக் காங்கிரஸ் நிதிக்கு, தொண்டர்களே! வந்து அறுவடை செய்துகொள்ளுங்கள்" என்று விவசாயிகள் நிலத்தை ஒதுக்கிவைக்கின்றார்கள்.

வியாபாரிகள், நெல் அரைக்கும் மில் சொந்தக்காரர்கள், சிறு தொழில் அதிபர்கள் ஏன் சில நிலச்சுவான்தார்கள்கூட நன்கொடை தருகிறார்கள். கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். எங்கள் ஊரில் நடக்கும் முதல் அகில இந்திய மகாநாடல்லவா? அந்தப் பெருமைக்கு பாத்திரராகவேண்டுமே! அதனால்.

அதுமட்டுமல்ல, அவர்களை அலைத்துவரும் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிக் கட்சி என்ன நினைக்கிறது, இவற்றுக்குத் தீர்வு காண கட்சி காட்டும் வழி என்ன? என்று அறிந்து புரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

நான் இந்தத் தாலுகாவில் ஒன்பது நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்தேன். பொதுக்கூட்டங்கள், தொண்டர்கள் கூட்டங்கள், ஊழியர் கூட்டங்கள் பலவற்றில் பேசினேன். பணமும், தானியமும், தேங்காய் காய்கறிகள் பழங்கள் என்று நிதி குவிகிறதைப் பார்த்தேன். மகாநாட்டு வேலைகளுக்கிடையில் ஒவ்வொரு கிராமத்திலும் விவசாய சங்கங்கள் வளர்கின்றன, உறுப்பினர் தொகை அதிகரிக்கிறது, கட்சி வளர்கிறது.

இப்போது நாங்கள் ஜில்லாவில் பின்தங்கிய பகுதியாகக் கூறப் படுகிறது. ஆனால் இந்த நிலைமையை மாற்றி முன்னணியில் நிற்கும் சிரக்கல் தாலுகாவுக்கு இணையாக வளர்ந்து முன்னேறி விடுவோம் என்ற உறுதி ஊழியர்களிடம் ஒளிவீசுகிறது.

இத்தகைய மகத்தான ஆதரவு கிடைக்கக் காரணமென்ன? பாலக்காடு தாலுகா கட்சி ஊழியர்கள் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் ! உழைப்பாளி மக்களின் உரிமைகள் விஷயத்தில் இடையறாது போராடிவந்திருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளருக்கு நியாயமான ஊதியமா? விவசாயிகள் ஆதரவையும் திரட்டி இதற்குப் போராடுவர். கிராமமுழுவதையும் தமக்குச் சாதகமாகத் திரட்டுவர். கூட்டுறவு பாங்கு, கூட்டுறவு சங்கம் பள்ளிக்கூடம் இதுபோல மக்கள் கருத்தைக் கவரும் சகலத்திலும் கட்சி இயங்குகிறது.

சாமான்ய மக்களிடையே இருந்து உதித்துவந்த மக்களின் புதல்வர்கள் சர்வ சாதாரணப் பிரச்சினைகளையும் விட்டுக்கொடுக்காமல் அசட்டைசெய்யாமல் அக்கறைகாட்டிப் பாடுபட்டவர்கள் மக்களின் பேராதரவுக்குப் பாத்திரமான கட்சியைக் கட்டிவளர்த்திருக்கிறார்கள்.

ஏப்ரல் 29ந் தேதி பொதுக்கூட்டத்திற்கு இப்பகுதிகளிலிருந்து ஆண்பெண் அடங்கலும் திரண்டு ஆயிரக்கணக்கில் வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

# ★ கட்சி மகாநாடுகள் ★

## ஆந்திர மாகாணம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆந்திர மாகாண ஆருவது மகாநாடு குண்டூர் ஜில்லாவிலுள்ள ரெவெந்திரப்பாடு கிராமத்தில் பிப்ரவரி 19ந் தேதி முதல் 25ந் தேதி வரையில் நடைபெற்றது. கிராம முழுவதும் செங்கொடிகளாலும், வளைவுகள் பானர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

11,700 கட்சி உறுப்பினர்களை [illegible] காண்டிடேட் உறுப்பினர்களையும், 9000 [illegible] னர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 293 பிரதிநிதிகளில் 265 பேர் கலந்துகொண்டார்கள். தெலிங்கானாவிலிருந்து பதினைந்து பேர் சகோதரப் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள்.

தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பிறகு மகாநாடு ஆரம்பமாயிற்று. ஆசார்ய நரேந்திர தேவ், மேகநாத ஸாஹா இருவரின் மறைவு குறித்து துக்கத்தைத் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

[illegible]யின் போலிட் பீரோ [illegible] தோழர் பி. ராமமூர்த்தி [illegible] அரசியல் உறுப்பினர் [illegible] மந்திரி [illegible] மத்தியக் கமிட்டியின் சமர்ப்பித்த தீர்மானத்தையும், மத்தியக் கமிட்டியின் திருத்தங்களுடன் கூடிய கட்சித் திட்டத்தையும் விளக்கிப் பேசினர். சுறுசுறுப்பான விவாதத்திற்குப் பின்னல் சில சிறு திருத்தங்களுடன் அரசியல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திட்டத்தில் உள்ள வர்ணனைப் பகுதிகளை ஒதுக்கிவிட்டு மீண்டும் எழுதப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாகாணக் கமிட்டியின் அரசியல் ஸ்தாபன அறிக்கையை மாகாணக் கமிட்டியின் உதவிக் காரியதரிசி தோழர் டி. ஸத்யநாராயணு சமர்ப்பித்தார். ஆந்திராவில் நடைபெற்ற சகல நிகழ்ச்சிகளையும் கட்சி ஈட்டிய வெற்றிகளையும், பட்ட தோல்விகளையும் விமர்சனம் செய்து விபரங்கள் தரப்பட்டன. 1955ல் ஆந்திராவில் நடைபெற்ற பொதுத் தேர்தலைப் பற்றியும், கட்சி அனுசரித்த நடைமுறைத் தந்திரங்கள், நிர்ணயிப்புகள் உட்பட சகல அம்சங்கள் பற்றியும் விரிவாகக் குறிப்பிடப் பட்டது.

நீண்ட விவாதத்திற்குப் பின்னல் அறிக்கையை முடிவாக உருக் கொடுப்பதற்கான பொறுப்பை முழு மாகாணக் கமிட்டியும் கொண்ட கூட்டத்திற்கு ஒப் படைக்கப்பட்டது.

இந்திய சர்க்காரின் மாகாணங்களை இணைக்கும் ஆலோசனைகளைக் கண்டித்தும், இதன் விளைவாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மொழிகள் கலாசாரம் இவை முன்னேற்ற மடைவதற்கு முட்டுக்கட்டை ஏற்படுகிற தென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. உடனடியாக விசாலாந்திரம் அமைக்கப்பட வேண்டும் என்று இன்னுமொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பம்பாயில் [illegible] பலர் கைது செய்யப் [illegible]ன் காக் கண்டித்தும், கூட்டாக[illegible]ியாயம் காலம் பற்றி பெற்றுள்ளதை [illegible]லாளர்களிடம் இங் பம்பாயின் வரும் [illegible] தொழிலாளர் இந்திய சர்க்கார் [illegible] போக்கை ஆட்சேபித்தும் மகாநாடு தீர்மானம் நிறைவேற்றியது.

உணவுத் தான்யங்கள் இதர சாமான்களின் விலைகள் ஏறி வருவதை உத்தேசித்து சர்க்கார் நியாய விலைக்கு தான்ய டிப்போக்கள் திறக்கவேண்டும் என்று கோரப்பட்டது.

விசாலாந்திரா கட்சி மகாநாட்டைக் கூட்ட முடிவு செய்து அதற்கான 120 பிரதிநிதிகளையும், கட்சி காங்கிரஸிற்காக 59 பிரதிநிதிகளையும் மகாநாடு தெரிவு செய்தது.

முப்பத்தைந்து உறுப்பினர்களைக் கொண்டதும் தோழர் சி. ராஜேஸ்வர ராவை காரியதரிசியாகக் கொண்டதுமான ஒருபுதிய மாகாணக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒன்பது பேரடங்கிய செயற் குழுவில் தோழர்கள் சி. ராஜேஸ்வர ராவ், பி. சுந்தரையா, எம். சந்திர சேகர ராவ், எம். பஸவபுன்னையா, டி. நாகிரெட்டி, டி. ஸத்ய நாராயணு, வை. வி. கிருஷ்ணராவ், கே. எல். நரசிம்மம், எஸ். அப்பாராவ் முதலியோர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

# பாகிஸ்தானில் புதிய அரசியல் சட்டம்

## ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமானது

பாகிஸ்தான் தோன்றி எட்டரை ஆண்டுகள் கடந்த பின் அதன் ஆளும் வர்க்கம் ஓர் அரசியலமைப்பைக் கொண்டுவந்துள்ளது. பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்குள் இயங்கும் ஓர் இஸ்லாமியக் குடியரசாக இது இருக்கும். கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் என்ற கோட்பாட்டின் கர்த்தாவான மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மீர்ஸா இதன் முதல் ஜனாதிபதியாகப் பொறுக்கப்பட்டிருக்கிறார்.

பலத்த ஆடம்பரங்களுடன், ஆரவாரங்களுடன் 'அல்லாஹோ அக்பர்' என்ற கோஷம் முழங்கப் புதிய அரசியலமைப்பு சட்டசபையால் பிப்ரவரி 29ந் தேதி அங்கீகரிக்கப்பட்டது. மத உணர்ச்சியால் பரவசப்பட்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தனர் உறுப்பினர்கள்.

இத்தனை ஆண்டுகளாக பொறுப்பு வகித்துவந்தவர்கள், அரசியலமைப்பை அளிக்காது தாமதப்படுத்தியவர்கள், அவசரச் சட்டங்கள் ஆள்தூக்கிச் சட்டங்கள் போட்டு அதிகாரத் தாண்டவம் ஆடியவர்கள் 1953ல் மக்கள் கிளர்ச்சியை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியவர்கள், பார்லிமெண்டரி ஜனநாயகத்தைப் பாதையில் போட்டு மிதித்தவர்கள்—அதே அதிகாரபீடம்—இன்று ஜனநாயகத்தின் தாதாக்களைப்போல வந்து ஓர் அரசியலமைப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

இருளிலிருந்து நாட்டை விடுவிக்கிறோம் என்று கூறி மக்களிடம் பாராட்டுதலைக் கோருகிறார்கள். மீண்டும் ஒருமுறை மக்களிடையே மத வெறியை மூட்டுகிறார்கள். கடந்த பல ஆண்டுகளின் கசப்பான அனுபவங்களையும், கடுமையான கஷ்ட நஷ்டங்களையும் மறந்துவிட்டார்கள்.

எத்தகைய அரசியலமைப்பு இது? நாடு ஒரு இஸ்லாமிய ஆட்சியாகப் பிரகடனமாகிறது. முஸ்லிம்களல்லாத சிறுபான்மையார் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப் படுகின்றனர்.

இதன் ஜனநாயக விரோதப் போக்கையும் பிற்போக்குத்தனத்தையும் அப்பலமாக்கி, சுராவர்த்தியும், மியான் இப்திகாருடீனும் அரசியல் நிர்ணய சபையில் முழக்கம் செய்தனர்.

பாகிஸ்தானின் இரு பகுதிகளிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க அமைப்பு என்று பிரதமர் பசப்பினர். ஆனல், கிழக்கு வங்காளத்தில் பஸ்லுல்ஹக் தலைமையிலுள்ள கிருஷக் பிரஜா கட்சி உட்பட இதை நிர்ணய சபையில் எதிர்த்தார்கள்.

இதை வலுக்கட்டாயமாக கிழக்கு வங்கத்தின்மீது திணிக்க வேண்டாம் என்று சுராவர்த்தி கேட்டுக்கொண்டார். எதிர்க் கட்சியினர் கிளர்ச்சியால் பாகிஸ்தான் ஆட்சி மொழியில் வங்காள பாஷையும் ஒன்று என ஏற்கப்பட்டது.

பாரபட்ச நடிவடிக்கைகளுக்கு வித்திடுகிறது மத்திய ஆட்சியின் தலையீட்டுக்குஇடமளிக்கிறது இந்த அரசியலமைப்பு. விசாரணையின்றி சிறையில் வைப்பது போன்ற அநீதிகளுக்கு ஆக்கமளிக்கிறது என்று ஆட்சேபித்தார் சுராவர்த்தி.

முந்திய நிர்ணய சபையைக் கலைக்கும்படி கோரியதை நினைவூட்டி புதிய நிர்ணயசபை தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் மக்கள் கருத்தை பிரதிபலிக்க முடியும் என்றார் இப்திகாருடீன்.

கிழக்கு வங்கத்துக்கு சம அந்தஸ்து அளிக்கப்படவில்லை. சமஷ்டி முறை என்ற போலி வேஷத்தைப் போட்டு மாகாண சுயாட்சி மறுக்கப்படுகிறது. ஒரே ஆட்சி நிலவுகிறது. இதனால் கிழக்கு மேற்கு இரு பகுதிகளிடை மோதலேற்படும் என்றார். கூட்டுத் தொகுதிகளை ஏற்காது ஹிந்துக்களுக்குத் தனித்தொகுதி என்பது சரியில்லை என்றார்.

### மக்கள் போராடுவர்

சட்டத்தின் 15வது ஷரத்தின் பிரகாரம் நிலப் பிரபுக்களுக்குப் பாதுகாப்பளிப்பதைக் கண்டித்தார்.

இந்த அரசியல் அமைப்பு அங்குரார்ப்பண நாடகம் ஸியாட்டோ மந்திரிகள் மகாநாட்டுடன் ஒரே முகூர்த்தத்தில் நடைபெற்றதற்கு ஆழ்ந்த காரணங்கள் உள்ளன. இது வெறும் சந்தர்ப்ப வசம்மட்டு மல்ல.

யுத்தக் கூட்டணித் தலைவர்களின் மந்திராலோசனைகள், பாகிஸ்தான் மக்கள்மீது புதிய விலங்கு ரூபத்தில் திணிக்கப்படும் இஸ்லாமிய குடியரசு இரண்டும் நாணயத்தின் இருபக்கங்களைப் போல இணைந்து பிணைந்தவை. பாகிஸ்தான் மக்கள் தமது அண்டை அயல்நாட்டு மக்களைப்போல விழிப்புடனிருந்து இந்தப் புதிய தளைகளைத் தகர்த்தெறிந்து விடுதலைக்காகப் போராடுவர், சுதந்திரர்களாக வாழ முனைவர் என்பது திண்ணம்.

## கர்னடக மாகாணம்

கர்னடக மாகாணக் கட்சி மகாநாடு பிப்ரவரி 23 முதல் 28ந் தேதி வரையில் பங்களூரில் நடைபெற்றது. 42 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இந்திய சர்க்கார் இரண்டு கோடி கர்னடக மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாக தட்சிணப் பிரதேசத்தைத் திணிக்க குறைந்தபட்சம் கேரளத்தையும் கர்னடகத்தையும் இணைத்துவைத்திருக்க பகீரதப் பிரயத்தனம் செய்துவரும் காலகட்டத்தில் இம் மகாநாடு நடைபெற்றது. இந்த முயற்சிகளை வன்மையாக ஆட்சேபித்தும் மார்ச் 18ந் தேதி கண்டன தினம் அனுஷ்டிக்கக் கோரியும் மகாநாடு தீர்மானித்தது.

பம்பாயில் நடைபெற்ற அடக்கு முறையைக் கண்டித்தும் சம்யுக்த மகாராஷ்டிர இயக்கத் தலைவர்களை விடுதலை செய்யும்படி கோரியும், பம்பாய் சம்பவங்களைக் குறித்துப் பகிரங்க விசாரணை நடத்துமாறு கேட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பழம்பெருங் கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் எஸ். வி. காட்டே மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். தோழர் பி. ராமமூர்த்தி மத்தியக் கமிட்டி தீர்மானத்தை விளக்கினார். தீர்மானத்தை நல்ல முறையில் உருவாக்கப் பல ஆலோசனை

(8-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் கைதிகளை விடுதலை செய்!

## முதலமைச்சருக்கு மகஜர்

அரசியல் கைதிகள் விடுதலை இயக்கம் தொடர்ச்சியாக, அலை தணியாது நடத்தப்பட வேண்டிய இயக்கமாகும். கட்சியின் திண்டுக்கல் மகாநாட்டிலும் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாகாணக் கமிட்டி அங்கத்தினர்களான தோழர்கள். ஜீவானந்தம் எம்.எல்.ஏயும், ஆர். எச். நாதன் அவர்களும் 3-2-56ல் முதலமைச்சர் திரு. காமராஜரைப் பேட்டி கண்டு, "மதுரை சிறையிலுள்ள 21 கம்யூனிஸ்டுகளையும், கோவை சிறையில் உள்ள தோழர் பாலதண்டாயுதத்தையும் விடுதலை செய்ய வேண்டுமென்றும் அதற்கிடையில் எல்லோருக்கும் பி. வகுப்பு கொடுக்க வேண்டுமென்றும், வெளியில் சட்ட பூர்வமாக அனுமதிக்கப்படும் நூல்களை இவர்களுக்கும் அனுமதிக்க வேண்டுமென்றும், ஹைக் கோர்ட்டில் உள்ள ராமநாதபுரம் சதி வழக்கு தோழர் சி. உலகநாதனின் வழக்கையும், வாபஸ் செய்யவேண்டுமென்றும் மகஜர் கொடுத்தார்கள்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு சங்கரன்கோவில் தாலுகா விஸ்வநாதப்பேரி மாதர் சங்கமும் விவசாய சங்கமும் தந்திகள் கொடுத்துள்ளன.

ராமநாதபுரம் சதி வழக்கில் சிறையிலிருந்து விடுதலையடைந்த எம். கிருஷ்ணன், டி. ராமச்சந்திரன் முதலியவர்களுக்கு அருப்புக்கோட்டை, வத்திராயிருப்பு, கூமாரப்பட்டி, கான்சாபுரம் முதலிய இடங்களில் நடைபெற்ற மாபெரும் வரவேற்புக் கூட்டங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன! நெல்லை ஜில்லா ஸ்ரீ வைகுண்டம் தாலுகா சிவகளையில், பாலதண்டாயுதம், மீனாக்ஷிநாதன் உட்பட சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்று 63 பேர் கையெழுத்திட்ட மகஜர் காமராஜருக்கு அனுப்பப்பட்டது.

அதுபோல் தோழர் டாங்கேயை விடுதலை செய்யுமாறு மகஜர் பம்பாய் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

மற்றும் அருப்புக்கோட்டைத் தாலுகா ஆவியூர், மலைப்பட்டி முதலிய கிராமங்களிலும், வேலூரில் 2-3-56ல் கூடிய வடாற்காடு ஜில்லா பீடித் தொழிலாளர் பிரதிநிதிகள் கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மாடர்ன் கபேயில் பழிவாங்கப்பட்டனர்

சென்னை மாடர்ன் கபே முதலாளிகள், தொழிலாளி கேசவலை எவ்வித காரணமுமின்றி டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 60 தொழிலாளர்களுக்குமேல் முதலாளியின் நிர்ப்பந்தம் சகிக்காமல் வேலையைவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்று 75 தொழிலாளருக்கு மேல் தினக்கூலிகளாக இருக்கிறார்கள்.

மாடர்ன் கபேயின் கிளையான தாசப்பிரகாஷ் ஓட்டலிலும், இதர கிளைகளிலும் வேலைசெய்பவர்களில் சரிபாதிப்பேரின் பெயர்களைப் பதிவு செய்யவில்லை.

அதிகாரிகள் வருகிறார்கள். செக்கிங்கும் செய்கிறார்கள்; முதலாளியால் திருப்திகரமான வரவேற்புக்குப் பாத்திரமாகிறார்கள். ஆனால் மேலே கண்ட உண்மைகள் அவர்களுடைய கண்களுக்குப் புலப்படவில்லை. ஏனோ?

# மாதர் பகுதி

## தாய்மார்களைப் போஷிக்க குழந்தை மரணத்தைத் தடுக்க

"தாய், குழந்தை சுகத்திற்கான சுகாதாரத்திற்கு உதவிகரமான குறிப்புகள்."

மேற்கண்ட தலைப்பில் சென்னை நகர கார்ப்பரேஷன், கர்ப்பிணியாக இருக்கும் தாய், தினசரி 2 பைண்ட் பசும்பால் சாப்பிட வேண்டும் என்றும், குழந்தையின் புது எலும்புகளுக்கான சத்துக்கள் பாலில் இருப்பதாக கார்ப்பரேஷன் வெளியிட்ட புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது.

தாயுக்கும் குழந்தைக்கும் இருவருக்கும் மிகத் தேவையானது வைட்டமின்கள் (சத்துள்ள ஆகாரம்) என்றும், தினசரி பால், வெண்ணெய், முட்டை, கொழுப்பு மீன், உருளைக் கிழங்கு, பச்சைக் காய்கறி, பழம், கோதுமை ரொட்டி ஆகியவற்றை தாய்மார் சாப்பிட்டு வரவேண்டுமென்றும் சென்னை கார்ப்பரேஷன் உபதேசம் செய்கிறது.

ஆனால் உண்மையைக் கூறுமிடத்து, சென்னை கார்ப்பரேஷன் தாய்மார்களுக்கு உபதேசிப்பதை எவ்வளவுதூரம் அமுல்படுத்தியுள்ளது என்பதை வாசகர்கள் கீழ்க்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்!

**சென்னை நகரில் குழந்தைகள் மரணம்**

| வருடம் | 12 வயதிற்குட்பட்ட குழந்தை |
|---|---|
| 1946 | 5,878 |
| 1947 | 6,803 |
| 1948 | 7,327 |
| 1949 | 8,072 |
| 1950 | 8,918 |
| 1951 | 9,933 |
| 1952 | 10,137 |
| 1953 | 10,010 |
| 1954 | 8,198 |

சென்னை நகர கார்ப்பரேஷன் அங்கத்தினர்களே! சென்னை சட்டசபை அங்கத்தினர்களே! ஸ்தல ஸ்தாபனங்களும், சர்க்காரும், தாய்மார், குழந்தைகள் சுகாதார விஷயத்தில் கணிசமான அளவு பெருந்தகை பணம் செலவிட ஏற்பாடு செய்வீர்களாக! பட்ஜெட் விவாதங்கள் நடக்கும் இன்று தாய்மார்கள், குழந்தைகள் சுகாதாரத்தை பிரதானமாகக் கவனித்து மேலும் மேலும் தாய்மார்களும், குழந்தைகளும் சுகமாக வாழ போதிய நடவடிக்கைகள் எடுப்பீர்களாக!

—கே. முருகேசன்

## தூத்துக்குடி மாதர் சங்க கோரிக்கைகள்

தூத்துக்குடி டேவிஸ்புரம் மாதர் சங்க கூட்டம், தலைவர் திருமதி வடிவாம்பாள் தலைமையில் 8-3-56-ல் நடைபெற்றது. அவ்வமயம்:

(1) தாய்மார்கள் பிரசவத்திற்காக ஆஸ்பத்திரிக்குச் செல்லும்போது, சர்க்கார் சட்டப்படி 5 நாள்தான் தங்க வைக்கிறார்கள். இது போதாது. தங்கும் காலத்தை 10 நாட்களாக நீடிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டும்;

(2) ஆண்கள் செய்யும் வேலை போல், பெண்கள் செய்தாலும், அவர்களுக்கு ஆண்களுக்குப் போன்ற சம்பளம் இல்லை. குறைவாக உள்ளது. ஆகவே சம வேலைக்குச் சம சம்பளம் என்று சட்டமியற்றுமாறு கேட்டுக் கொண்டும்;

(3) குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை கொடுத்து, இலவசக் கல்வி தருமாறு கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

# ராணுவக் கூட்டணி எதிர்ப்பு தினம்

ஏகாதிபத்தியங்கள் உருவாக்கி வரும் ராணுவக் கூட்டணிகள் சமாதானத்திற்குப் பேராபாயம் விளைவிப்பதோடு நாடுகளில் அரசுரிமையை பாதித்தும், முன்னேற்றத்தைத் தடைசெய்தும் பல வழிகளில் ஊறு விளைக்கின்றன.

இந்தக் கூட்டணிகளை எதிர்த்து அ. இ. சமாதானக் கவுன்சில் வேண்டுகோளை ஒட்டி மார்ச் 4ந் தேதி முதல் 11ந் தேதிவரை ராணுவக் கூட்டணி எதிர்ப்பு பலவிடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. இக்கூட்டணிகளைக் கண்டிக்கும் தேசங்களிடையே நட்புறவுக்கு அடிப்படையாக பஞ்சசீலக் கோட்பாடுகளை அங்கீகரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

அணுகுண்டு ஹைட்ரோஜன் குண்டுகளைத் தடை செய்யக் கோரியும் பொ[illegible]துவான ஆயுதப்பரிஹாரம் நடத்தக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சென்னையில்

கம்யூனிஸ்ட் கட்சியின் வ. உ. சி. நகர் கமிட்டியின் சார்பில் 9வது டிவிஷன், ஆனைக்கார கோனார் தெருவில் தோழர் சி. எம். மாதவன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் என். சங்கரையா, முகவை இராஜமாணிக்கம் முதலியோர் இந்த தினத்தின் முக்கியத்துவத்தை விளக்கிப் பேசினர்கள். டி. இ. பாலகிருஷ்ணன் தீர்மானங்களைப் பிரேரேபித்தார்; வி. எஸ். சம்பத்குமார் ஆதரித்துப் பேசினர்.

### திருப்பூர்

மார்ச் 8-ந் தேதி கம்யூனிஸ்ட் கட்சி, தொழிலாளர் சங்கங்கள் விவசாயி சங்கங்கள். படிப்பகங்கள் ஆகியவை சார்பில் பொதுக் கூட்டம் நொய்யல் நதிக்கரையில் நடைபெற்றது. கோவை ஜி. போ. அங்கத்தினர் தோழர் என். கருப்பண்ணன் தலைமை வகித்தார். மாகாணக் கமிட்டி உறுப்பினர் கே. ரமணி இந்த தினம் பற்றியும் டலஸ் வருகைபற்றியும் பேசினார். அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சத்தியமங்கலம்

மார்ச் 7-ந் தேதி சத்தியமங்கலம் கட்சிக் கமிட்டி சார்பில் தோழர் எஸ். எம். மாரப்பன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுக் காரியதரிசி தோழர் டி. ஸ்ரீனிவாசராவ், கோவை ஜில்லா வி. சங்க காரியதரிசி எஸ். அரைசாமி இருவரும் பேசினர்கள். ராணுவக் கூட்டணிகளைக் கண்டித்தும் பஞ்சசீலத்தை ஆதரித்தும் நியாயவரா மசோதா குறை நீக்கப்பெற்று அமுல் நடத்தக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### உறையூர்

திருச்சி உறையூர் பொதுஜன ஊழியர் மன்றத் திறப்பு விழாவும் ராணுவக் கூட்டணி எதிர்ப்பு தினக் கூட்டமும் மார்ச் 4-ந் தேதி நடைபெற்றன. எம். ராமசாமி கவுண்டர் தலைமை வகித்தார்.

பொன்மலை பாப்பா, ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி, கே. எஸ். மணி, திண்டுக்கல் என். வரதராஜன் முதலியோர் பேசினர்கள்.

### கல்லல்

கல்லல் கட்சி யூனிட் சார்பாக 4-3-56ந் தேதி காந்தி சவுக்கத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஜீ. க. காரியதரிசி தோழர் ஆர். எச். நாதன் ராணுவக் கூட்டணிகளால் விளையும் பேராபாயம் பற்றியும் பஞ்சசீலத்தை அமெரிக்கா உட்பட சகல நாடுகளும் ஏற்கவேண்டுமென்று வலியுறுத்தியும் பேசினர்.

### தூத்துக்குடி

கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சந்தண மாரியம்மன் கோயில் முன்பு தோழர் பெருமாள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். ஏ. முருகானந்தம் பேசினர்.

### விருதுநகர்

தோழர் ஏ. சோலையப்பன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் உலகநாதன், பரிபேக் மாரிப்பா, வி. மாடசாமி, டி. சீனிவாசன் முதலியோர் பேசினர்கள்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சேத்தூர்

சேத்தூர் ஜனநாயக வாலிபர் சங்கப் பொதுக் கூட்டத்தில், ராணுவக் கூட்டணியைக் கண்டித்து, தோழர்கள் எம். பி. சொக்கலிங்கம், கான்சாபுரம் பி. ராமச்சந்திரன், எஸ். சடாட்சரம் முதலியோர் பேசினர்கள்.

## நூல் விலை ஏறுகிறது

### சத்துவாச்சாரியில் கண்டனம்

கடந்த சில மாதங்களாக நூல் விலை உயர்ந்து வருவதால், கைத்தறி ஜவுளியின் அடக்கவிலை கூடுதலாகியிருக்கிறது. இதனால் வியாபார மந்தம் ஏற்படுவதுடன், நெசவுத் தொழிலை தொடர்ந்து நல்ல முறையில் நடத்த இயலவில்லை. அதனால் தொழிலாளர்கள் வேலையிழந்து திண்டாட நேரிடுகிறது. ஆதலால் சர்க்கார் உடனே இதில் தலையிட்டு, நூல் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடாற்காடு ஜில்லா சத்துவாச்சாரி கிராமத்தில் 29-2-56-ல் திரு. வெ. பா. உலகநாத முதலியார் தலைமையில், தோழர்கள் கே. ரமணி, வி. கே. கோதண்டராமன், வி. எஸ். கிருஷ்ணன் முதலியோர் பேசிய கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## திரு-தமிழக நகரசபை தேர்தல்

### கம்யூனிஸ்டுகள் வெற்றி

திரு-தமிழகத்தில் நாகர்கோவில், பத்மனாபபுரம் (தக்கலை), குழித்துறை (மார்த்தாண்டம்), செங்கோட்டை குளச்சல் ஆகிய நகர சபைகளுக்கான தேர்தல் பிப்ரவரி மாத இறுதியில் நடைபெற்றது. சென்ற தடவை பத்மனாபபுரம், செங்கோட்டை ஆகிய நகர சபைகளில் மட்டுமே கம்யூனிஸ்டுகள் இருந்தனர். இந்த தேர்தலில் குழித்துறை, நாகர்கோவில் ஆகிய நகரசபைகளிலும் கம்யூனிஸ்டுகள் இடம்பெற்றுள்ளனர்.

**செங்கோட்டை**

தோழர்கள் எம். காமாட்சி, எம். செல்லையா, டி. முத்துசுவாமி ஆகியோரும், கட்சி ஆதரவுபெற்ற சுயேச்சையாளர் ஏ. சண்முகமும் வெற்றிபெற்றனர்.

**நாகர்கோவில்**

தோழர்கள் கே. ரங்கநாதன், டி. அண்ணாமலை ஆகியோர் வெற்றிபெற்றனர். கட்சி ஆதரவு பெற்ற டி. ஜோஷ்வா, சி. சுப்பையா ஆகியோரும் வெற்றி பெற்றனர். தோழர் கெ. ரங்கநாதன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பத்பனபுரம்**

தோழர் எம்.எம். அலியும், கட்சி ஆதரவுபெற்ற தோழர் ஏ. எம். ஏ. ரஹீமும் வெற்றிபெற்றனர்.

**குழித்துறை**

தோழர் கொச்சுமணி (டி. தாஸ்) வெற்றிபெற்றார்.

## வேலூர் பீடி

வேலூர் அப்துல் ஜப்பார் சாயபு அண்டு சன்ஸ் பீடி பாக்டரியில் பீடிக்கு லேபிள் போடும் 38 தொழிலாளர்கள் வேலைப் பளுவை எதிர்த்து, பீடி காய வைக்க அட்டம் தூக்க முடியாது என்று 4 நாட்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர்கள்.

சமரசத்திற்கு வருவதற்குப் பதிலாக பாக்டரியையே மூடி 2000 பேர்களை தெருவில் நிறுத்தினர் முதலாளி. நிலைமை எக்கசக்கமாகவே, தற்காலிக உடன்பாட்டுக்கு வந்தார்.

அதன்படி, லேபிள் போடும் தொழிலாளர்களே பீடி காய வைக்க அட்டம் தூக்குவார்கள். அதற்காக ஒரு லட்சம் பீடிக்கு கூலி உயர்வு 10 அணா கொடுக்கப்படும். அதாவது ரூ. 3-10-0 கூலி.

# டிராம்வே தொழிலாளர்களின் வழக்கு நடத்துவதற்கு

## உடனே நிதி உதவி செய்யுங்கள்

சென்னை டிராம்வே தொழிலாளர்களுக்கு தொழில் அப்பீல் கோர்ட்டின் தீர்ப்புபடி ரிசீவர் புருக்ஸிடமிருந்து சுமார் 8 லட்ச ரூபாய் கிடைக்கவேண்டும். இதை வசூலித்து கொடுக்கும்படி டிராம்வே தொழிலாளர்கள் சென்னை சர்க்காரை அணுகினர். சென்னை சர்க்கார் இதை வசூலித்து கொடுக்க முடியும். ஆயினும் சென்னை சர்க்கார் வசூலித்துக் கொடுக்காதது மட்டுமல்லாமல் டிராம்வேத் தொழிலாளர்களே கேஸ் போட்டு வசூலித்துக்கொள்ளும்படி கூறியுள்ளனர். இந்த கேஸ் நடத்த சுமார் 300 ரூபாய் தேவைப்படுகிறது. 12-3-56ல் இந்த கேஸ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு நடத்த பணம் அவசரத் தேவை. 3 வருடங்களாக வேலையின்றித் தவிக்கும் டிராம்வேத் தொழிலாளர்கள் இதை தொடர்ந்து நடத்தக் கூடிய நிலையில் இல்லை. ஆகையால் மற்ற சகோதர தொழிற் சங்கங்கள், தொழிலாளர்கள், பொது மக்கள் ஆகியோர் தங்களால் ஆன நிதி உதவி அளித்து கேஸைத் தொடர்ந்து நடத்தவும் 8 லட்சம் ரூபாயை வெள்ளையன் லண்டனுக்கு கொண்டுபோவதை தடுத்து டிராம்வே தொழிலாளர்களுக்கு கிடைக்கும்படி செய்யவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
எம். கே. ரங்கநாதன்.

பணம் அனுப்பவேண்டிய விலாசம்:
M. K. ரங்கநாதன்,
6/157, பிராட்வே,
சென்னை-1.

### வீரப்பாண்டி

# பஞ்சாயத் தலைவர் ஜெயராமனைத் தாக்க

## உளி முனியன், மண்ணுங்கட்டி கலவரம் செய்துவருகிறார்கள்

### போலீஸ் மௌனம் ஏன்?

தென்ஆற்காடு ஜில்லா வீரப்பாண்டிக்கிராம விவசாயிகள் கடந்த பஞ்சாயத் போர்டு தேர்தலில் விவசாய சங்க ஊழியரும் கம்யூனிஸ்டு தலைவருமான தோழர் வி. எம். ஜெயராமனை, பஞ்சாயத் போர்டு பிரஸிடெண்டாகத் தேர்தெடுத்தார்கள். வீரப்பாண்டி வட்டாரத்திலும் விவசாய சங்க இயக்கம் பரவியிருக்கிறது.

விவசாயிகள் என்ற முறையில் வர்க்கபோத மடைந்து, ஸ்தாபனங்களை அமைத்து வளருவதைக் கண்டு ஆத்திரமுற்ற சில நபர்கள் உளி முனியனின் தலைமையில் கூடி, கடந்த சில மாதங்களாக, பஞ்சாயத் போர்டு தலைவர் ஜெயராமனுக்கு எதிராக கலவரம் செய்து வருகிறார்கள்.

கம்யூனிஸ்ட் தோழர்கள் குப்பனையும் ராமலிங்கத்தையும் இந்த முனியன் கோஷ்டி சுற்றி வளைத்துத் தாக்கியது. இதன் விபரம் ஜில்லா போலீஸ் சுப்பிரிண்டெண்டுக்கு தந்தி மூலம் தெரிவிக்கப் கப்பட்டும், எவ்வித நடவடிக்கையும் போலீஸ் எடுக்கவில்லை.

**கொடிமரம் முறிக்கப்பட்டது**

பொது மைதானத்தில் பறந்து கொண்டிருந்த கம்யூனிஸ்ட்கொடியை உளி முனியன் கோஷ்டி முறித்தது. இது விஷயமும் போலீஸுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை இல்லை. திருக்கோவிலூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் தோழர்கள் தெய்வமும், மாரியும் தெரிவித்தபோது, “இனி நீங்கள் கடையைக் கட்டிக்கொண்டு வெளியேற வேண்டியதுதான்” என்றார் சர்க்கிள்.

**ஜமீன்தார் வீட்டில்**

கலவரங்களைப் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும், வேறு டிவிஷன் அதிகாரிகளைக்கொண்டு விசாரிக்க வேண்டுமென்றும் வக்கில் மூலம் 19-2-55ல் டி. எஸ். பிக்கு மனுக் கொடுக்கப்பட்டது. அதற்கு, “கடையைக் கட்டவேண்டியதுதான்” என்று மிரட்டிய அதே சர்க்கிள் இன்ஸ்பெக்டரைத்தான் விசாரணை அதிகாரியாக நியமித்தார் டி. எஸ். பி. விசாரிக்க வந்தவர் ஜமீன்தார் கட்டிடத்துக்கு வரும்படி ஜெயராமனை அழைத்தார். ‘பொது இடத்தில் ஏன் கொடிமரம் நாட்டினீர்கள் என்றார். இப்படிப்பட்ட சர்க்கிள் நடத்தும் விசாரணையில் கலந்து கொள்ளமுடியாது என்று கூறி விட்டார் ஜெயராமன்.

**கையைக் காலை முறிப்போம்**

5-2-56ல் யாரோ ஒருவர் குடித்துவிட்டதை போலீஸ் கண்டு பிடித்தது. இதை உளி முனியன் கோஷ்டி, இந்த ஜெயராமன்தான் காட்டிக்கொடுத்தான், என்று தூண்டி விட்டது. அதனால் தப்பாக ஆத்திரமுற்ற அவர்கள், கையை வெட்டுவோம் என்று வீட்டின்முன் நின்று கத்தி கலாட்டா செய்தார்கள். போலீஸ் அதிகாரிகளிடம் புகார் கூறியும் நடவடிக்கை இல்லை.

**மண்ணுங்கட்டியின் மிரட்டல்**

நடவடிக்கை எடுக்காததால், எதுவும் செய்யலாமென்ற துணிச்சலில் 10-3-56ல் உளி முனியன் மண்ணுங்கட்டி தலைமையில் ஒரு 20 பேர் திரண்டு, கத்தி தடிகளுடன், “உன்னைத் தீர்த்துக்கட்டாமல் விடமாட்டோம்” என்று ஏசினார்கள். “எவ்வளவுநாள் ஆனாலும்சரி, உன் ரத்தத்தை எடுத்து நான் தெளித்தால் ஒழிய என் கோரிக்கை ஈடேறாது” என்று ஜெயராமன் வீட்டின்முன் திட்டிய விஷயமும் போலீஸுக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஜெயராமனின் கரும்புத் தோட்டத்தின் சுவர்களை மண்ணுங்கட்டி இடித்துவிட்ட விஷயமும் போலீஸுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**இவ்வளவு நடந்தும்**

இவ்வளவும் வீரப்பாண்டியில், ஒரு பஞ்சாயத் போர்டு பிரஸிடெண்டுக்கு நடந்திருக்கிறது. சகல விபரங்களும் போலீஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனினும் ஒரு நடவடிக்கையும் இல்லை. இதனால் ஊரில் தங்கமுடியாத நிலைமை ஏற்பட்டு, நேரடியாக மந்திரிகளிடம் முறையிட வந்திருக்கிறார் ஸ்ரீ ஜெயராமன்.

சர்க்கார் உடனே தலையிட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விசாரிப்பதோடு, வேறு அதிகாரிகளையும்நியமித்து, ஊரில் அமைதி நிலவ வழி செய்யாவிட்டால், உயிர்ச்சேதங்கள் ஏற்பட வழி ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

---

# தோட்டத் தொழிலாளர் போனஸ் கிளர்ச்சி

## ஆனைமலை முடீசில் எழுச்சி மந்திரியிடம் தூதுகோஷ்டி

சமீபகாலத்தில் அதாவது பிப்ரவரி 20.ந் தேதி ஹர்த்தாலில் சுமார் 35,000 ஆனைமலைத் தோட்டத் தொழிலாளர்கள் பங்கெடுத்து மக்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ளார்கள்.

அதிக லாபம் சம்பாதிக்கும் தோட்ட முதலாளிகள் 9% போனஸைத்தான் 1955-ம் வருஷத்துக்குக் கொடுப்போம் என அறிவித்தனர்! மூடீஸ் குரூப்பில் வேலை செய்யும் 6000 தொழிலாளர்கள் ஓர் கமிட்டி அமைத்து கட்டுப்பாடாக போனஸ் வாங்க மறுத்து விட்டனர்.

முதலாளியோ சில தொழிலாளரைப் பழிவாங்கினான்; சிலவு காசுக் கொடுப்பதை நிறுத்தி சீட்டுக்கொடுப்பேன் என்றார், புதிய ஆட்களை பதிவு செய்வது குறைகிறது; சங்க ஆபீசுக்கு இடம்மறுக்கப்படுகிறது. வீரமிக்க தொழிலாளர்கள் மகத்தான ஆர்பாட்டம் தினே தினே நடத்துகின்றனர். வேலைநிறுத்த ஓட்டெடுப்பு நடந்தது. 5000 பேர் பங்கெடுத்தனர் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. சமரசத்துக்கு முதலாளி இணங்கவில்லை.

13-3-56ல் மேற்படி கமிட்டித் தலைவர் ஏசுடையான், ஆனைமலைத் தோட்டத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி ஏ. ராமனுதன், கே. டி. கே. தங்கமணி, கே. டி. ராஜு எம். எல். ஏ. கே. பி. கோபாலன் எம். எல். ஏ. முதலியோர் மந்திரி பக்தவத்சலத்தை பார்த்தனர். ஏற்கெனவே எம். எல். ஏ. சோமயாஜுலுவும் பார்த்தார். மந்திரி கமிஷனரை அனுப்பிவைப்பதாகவும் 16ம் தேதிக்குள் சரியான நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி கொடுத்தார். மீண்டும் கே. பி. கோபாலன் மந்திரியைச் சந்திப்பார்.

18ந் தேதி ஆனைமலையில் நடைபெறும் போனஸ் தினக் கூட்டத்தில் கே. டி. கே. தங்கமணியும், பார்வதி கிருஷ்ணனும் கலந்துக் கொள்வார்கள்.

குறிப்பு; நீலகிரியில் 1–4–56-ல் தோட்டத் தொழிலாளத் தலைவர் விருத்தகிரி உண்ணாவிரதம் இருப்பாரெனத் தெரிகிறது,

ஒற்றுமை ஓங்குக!

மூடீஸ் தொழிலாளர்கள் வாழ்க!

**கே. டி. கே. தங்கமணி.**

---

# மராமத்து மந்திரி ராஜினமாச் செய்வாரா?

## சென்னை மின்சாரத் தொழிலாளர் போர் முரசு

நாட்டின் அபிவிருத்திக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் அஸ்திவாரம் தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சிக்கு ஜீவநாடி மின்சார உற்பத்தி. ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார உற்பத்திக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதை உணர்ந்தே சென்னையில் மின்சார உற்பத்தி வினியோகத்தில் ஈடுபட்டுள்ள 3000 தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த மின்சாரத் தொழிலாளர் சங்கம் பணியாற்றி வருகிறது. யுத்த காலத்தில் விதிக்கப்பட்ட 20 சதவிகிதம் சர்ச்சார்ஜ் கட்டணத்தை ரத்துச் செய்ய வேண்டும், மீட்டர் விகிதத்தை 4 அணாவாகக் குறைக்க வேண்டும் என்று மக்கள் சார்பில் கிளர்ச்சி செய்து வந்திருக்கிறது.

**கோரிக்கைகள்**

தொழிலாளர்களைப் பொறுத்த வரை ரூ. 18 தான் அடிப்படைச் சம்பளம். இது நியாயமல்ல. குறைந்தபட்சம் ரூ. 30 அடிப்படைச் சம்பளம் வேண்டும். பென்ஷன் அல்லது சர்வீஸ் கிராஜுவிடி தரவேண்டும். ஒரு வருஷ சர்வீசுக்குப்பின் நிரந்தரமாக்க வேண்டும். பல்வேறு தரமாகத் தொழிலாளர்களைப் பிரிக்கக் கூடாது என்று கோரி நெடுங்காலமாகக் கிளர்ச்சி செய்து வருகின்றனர் தொழிலாளர். மின்சார இலாகாவுக்கு கிடைத்துள்ள ரூபா 31 லட்சம் லாபத்திலிருந்து போனஸ் கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கைகள் சர்வ நியாயமானவை. சேலம் ஈரோடு மின்சாரக் கம்பெனியில் ரூபா 30 சம்பளம் ரூ. 30 பஞ்சப்படி என்று ரூ. 60 கிடைக்கிறது. திருச்சி சேஷசாயி கம்பெனியில் ரூ. 25 சம்பளம் ரூ. 25 பஞ்சப்படி ஆக ரூ. 50 தரப்படுகிறது. ஆனால் அரசாங்க மின்சார இலாகாவில் ரூ. 18 சம்பளம் ரூ. 18 பஞ்சப்படி ரூ. 7 வீட்டுவாடகை என்று ரூ. 43 தான் கிடைக்கிறது.

இரண்டாண்டுகளுக்கு முன் ராஜாஜி முதலமைச்சராக இருந்த பொழுது ரூ. 25ஆக அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தலாம் என்று கூறப்பட்டது. சென்ற ஆண்டில் மராமத்து மந்திரி தொழிலாளர் கோரிக்கைகள் மிதமானவை என்பதை ஏற்றுக்கொண்டார். அடுத்த ஆண்டில் நிறைவேற்றுவதாக உறுதி கூறினார்.

ஆனால் 3-3-56ல் அரசாங்கம் எழுதியுள்ள பதிலில் சங்கத்திற்கு பவர் ஹவுஸில் இடம்போன்ற சில வற்றைத் தவிர சம்பளம் கோரிக்கை முதலியவை பற்றி கவனிக்க முடியாது என்று மறுக்கப்பட்டுள்ளது.

**மந்திரி கூற்று**

மராமத்து மந்திரி சம்பள உயர்வுத் திட்டத்தை சமர்ப்பித்ததாகவும், நிதி மந்திரி கடுமையாக எதிர்த்ததாகவும், மந்திரி சபை நிதி மந்திரியின் சார்பில் நின்றதாகவும், எனவே நிராகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நியாயமான கோரிக்கைகளை மறுப்பதால் தொழிலாளர் வேறு வழியின்றி வேலை நிறுத்தத்தில் இறங்கினால் அதைக் குற்றம் சொல்ல முடியாது என்று மராமத்து மந்திரி கூறியதாகவும் தெரிகிறது.

ஒன்பதாண்டுகள், பொறுமையுடன் காத்திருப்போம், காலம் மாறும், நியாயம் கிடைக்கும் என்றிருந்த தொழிலாளர்களிடம் இந்தக் கைவிரிப்பு. தொழிலாளர்கள் கட்டுப்பாட்டுடன் 14–3–55ல் கண்டன தின பாட்ஜ் அணிந்தும், 15 – 3 – 55-ல் ஜெனரல்பாடியில் முடிவு செய்தும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். வெகுஜன ஆதரவு அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும்.

இந்தக் கட்டத்திலும் சர்க்கார் வேதாளம்போல மரத்தின்மேல் ஏறிக்கொள்ளாமல் நியாயம் செய்ய முன் வருமா? தொழிலாளர் கோரிக்கைகள் நேர்மையானவை என்ற அடிப்படையில் மராமத்து மந்திரி நியாயம் வழங்காவிடில் ராஜினமா செய்வாரா? என்ற கேள்விகள் தொழிலாளரிடையே எழுந்துள்ளன.

---

# மீண்டும் மின்சாரப் பற்றுக்குறையா?

1950 லிருந்து சுமார் $3\frac{1}{2}$ வருட காலம் மின்சார பற்றுக் குறையின் காரணத்தால் பல தொழிலாளர்கள் வேலைக் குறைவால் கஷ்டப்பட்டனர். பஞ்சாலைதொழிலாளர்களின் இயக்கத்தின் பலனால் 1952, 1953ம் வருட கால வேலையில்லாமைக்கு நிவாரணம் கொடுக்க ஓர்தொழில் கோர்ட் நியமிக்கப்பட்டது. அத்தீர்ப்பின் விளைவாக பாதிச் சம்பளம் நஷ்டஈடாக கிடைத்தது. அதன் முழுப் பலனும் அனுபவிக்க முடியாத வகையில் பம்பாய் கோர்ட் தீர்ப்பு வந்தது. எனினும் 74 மில்லில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு சுமார் 30 லட்சம் ரூபாய் வரையிலும் நஷ்டஈடு கிடைத்தது. இந்த சாதனைக்கு தொழிலாளர்களின் ஒற்றுமையும் தொழிற் சங்க பலமும் காரணமாக விருந்தது.

நிற்க, 1953 அக்டோபர் மாதம் ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வேலையில்லா காலங்களுக்கு பாதி சம்பளம் நஷ்டஈடாக கொடுக்கப்படும்.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதல் 25 சதவிகிதம் மின்சார வெட்டு ஏற்படுமென சர்க்கார் இலாகா தெரிவிக்கிறது. இது கவலை கொடுக்கும் செய்தியாகும். வேலையில்லா காலத்துக்கு நஷ்டஈடு கிடைக்கும், உண்மைதான். ஆனாலும் மின்சார வெட்டு இல்லாமல் செய்வது சர்க்காரின் கடமையாகும். இது சாத்திய மாக்க தொழிற் சங்கங்களும் முதலாளிகளும் ஒத்துழைப்பார்களென நம்புகிறேன். ஆடம்பர தேவைகளுக்கு மின்சாரத்தைக் குறைத்துத் தொழிற்சாலைகளுக்கு பாதகமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறோம்.

கே. டி. கே. தங்கமணி
பொதுக்காரியதரிசி,
தமிழ்நாடு தொழிற் சங்க காங்கிரஸ்

---

# மருந்து தயாரிக்க ரஷ்ய-இந்திய நிபுணர்கள் ஆராய்ச்சி

இந்தியாவின் மருந்து தயாரிக்கும் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக சோவியத் நிபுணர்களின் உதவியை இந்திய சர்க்கார் நாடியது. அதன் பேரில் சோவியத் நிபுணர்கள் 6 பேர் டில்லிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடன் 6 இந்திய நிபுணர்களும் சேர்ந்து கூட்டாக, இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று ஆராய்ச்சி நடத்தி, திட்டம் சமர்ப்பிப்பார்கள்.

---

# சென்னையில் சர்வதேச மாதர் தினம்

சர்வ தேச மாதர் தினத்தை ஒட்டி 8–3–56ந் தேதியன்று மாதர் முன்னேற்ற சங்கத் தலைவி என். கிருஷ்ணபாய் தலைமையில் சென்னை தண்டையார்பேட்டை புதுமனைக் குப்பம் மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாதர் இயக்கத்தின் மாட்சிமிக்க வரலாற்றை எடுத்து விளக்கியும், உலக மாதர் மகாநாட்டின் தீர்மானங்களை விரிவுரை செய்தும், அகில இந்திய மாதர் மகாநாட்டு முடிவுகளை வலியுறுத்தியும் தலைவி முன்னுரையில் விரிவாகப் பேசினார்.

டாக்டர் கண்ணபிரான் தாயும் சேயும் எப்படிப் பேணி வளர்க்கப்பட வேண்டும் என்பதற்கு சர்க்கார் பிரசுரங்களை மேற்கோள் காட்டி அவர்களுக்குப் போஷணை தரும் பால் முதலியன வினியோகித்து நடைமுறையில் சென்னை கார்ப்பொரேஷன் நடத்திக் காட்டவேண்டும் என்று வற்புறுத்தினார்.

உழைக்கும் பெண்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம், நடைபாதை வாசிகளுக்கும் இதர வீடற்ற மக்களுக்கும் வீட்டு வசதி சிசு மரணம் பிரசவகால மரணங்களைத் தடுக்கத் தக்க நடவடிக்கைகள் உடனடி எடுக்கப்பட வேண்டும் என்று கோமதி கார்வண்ணன் கூறினார்.

கே. முருகேசன், பி. தங்கராஜ், எம். ராஜம்மா, ராஜம் நமசிவாயம் முதலியோரும் இத் தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார்கள்.

இந்திய சர்க்காரின் சமாதானக் கொள்கையை ஆதரித்தும், தாய்மார் குழந்தைகள் பாதுகாப்புக்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் கணிசமான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரியும், சென்னை நகரில் சிசு மரணத்தைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

# இந்திய-சோவியத் கூட்டு பிலிம் தயாரிப்பு

இன்றைய இந்தியாவை சித்தரிக்கக்கூடிய ஒரு கலர் டாக்குமெண்டரிப் படம் தயாரிக்கும் வேலையில், ஒரு சோவியத் சினிமா கோஷ்டி, இந்திய சர்க்காரின் உதவியுடன் ஈடுபட்டுள்ளது.

சுதந்திரம் பெற்றபிறகு இந்தியா அடைந்துள்ள முன்னேற்றங்களையும், எதிர்காலத் தின் வளர்ச்சிப் போக்குகளையும்,குறிப்பாக இது விளக்கிக் காட்டும்.

---

## ரஷ்ய - இந்திய நேரடி கப்பல் போக்குவரவு

பம்பாயிலிருந்து சோவியத் யூனியன் துறைமுகங்களுக்கு நேரடியாக கப்பல் போக்குவரத்து ஏற்படுத்துவதுபற்றிப் பரிசீலிக்க கப்பல் நிபுணர்கள் டில்லி வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

# சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின்

# 20வது காங்கிரஸ் தீர்மானம்

### [முழுவாசகம்—சென்ற வாரத் தொடர்ச்சி]

## III

## கட்சியின் சாதனைகள்

உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களை நடத்துவதிலும், நடைமுறை வேலைகளிலும், கட்சி சர்வ வல்லமையுள்ள மார்க்ஸிஸ-லெனினிஸ போதனைகளால் வழிகாட்டப்படுவதாலும், நம் நாட்டில் கம்யூனிஸத்தைக் கட்டும் கொள்கையை முரணின்றியும், உறுதியுடனும் நிறைவேற்றி வருவதாலும், சர்வதேச சோஷலிஸ முகாமைப் பலப்படுத்தி வருவதாலும், தொழிலாளி வர்க்க சர்வதேசியப் பதாகையையும், மக்களுக்கிடையேநட்புறவுஎனும் பதாகையையும் உயர்த்திப் பிடித்துவருவதாலும், பத்தொன்பதாவது காங்கிரஸுக்கும் இருபதாவது காங்கிரஸுக்குமிடையேயுள்ள காலக்கட்டத்தில் நம்முடைய கட்சி மகத்தான சாதனைகளை வென்று ஈட்டியுள்ளது.

பத்தொன்பதாவது காங்கிரஸிற்கு பிறகுள்ள காலக்கட்டத்தில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பலமும் மதிப்பும் தொடர்ந்து உயர்ந்துகொண்டே இருக்கின்றன: கட்சியினுடைய லெனினிஸ்ட் ஒற்றுமை கெட்டிப்படுத்தப்பட்டுக்கொண்டே வருகின்றது; சோவியத் சமுதாயத்தில் கட்சியினுடைய தலைமைப்பாத்திரம் வளர்ந்துகொண்டே வருகிறது; தத்துவரீதியாகவும், அரசியல்ரீதியாகவும், ஸ்தாபனரீதியாகவும் கட்சி தன்னை மேலும் பலப்படுத்திக்கொண்டுள்ளது; கட்சி அங்கத்தினர்களுக்கு மார்க்ஸிஸ-லெனினிஸப் பயிற்சி அளிப்பது மேலும் பயன்தரத்தக்க முறையிலே வளர்ந்துள்ளது. கட்சி, அரசாங்கம் ஆகியவற்றின் தலைமையின் தீவிரமான சக்தியான, கட்சி ஊழியர்கள் கணிசமான அளவு பெருகியுள்ளனர்.

பத்தொன்பதாவது காங்கிரஸைத் தொடர்ந்து கட்சியையும், தேசத்தையும் எதிர்நோக்கியிருந்த சிக்கலான, முக்கியப் பிரச்சினைகளைத் தீர்க்க மத்தியக் கமிட்டி முன்வந்து, கட்சி, அரசாங்கம், பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளைச் சரியாகத் தீர்த்தது என்றும், லெனின் வகுத்த வழியிலே நாட்டை உறுதியாகவும் நம்பிக்கையுடனும் நடத்திச் சென்றதென்றும் காங்கிரஸ் திருப்தியுடன் குறிப்பிடுகிறது.

## புதுவாழ்வின் சிற்பிகள் மக்களே

மக்களின் நலன்களையும், கட்சியின் நலன்களையும் தன்னுடைய நடவடிக்கை அனைத்திற்குப் உறுதியான அடிப்படையாக மத்தியக் கமிட்டி கொண்டிருந்தது என்பதைக் காங்கிரஸ் திருப்தியுடன் குறிப்பிடுகின்றது. கட்சிக்கும் மக்களுக்கும் பயங்கரமான எதிரிகளாக இருந்த பெரியாவும் அவன் குழுவினரும் செய்த நாசகாரச் சதிச்செயல்களுக்கு முடிவு கட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி எடுத்த திடமான நடவடிக்கைகளைக் காங்கிரஸ் பூரணமாக அங்கீகரிக்கிறது; இதன் மூலம் ஏகாதிபத்திய உளவாளிகளின் திட்டங்கள்மீது கடுமையான அடி கொடுக்கப்பட்டது; கட்சியின் போராட்டத் திறன் மேலும் வளர்க்கப்பட்டது.

கட்சி வாழ்வில் லெனினிஸ நியதிகளை மீண்டும் கொண்டுவரவும், உள்கட்சி ஜனநாயகத்தை வளர்க்கவும், மார்க்ஸிஸ-லெனினிஸக் கொள்கையை அமுலாக்குவதன்மூலம் கூட்டுத் தலைமைக் கோட்பாடுகளை வளர்க்கவும், கட்சி வேலையின் முறைகளையும் பாணியையும் அபிவிருத்தி செய்யவும் மத்தியக்கமிட்டி ஆற்றியுள்ள மிகப்பெரிய பணியை காங்கிரஸ் பூரணமாகவும் முழுமையாகவும் அங்கீகரிக்கிறது. கட்சி வாழ்வில் ஜனநாயக நியதிகளைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்யவும், அதிகார வர்க்க தோரணையில் கட்டளையிட்டு காரியம் சாதிக்கும் நிர்வாக முறையை 'எதிர்ப்பதற்கும், விமர்சனம் சுய விமர்சனத்தை வளர்ப்பதற்கும் எடுக்கப்பட்ட முயற்சிகள் கட்சி அங்கத்தினர்களின் செயல் திறனைப் பெருக்கியுள்ளது; கட்சிக் கொள்கைக்கான கம்யூனிஸ்டுகளின் பொறுப்புணர்ச்சியை அதிகப்படுத்தியுள்ளது; உழைப்பாளி மக்களின் அரசியல் நடவடிக்கைகளிலும் புதியதோர் எழுச்சியைக் கொண்டுவந்துள்ளது.

வரலாற்றில் தனி மனிதனின் பங்குபற்றி மார்க்ஸிஸ – லெனினிஸக் கண்ணோட்டத்தைப்பற்றிக் கொடுக்கப்பட்ட விரிவானவிளக்கமானது, எல்லா உழைப்பாளி மக்கள், கம்யூனிஸ்டுகள் ஆகியோரின் செயல் திறனின் அளவைப் பெருக்குவதில் மிக முக்கியமான, பங்கை வகித்தது. கட்சியும். மக்களும் ஆற்றக்கூடிய பாத்திரத்தைக் குறைத்து, கட்சியின் கூட்டுத் தலைமையின் பங்கை குறுக்கி பல சந்தர்ப்பங்களில் வேலையில் கடுமையான குறைபாடுகளில் கொண்டு விட்டிருந்த தனி மனிதரைப் பூஜிக்கும் போக்கை எதிர்க்க மத்தியகமிட்டி முன் வந்தது சரியானதென காங்கிரஸ் கருதுகிறது; அத்துடன் இந்த தனி மனிதரைப் பூஜிக்கும் போக்கின் மிச்ச சொச்சங்களைத் துடைத்து எறிவதில் தன் முயற்சிகளைத் தளர்த்தக் கூடாதென்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழுள்ள வெகு ஜனங்கள் தான் புதியதோர் வாழ்வில் உண்மையான சிற்பிகள் என்ற கோட்பாட்டையே தன்னுடைய நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டுமென்றும் மத்தியக் கமிட்டிக்கு கட்டளையிடுகிறது.

### திருத்தம்

சென்ற வாரம் தோழர் பி. ராமமூர்த்தி சட்டசபையில் நிகழ்த்திய பிரசங்கத்திற்குத் தலைப்பாக 'தென்னாட்டின் தொழில் வளர்ச்சி இந்திய ஐக்கியத்தைப் பலப்படுத்தும்' என்று போடப்பட்டிருந்தது.

அதை சென்னை ராஜ்யத்தின் தொழில் வளர்ச்சி இந்திய ஐக்கியத்தைப் பலப்படுத்தும் என்று திருத்திக்கொள்ளவும். —ஆசிரியர்.

★

### விளக்கம்

சென்ற வார இதழில் வெளியிடப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரஸ் தீர்மானத்தைத் தொடர்ந்து படிக்கும்போது பக்கங்கள் தவறாகப் போட்டிருப்பதால் தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது.

அதில் ஆரம்பம் 3ம் பக்கம் இரண்டாவது 10ம் பக்கம் மூன்றாவது 9ம் பக்கம் நாலாவது 4ம் பக்கம் என்று இருப்பதை சேர்த்து வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

## ஸ்தாபன வேலையின் மட்டம்

கட்சி வாழ்வில் லெனினிஸ நியதிகளை மீண்டும் கொண்டு வந்து, ஜனநாயகத்தை வளர்த்து, கூட்டுத் தலைமைக் கோட்பாட்டை பின்பற்றி தனி மனிதரை பூஜிக்கும் போக்கை எதிர்த்ததின் விளைவாக மத்தியக் கமிட்டி தொழில் விவசாய வளர்ச்சிக்கு அளித்து வந்த வழிகாட்டுதலை அபிவிருத்திசெய்ய முடிந்துள்ளது; சோஷலிஸ சட்டத்தை மீறுவதை அம்பலப்படுத்தி, அதைப் போக்கத் தக்க நடவடிக்கைகள் எடுப்பது சாத்தியமாயிற்று; சுயதிருப்தி மனப்பான்மையையும், கற்பனையற்ற தன்மையையும் எதிர்த்து போராட உற்சாகமூட்ட முடிந்தது; சோவியத் சமுதாய வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பதற்கும், சோவியத் மக்களின் பொருளாதார வாழ்விலே மேலும் முன்னேற்றம் காண்பதற்கும், கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கக்கூடிய சகல தொழிலாளர்களையும் கட்சி முழுவதையும் திரட்டவும் முடிந்தது.

மேலும் வெற்றிகரமாக முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு கட்சி அங்கத்தினர்கள் தங்களின் போராட்டத் திறனை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும்; கட்சியின் வேலைமுழுவதும் எல்லா வழிகளுலும் தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கட்சியின் ஸ்தாபன வேலை முழுவதையும் மேலும் அபிவிருத்தி செய்வதற்கும், முதலாவதாக பொருளாதார நிர்மாணத் துறையிலுள்ள ஸ்தாபன வேலையை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய கமிட்டியை காங்கிரஸ் கட்டளையிடுகிறது. விவேகமுள்ள பொருளாதார நிர்வாகம் பற்றிய பிரச்னைகளின்பால் கட்சி ஸ்தாபனங்கள் கவனத்தை செலுத்த வேண்டும்; தொழில் நிலையங்கள், கூட்டுப் பண்ணைகள். இயந்திர டிராக்டர் நிலையங்கள், அரசாங்கப் பண்ணைகள் ஆகியவற்றின் வேலையை திறமையாக நடத்துவதற்காக அவற்றின் பொருளாதாரத் தொழில் நுணுக்கப் பிரச்னையை அறிந்து கொள்வதில் அதிகப்படியான கவனம் செலுத்தவேண்டும்.

முடிவுகள் அமுலாக்கப்படுவதைப் பரிசீலிப்பதற்கான கலாச்சார நிர்மாணத்தின் பல்வேறு துறைகளுக்கு வேண்டிய தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி அளிக்கும் முறைகள் அவற்றிற்கு கம்யூனிஸ்டுகளை நியமிக்கும் முறைகள் ஆகியவற்றைப் பொறுத்துத்தான் ஸ்தாபனவேலையின் மட்டம் இருக்கிறது. பெண்கள் உள்ளிட்ட இளம் தொழிலாளர்களை பெருக்குவதற்கு அதிகப்படியான கவனம் செலுத்துவதும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும் அவசியம் என காங்கிரஸ் கருதுகிறது.

கட்சி அங்கத்தினர்களின் எண்ணிக்கை பெருகுவதை ஒழுங்குபடுத்தும் விஷயத்தில் சில கட்சி ஸ்தாபனங்கள் கவனத்தைக் குறைப்பது தவறுகுமென காங்கிரஸ் கருதுகிறது. கட்சி அங்கத்தினர்களின் எண்ணிக்கை பெருகுவதைவிட, அவர்களின் தரம் உயருவதுதான் முக்கியமானதென்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எல்லாக் கட்சி ஸ்தாபனங்களும் வாழ்வின் முன்னணியில் இருக்கும் மக்களை குறிப்பாக தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகள் ஆகிய பகுதிகளில் முன்னணியில் நிற்பவர்களைக் கட்சிக்கு தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டுமென காங்கிரஸ் கட்டளை யிடுகிறது.

## மாறும் நிலைக்கேற்ப அமைப்புகள்

மாறிக்கொண்டிருக்கும் நிலைமைக்கொப்ப, கட்சியின் ஸ்தாபனக் கட்டுக்கோப்பையும், செயல்களின் ரூபங்களையும், அரசாங்கத்தின் அங்கங்களையும் அபிவிருத்தி செய்யும் வேலையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென மத்தியக் கமிட்டிக்கு காங்கிரஸ் கட்டளையிடுகிறது.

ஜில்லா மட்டங்களில் கட்சியின் நடவடிக்கையை மேலும் பலப்படுத்துவது விசேஷமாக வலியுறுத்தப்பட வேண்டும். இத்திசையிலே கட்சி பெருமளவு வேலை செய்துள்ளதை, காங்கிரஸ் அங்கீகரிக்கிறது; கிராமப் புறங்களிலேயுள்ள கட்சியின் ஜில்லா கமிட்டிகளின் கட்டுக்கோப்பைத் திருத்தி அமைப்பதும், இயந்திர டிராக்டர் நிலையப் பிரதேசங்களுக்காக ஜில்லா கட்சிக் கமிட்டிகளின் கட்டுக்கோப்பைத் திருத்தி அமைப்பதும், இயந்திர டிராக்டர் ஜில்லா கட்சிக் கமிட்டிகளின் காரியதரிசிகளின் தலைமையின் கீழ் போதகர்கள் குழுக்கள் நியமிப்பதும் சரியானதென்றும் காங்கிரஸ் கருதுகிறது.

கட்சியின் தேவைகளுக்கு ஒப்ப ஜில்லா ஸ்தாபனங்களின் இயங்கும் தரமானது இன்னும் உயரவில்லை. இதற்குக் காரணம் சில பிரதேசங்களிலே எம். டி. எஸ். பகுதிகளின் ஜில்லா கமிட்டிகளுக்கு ஆசிரியர்களாகவோ, காரியதரிசிகளாகவோ நியமிக்கப்படும் ஆட்கள் திறமையான அரசியல் தகுதியும், திறமையும் இல்லாதவர்களாகவும் இருப்பதேயாகும்.

விவசாய வளர்ச்சியில் பிரமாண்டமான கடமைகளை நாடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற இன்றைய நிலைமையில், ஜில்லா ஸ்தாபனங்களைத் தகுதியும், திறமையும் கொண்ட ஆட்களைக் கொண்டு பலப்படுத்த வேண்டியது விசேஷ முக்யத்துவம் வாய்ந்த கடமையாகும். ஜில்லா மட்டங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் நேரடியாகக் கட்சியின் கிராம ஸ்தாபனங்களான இயந்திர டிராக்டர் நிலையங்கள், கூட்டுப் பண்ணைகள், அரசாங்க பண்ணைகள் ஆகியவற்றிலே வேலை செய்து அரசாங்கமும், கட்சியும் கொடுக்கும் தாக்கீதுகளை அமுலாக்குவதற்கு விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டுகிறார்கள். அதாவது, தேசம் முழுவதும் அக்கறை கொண்டுள்ள விஷயமான பண்ணைத் தொழிலில் ஓர் தீவிர முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு செய்யப்படும் முயற்சியின் வெற்றியானது இன்று தீர்மானமான அளவிற்கு ஜில்லா ஸ்தாபனங்களின் திறமையைப் பொறுத்திருக்கிறது. எனவே, கட்சியின் ஜில்லா கமிட்டிகளில் உள்ள தலைமைப் பதவிகளுக்கு, குறிப்பாக எம். டி. எஸ். பகுதிகளின் காரியதரிசிகள், போதகர்கள் பதவிகளுக்கும், ஜில்லா சோவியத்துக்களின் நிர்வாகக் கமிட்டிகளில் உள்ள பதவிகளுக்கும் மக்களை விவேகமுடனும், சுறுசுறுப்புடனும் திரட்டக்கூடியவர்களை, பண்ணைத் தொழில்பற்றிய நல்ல அறிவு படைத்த நபர்களை நியமிப்பது அவசியமாகும். கூட்டுப் பண்ணை, அரசாங்கப்பண்ணைகளின் முன்னணியில் நிற்கும் ஸ்தல தொழிலாளர்களில் மிகச் சிறந்தவர்களை ஜில்லாத் தலைமைப் பதவிக்கு உயர்த்தியும், நகர, தொழில் பிரதேசங்களில் இருப்பவர்களின் சேவைகளைப் பெற்றும் ஜில்லா மட்டங்களில் உள்ள தலைமைக் குழுவைப் பலப்படுத்துவதறகு தளராத முயற்சிகள் செய்யப்படுவதன்மூலம் இதைப் பெற முடியும்; அத்துடன் கூட்டுப் பண்ணைகள், அரசாங்கப்பண்ணைகள், இயந்திர, டிராக்டர் நிலையங்கள் ஆகியவற்றின் பொருளாதார நடவடிக்கைகளின் பலன்களில், ஜில்லாக்களிலுள்ள கட்சி அரசாங்க ஸ்தாபனங்களின் தலைமை அதிகாரிகள் நேரடியான பௌதீக அக்கரைகொள்ளவும் வாய்ப்பிருக்கவேண்டும். அதேபோன்று நகர கட்சி ஸ்தாபனங்களையும் தொடர்ந்து பலப்படுத்தவும், தொழில் நிலையங்கள் இயங்குவதற்கு கட்சியின் நகரக் கமிட்டிகளும், நகர ஜில்லாக் கமிட்டிகளும் ஏற்றுக்கொள்ளும்பொறுப்பினளவை உயர்த்துவதற்கும், சகல முயற்சிகளும் செய்யவேண்டும்; குறிப்பாக உற்பத்தியில் மிகச் சமீபகாலத்திய விஞ்ஞான தொழில் நுணுக்க சாதனைகளையும், முன்னேற்றமான நடைமுறைகளையும் புகுத்தவும், பொது ஜனங்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் ஆகிய அனைத்தும் சரிவர வேலை செய்யவும் இது அவசியமாகும்.

## வாலிப சமூகத்தின் விசேஷப் பங்கு

உழைப்பாளி மக்கள் அனைவரோடும், கட்சி முழுவதற்கும் உள்ள உறவுகளையும் தொடர்ந்து பலப்படுத்துவது, கட்சியை எதிர்நோக்கி இருக்கும் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிமுக்கியமான தேவையாகும். உழைப்பாளி மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியத்துகள், தொழிற்சங்க ஸ்தாப[illegible] [illegible]விற்றின் வேலையை [illegible] ஜீவனுள்ளதாக்கி, அதன்[illegible]மாக பொருளாதார கலாச்சா[illegible] வளர்ச்சியிலும் மக்களின் அ[illegible]டத் தேவைகளைப் பூர்த்[illegible] செய்வதிலும், உழைப்பாளி ம[illegible]ள் கம்யூனிஸக் கல்வி பெறுவ[illegible]கு உதவிசெய்வதிலும், அவ[illegible]ின் பங்கைக் கணிசமான [illegible]வு உயர்த்த வேண்டியதின் அவசியத்தை கட்சி [illegible] காங்கிரஸ் சுட்டிக்காட்[illegible]றது.

நாட்டின் [illegible] வாழ்வில் லெனின் இ[illegible] கம்யூனிஸ்ட் கழகமானது ஒ[illegible] முக்கியமான பாத்திரத்தை வ[illegible]க்கிறது; பொருளாதார, கலா[illegible]சார நிர்மாணத்தில் தன்னுடைய முழுப் பங்கையும் நிறைவேற்[illegible]கிறது; இளைஞர்களுக்கு கம்[illegible]னிஸ உணர்வில் கட்சி போதனை[illegible] செய்வதற்கும் உதவி அளிக்[illegible]றது. எனினும், இந்த காம்ஸ[illegible]ால் ஸ்தாபனங்களின் நடவடி[illegible]கைகளில் தீவிரமான பலவீன[illegible]கள் காணப்படுகின்றன; குறிப்[illegible]ாக அவர்களின் தத்துவார்த்த [illegible]பாதனை வேலைகளில் இந்த [illegible]லவீனம் காணப்படுகிறது, நடைமுறை வேலைகளுக்கு இளைஞ[illegible]களைத் திரட்டும் திறமை இல்லா[illegible]திருப்பதும் அன்றாட வேலைகளுக்[illegible]த் தேவையான திறமையான [illegible]தாபன வேலைக்குப் பதிலாக, தீ[illegible]மானங்கள் நிறைவேற்றுவது [illegible]வாய்வீச்சுக்கள் ஜம்பம் ஆகிய[illegible]ற்றையும் பல காம்ஸமால் [illegible]ஸ்தாபனங்களில் காணலாம். இ[illegible]த பலவீனங்கள் எல்லாம் அ[illegible]ற்றப்படவேண்டுமானால் காம்[illegible]மாலுக்கு கட்சி வழிகாட்டுவதில் அபிவிருத்தி ஏற்படவேண்டும்; வாலிபர்களுக்கு கல்வி அளிப்ப[illegible]ற்கு வேண்டிய நிலைமைகளை சிருஷ்டிப்பதில் கட்சி அதிகப்படியான கவனம் செலுத்தவேண்டும்; [illegible]வசியமான கலாசார, ஓய்வுவசதிகளை அவர்களுக்கு அளிக்கவேண்டும். காம்ஸ[illegible]

## கண்ணின் [illegible] போலக் கா[illegible]

மார்க்ஸிஸ லெனினிஸ தத்து[illegible]வத்தின் பரிசுத்தத் தன்மையை கண்ணின் கருமணிபோன்று தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்றும், கம்யூனிஸத்தைக் கட்டக்கூடிய காலத்தில் செய்யப்படும் நடைமுறை வேலையின் மூல[illegible]மும் மிக சமீப காலத்திய சரித்திர பூர்வமான அனுபவத்தையும், வாழ்க்கையின் யதார்த்தங்களையும் பொதுமைப்படுத்துவதின் மூலமும் நிர்மாண முறையில் அதைச் செழுமைப்படுத்த வேண்டுமென்றும் மத்திய கமிட்டிக்குக் காங்கிரஸ் கட்டளையிடுகின்றது. அதேமாதிரி பூர்ஷ்வா தத்துவத்தின் பிரதிபலிப்புகளுக்கு எதிராக தயவு தாட்சண்யமற்ற போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும்.

உழைப்பாளி மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு கம்யூனிஸக் கல்வி அளிப்பது தலைசிறந்த முக்கியத்துவம் வாய்ந்த கடமையென காங்கிரஸ் வற்புறுத்துகிறது.

## எண்ணெய் [illegible] தேசியம[illegible]

### அ. இ. பெட்ரோ[illegible] சம்மேளன[illegible]

அகில இந்தியாவிலும் எண்ணெய் வினியோகம் செய்யும் தொழிலைத் தேசியமயமாக்க வேண்டும் என்று அகில இந்திய பெட்ரோலியம் தொழிலாளர் சம்மேளன மகாநாடு இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இம்மகாநாடு சென்னையில் [illegible] நாட்கள் நடைபெற்றது. சென்[illegible] மேரி ஹாலில் பொதுக்கூட்ட[illegible] நடைபெற்றது. இணைக்கப்பட்டுள்ள 11 [illegible]ங்கங்களிலிருந்து 64 பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டார்கள்.

எண்ணெய் [illegible]யோகத் தொ[illegible]லில் பெரிய [illegible]தனம் போட[illegible] மலே மிகப்[illegible]ய லாபத்[illegible] அங்கியக் கம்[illegible]கள் பெற்[illegible] வெளியேற்றி[illegible]கின்றன.

மால் அங்கத்தினர்களும்சோவியத் இளைஞர்கள் அனைவரும் தேசிய, பொருளாதார, கலாச்சார நிர்மாணத்திலும், நாட்டின் அரசியல் சமூக வாழ்வு முழுவதிலும் இன்னும் அதிகத் தீவிரமான பங்கு கொள்வது உறுதி செய்யப்பட வேண்டும்.

தத்துவார்த்த வேலையைப் பொறுத்தவரை, கம்யூனிஸ நிர்மாண நடைமுறைக்கும், பிரச்சாரத்திற்குமிடையே இருக்கக்கூடிய பிளவை நீக்குவது மிக முக்கியமான கடமைகளில் ஒன்று என காங்கிரஸ் கருதுகிறது. கம்யூனிஸத்தின் பொருளாதார உற்பத்தி தளத்தை உருவாக்கும் கடமைகளுடனும், ஏராளமான பொருளாதார கலாச்சார வசதிகள் ஏற்படுத்துவதுடனும் பிரஜைகளின் கம்யூனிஸ அரசியல் ஞானத்தை வளர்ப்பதுடனும்! நம்முடைய பிரச்சாரமும்' கிளர்ச்சியும் மிக நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்யவேண்டும்; வரட்டுவாதமும், புத்தகவாதமும் மார்க்ஸிஸ லெனினிஸத்தின் சிருஷ்டி உணர்விற்கு அப்பாற்பட்டவை என பூரணமாக நிராகரிக்கப்படவேண்டும். மார்க்ஸிஸ லெனினிச தத்துவத்தை வெறுமனே விளக்குவதுமட்டுமல்லபிரச்சாரத்தின் கடமை, ஆனல் அது வாழ்க்கையில் நடைமுறையில் புகுத்தப்படுவதற்கும் உதவி செய்யப்படவேண்டும்.

கன இயந்திரத்தொழில்வளர்ச்சிக்குப் பிரதான முக்கியத்துவம் கொடுக்கும் கட்சியின் பொதுவான கொள்கையை மீறிச் செல்லச்செய்த முயற்சியை எதிர்த்தும் இந்த நாட்டில் சோஷலிஸம் கட்டும் பிரச்னைபற்றியும், இதர பல தத்துவார்த்த பிரச்னைகள் பற்றியும் ஏற்படுத்தப்பட்ட குழப்பத்தை எதிர்த்தும் மத்தியகமிட்டி நல்லதோர் சந்தர்ப்பத்தில் முன் வந்ததை காங்கிரஸ் குறிப்பிடுகிறது.

## கண்ணின் கருமணி போலக் காப்பாற்றுக

இக்காரணங்களுக்காக தத்துவார்த்த கல்வியின் சகல சாதனங்களான பிரச்சாரம் கிளர்ச்சி பத்திரிகை, வானொலி கலாச்சாரக் கல்வி ஸ்தாபனங்கள் கழகங்கள் விஞ்ஞானம் இலக்கியம் கலை ஆகிய அனைத்தையும் பூரணமாகவும், இன்னும் அதிகத் திறமையுடனும் பயன்படுத்த வேண்டும் என கட்சி ஸ்தாபனங்களுக்குக் கட்டளை இடுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியானது மார்க்ஸிஸ—லெனினிஸத்தின் மகத்தான போதனையை ஆயுதமாகக் கொண்டு, சோவியத் மக்கள் அனைவரையும் தன் பதாகையின் கீழே மிக நெருக்கமாக ஒன்று திரட்டி உலக வியாடகமான சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த கம்யூனிஸத்தின் புதிய வெற்றிகளை நோக்கி அவர்களை அழைத்துச் செல்லும் என்ற நம்பிக்கையைக் காங்கிரஸ் தெரிவித்துக்கொள்ளுகிறது.

## ண்ணெய் வினியோகத்தை தேசியமயமாக்குக

### அ. இ. பெட்ரோலியம் தொழிலாளர் சம்மேளன மகாநாடு

எனவே இத்தொழிலை தேசியமாக்கவேண்டும் என்று மகாநாடு தீர்மானித்தது.

இத்தொழிலுக்கு தேசிய ரீதியில் ஒரே சங்கத்தை நிறுவவும், தொழிற்சங்க ஐக்கியம்பற்றியும் தீர்மானங்கள் நிறைவேறின.

சர்வதேச எண்ணெய் ரசாயனத் தொழிலாளர் சங்கம் உ. தொ. ச. சம்மேளனத்தின் ஆசிய பீரோ இவற்றிலிருந்து வாழ்த்துக்கள் வந்திருந்தன.

புத்தாண்டுக்கு ஜி. சுந்தரம் தலைவர், டி. சி. என். மேனன், அதீன் சாது உபதலைவர்கள், ஆர். என். கால் பொதுச்செயலாளர், எஸ். ராஜகோபால் செயலாளர்' பொக்கிஷதார் என்றமுறையில் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# லெனினிஸம்-கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் போராட்டமிக்க பதாகை

**கோமின்பாரம் தலையங்கம் 9-3-56**

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 20வது காங்கிரஸ் சர்வதேசிய கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கச் சரித்திரத்தின் பிரகாச மிகுந்த சீரும் சிறப்பு மிக்க, பக்கங்களில் பொறிக்கப்படும் சம்பவமாக விளங்கப்போகிறது. அதன் நடவடிக்கைகளிலெல்லாம், அதன் முடிவுகளிலெல்லாம் லெனினிஸத்தின் மேலுள்ள தளரா நம்பிக்கை ஊடுருவிச் செல்கிறது. நிரந்தர ஜீவனுள்ள லெனினிஸ போதனை, அதன் சிருஷ்டி பூர்வமான வளர்ச்சி, ஆகியவற்றின் புனிதத் தன்மை பற்றிய அக்கரை அவைகளில் ஊடுருவிச் செல்கின்றன.

20வது காங்கிரஸின் தீர்மானங்கள் பல முக்கியமான, சித்தாந்த ரீதியில் தைர்யமான முடிவுகளுக்கு வந்துள்ளன. அவை திட்டவட்டமாக கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை. சமூக வளர்ச்சியின் விதிகளும் அவை இன்றைய கால கட்டத்தில் இயங்கும் தன்மையையும் பற்றியவை. 20வது காங்கிரஸின் தீர்மானங்கள் இன்றைய நிலையில் மார்க்ஸிய சித்தாந்தத்தை அமுல் நடத்துங்கால் எழும் அடிப்படையான பிரச்சனைகளை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளன. இந்த முடிவுகள் மகத்தான சித்தாந்த, நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவை மார்க்ஸிஸம் லெனினிஸத்தை மிகப்பெரும் அளவிற்கு செழுமைப்படுத்துகின்றன.

தோழர் குருஷ்செவால் சமர்ப்பிக்கப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் ரிபோர்ட்டில் உள்ள தற்கால சர்வதேசிய வளர்ச்சியின் பிரதான பிரச்னைகள் சிலவற்றை பற்றிய புதிய சித்தாந்தப் பார்வையும், அந்தக் காங்கிரஸின் மற்ற முடிவுகளும் சிருஷ்டி பூர்வமான மார்க்ஸிஸத்தின் உதாரணங்களாக விளங்குகின்றன.

முதலாளித்துவம் சோஷலிஸம் ஆகிய இரு அமைப்புகளும் சமாதானமாக சகஜீவிகளாக இருக்க முடியும் என்ற பிரச்சனை மகத்தான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஒரு உலக சமூக அமைப்பு இருந்த இடத்தில் மற்ளெரு உலக அமைப்பு வரும் சரித்திர மாற்றம், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸமாக மாறும் சரித்திர மாற்றம், சோஷலிஸத்திற்கும் முதலாளித்துவத்திற்கு மிடையே நீடித்த சகஜீவனம், பொருளாதாரப் போட்டி உள்ளிட்ட ஒரு சகாப்தத்தைக் குறிக்கிறது என்று லெனின் போதித்துள்ளார். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 20-வது காங்கிரஸ் இந்த லெனினிஸக் கொள்கைதான் சோவியத் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவான பாதையாக இருந்து வந்திருக்கிறது,இன்றும் உள்ளதுஎன்று மீண்டும் ஊர்ஜிதம் செய்தது.

சமாதான சகஜீவனம் என்ற கொள்கை நாளுக்கு நாள் அதிகமாக சர்வ தேசிய அங்கீகாரத்தைப் பெற்று வருகிறது. சோஷலிஸ முகாமிலுள்ள எல்லா தேசங்களின் அன்னிய நாட்டுக் கொள்கையின் அடித்தளமாக உள்ளது. இந்தியா, பர்மா போன்ற பல தேசங்கள் அக்கொள்கையைத் தீவிரமாக அமுல் நடத்தி வருகின்றன. மேலும் மேலும் விரிவான வட்டாரங்களிலும், ஒவ்வொரு தேசத்திலுமுள்ள பல்வேறு பகுதியினரிடையேயும் சமாதான சகஜீவனமென்ற கருத்துப் பரவிவருகிறது. சமாதான சகஜீவனம் என்ற கொள்கையை அங்கீகரிக்க வேண்டுமென்ற குரலை முதலாளித்துவ நாடுகளிலுள்ள பல பூர்வாக் கட்சிகளின் தலைவர்களிடமிருந்து எழுவதையும் கேட்கலாம்.

இதனுடன் நெருங்கிப் பிணைந்திருக்கும் பிரச்சினை இன்றைய சகாப்தத்தில் யுத்தத்தைத் தவிர்க்கக்கூடும் என்ற விஷயம். யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு சாதகமான சூழ்நிலை இன்றுள்ளது. இன்று உலக சோஷலிஸ முகாம் என்று ஒன்று உருவாகி யுள்ளது. அது ஒரு மகத்தான சக்தியாக விளங்குகிறது. யுத்தத்தைத் தீவிரமாக எதிர்க்கும் பல தேசங்களும் இன்று உள்ளன. முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்க இயக்கம் பலம் வாய்ந்த சக்தியாக உருவாகிவிட்டது. சமாதான இயக்கம் என்று ஒன்று தோன்றி அது ஒரு சக்தி வாய்ந்த அம்ஸமாக விளங்குகிறது. என்றாலும், 20-வது காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளதுபோல் ஏகாதிபத்தியம் இருக்கும் வரையில் யுத்தத் தீயை மூட்டும் பொருளாதார தளம் இருக்கத்தான் செய்கிறது என்ற லெனினிஸ கோட்பாடு முற்றிலும் உண்மையானதே. ஆனல் யுத்தமென்பது பொருளாதாரம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை மட்டுமல்ல. ஒரு யுத்தம் நடக்குமா அல்லது தடுக்கப்படுமா என்பது வர்க்கங்களின் பலாபலத்தையும், அரசியல் சக்திகள், ஸ்தாபன சக்தி, மக்களின் உணர்வுபூர்வமான அபிப்பிராயம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. இன்று ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத் தீயை மூட்டுவதைத் தடுக்கும் சக்தி வாய்ந்த சமூக அரசியல் சக்திகள் மிகப் பலம் வாய்ந்த சாதனங்களைப் பெற்றிருக்கும் போது, யுத்தங்கள் தவிர்க்க முடியாத விதிவசம் என்று சொல்வதற்கில்லை.

யுத்தம், சமாதானம் ஆகிய பிரச்சினைகள்பற்றி 20-வது காங்கிரஸ் தந்துள்ள சிருஷ்டிபூர்வமான புதிய விளக்கம் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சமாதானத்திற்காகவும், தேசங்களிடையே நட்புறவு, பரஸ்பர நல்லுணர்விற்காகவும் பாடுபடும் முற்போக்குச் சக்திகளுக்கு மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். யுத்த அபாயத்திற்கெதிராக உலக மக்கள் போராட ஸ்தாபன ரீதியாகத் திரட்ட அது சரித்திர ரீதியான பங்கு வகிக்கும். சமாதான வீரர்களின் அணிகள் வளருவதற்குப் பேருதவி புரியும். தங்களது உன்னத பணியை ஆற்ற உற்சாகமளிக்கும். கோடிக்கணக்கான மக்களுக்கு யுத்தத்தைத் தவிர்த்து ஆக்கிரமிப்பு சக்திகளைத் தடுக்க முடியும் என்ற நம்பிக்கை ஊட்டும்.

இந்தக் காங்கிரஸில் விவாதிக்கப்பட்ட மற்ளெரு மிக முக்கியமான பிரச்சினை பல்வேறு தேசங்கள் சோஷலிஸத்திற்கு மாறும் முறைகள் பற்றியதாகும். 'எல்லா தேசங்களும் சோஷலிஸத்தை வந்தடையும்; இது தவிர்க்க முடியாதது'' என்ருர் லெனின். ''ஆனல் எல்லா தேசங்களும் ஒரேவிதமான பாதையில்தான் செல்லும் என்பதில்லை; ஒவ்வொன்றும், ஒன்று அல்லது மற்ளெரு ஜனநாயக முறையில், ஒன்று அல்லது மற்ளெரு பாட்டாளி வர்க்க சர்வாதிகார முறையை மேற்கொள்வதிலும், சோஷலிஸ மாற்றங்கள் ஒன்று அல்லது மற்ளெரு வேகத்தில் சமூகவாழ்வின் பல்வேறு அம்ஸங்களில் மாற்றத்தை உண்டாக்குவதிலும் தன்னுடைய பிரத்தியேக பங்கை வகிக்கும்'' என்று லெனின் மேலும் வறபுறுத்தினர். சோஷலிஸத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிற தேசங்களின் வளர்ச்சியின் சரித்திர பூர்வமான அனுபவம் இந்த லெனினிஸக் கோட்பாட்டை பூரணமாக ஊர்ஜிதம் செய்கிறது. மக்கள் ஜனநாயக அமைப்புள்ள தேசங்களில் பல விசேஷ தன்மைகளும் வித்தியாசங்களும் அங்குள்ள பிரத்தியட்ச சூழ்நிலைக்கொப்ப இருக்கத்தான் செய்கிறது என்பது சென்ற 10 ஆண்டுகளின் நிரூபணமாகியுள்ளது. அதனுடைய சிறப்பை பூரணமாக நிரூபித்துவிட்டது. சீனமக்கள் குடியரசு சோஷலிஸ மாற்றத்தின் பல பாணிகளை அமுல்நடத்தி வருகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 20-வது காங்கிரஸ் தீர்மானங்கள் பல்வேறு தேசங்கள் சோஷலிஸத்தை நோக்கிச் செல்லும் முறைகள்பற்றிய பிரச்சனையை புதிய விதத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. இன்றைய கட்டத்தில் புரட்சியின் வழிகள்பற்றிப் பரிசீலனை செய்யும்பொழுது, எதிர்காலத்தில் பல்வேறு தேசங்கள் சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதில் வேறுபட்ட பல்வேறு முறைகள் இருக்கக்கூடும் என்ற சரியான முடிவுக்கு 20வது காங்கிரஸ் வந்துள்ளது. அதேபோல் சில பிரத்தியேக சூழ்நிலை நிலையில் சமாதானமாகவும், உள்நாட்டுக் கலகம் இல்லாமலும், தொழிலாளிவர்க்கம் - உழைக்கும் விவசாயிகளுடனும், படிப்பாளி, தேசபக்த சக்திகளின் பரந்த பகுதிகளையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு — பார்லிமெண்டில் நிலையான மெஜாரிடி பலத்தைப் பெற்று, அதை பூர்ஷ்வா ஜனநாயகக் கருவியாக இருப்பதிலிருந்து உண்மையான மக்கள் சக்தியின் ஆயுதமாக மாற்றுவதின் மூலமும் இந்த மாற்றம் ஏற்படமுடியும் என்று இந்தக் காங்கிரஸ் எடுத்துக்காட்டுகிறது.

இது மிகப் பெரும் சித்தாந்த முக்கியத்துவம் வாய்ந்த தென்பது மட்டுமல்ல, பல்வேறு தேசங்கள் சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதில் பல்வேறு முறைகள் பற்றிய பிரச்சனைக்கு புதிய பார்வையுமாகும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளுக்கு நேரடியான நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்தப் பிரச்சனையைப் பற்றிய விளக்கம் தொழிலாள வர்க்கத்திடையே உள்ள அரசியல் பிளவைப் போக்கும் அவர்களது முயற்சிக்கு பேருதவி புரியும். தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை உருவாக்கிப் பலப்படுத்தும்.

சமீப வருஷங்களில் சமாதானத்தை, தேசிய சுதந்திரத்தை, ஜனநாயகத்தை பாதுகாப்பது போன்ற பிரச்சனைகள் எழும்பி உள்ளன. இவைகளில் கம்யூனிஸ்டுகளுக்கும் சோஷல்டெமொகிராட்டுகளும் பல விஷயங்களில் ஒருமைப்பாடு இருக்கின்றது. எனவே அவர்களிடையே அந்தப் பிரச்சனைகளில் நடைமுறைத் தொடர்பும் ஒப்பந்தம், ஒத்துழைப்பு ஏற்படுவது சாத்தியம். ஒரு கொள்கை அடிப்படையில் 20வது காங்கிரஸ் இன்றைய கட்டத்தில் சோஷல் டெமொகிராட்டிக் கட்சிகளைப் பற்றிய பார்வையை வகுத்தது. அந்தக் கட்சிகளின் அணிகளிடையே மேலும் மேலும் ஆதரவையும் வரவேற்பையும் வளர்க்கும்; வளர்த்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை.

மார்க்ஸிஸம் - லெனினிஸத்தில் உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைப் புனிதத்தன்மையுடன் பாதுகாத்துக்கொண்டே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் அதன் மத்தியக் கமிட்டியும் தனி நபர் புகழ்ச்சி மார்க்ஸிஸம்—லெனினிஸ போக்கிற்கு முற்றிலும் விரோதமானது என கண்டனம் செய்தது. இவ்விதப் புகழ்ச்சி ஒரு குறிப்பிட்ட தலைவரை வீரராகவும், அதிசயங்களை உண்டாக்குபவராகவும் செய்து, அதே சமயத்தில் கட்சியின் பங்கையும் மக்களின் பங்கையும் குறைப்பதிலும் அவர்களது சிருஷ்டிபூர்வமான நடவடிக்கையைக் குறைப்பதிலும் கொண்டுவிடுகிறது. மத்தியக் கமிட்டியின் ரிபோர்ட்டிலும், பிரதிநிதிகளின் பேச்சுக்களிலும், காங்கிரஸின் முடிவுகளிலும் வற்புறுத்தப்பட்டதுபோல், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 19-வது காங்கிரசுக்கு முன்பு செல்வாக்கிலிருந்த தனிநபர் புகழ்ச்சித் தத்துவமும் நடைமுறையும் கட்சியின் வேலையைப் பெரிதளவு பாதித்துள்ளன. கூட்டுத் தலைமையின் பங்கைக் குறைத்துள்ளன. உட்கட்சி ஜனநாயகத்தை பலஹீனப்படுத்தியுள்ளன. கட்சி அங்கத்தினர்களின் நடவடிக்கையையும், முன்கையெடுத்து இயங்குவதையும் முடமாக்கியுள்ளன. கட்டுப்பாடு குறைவதிலும், பொறுப்பற்றத் தன்மையிலும் தனி நபர்களின் வேலையில் ஏதேச்சாதிகாரத் தன்மையில்கூட கொண்டுவிட்டன, விமர்சனம் சுயவிமர்சனம் வளர்வதைப் பாதித்தன. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஒருதலைப்பட்சமான—சிலசமயங்களில் தவருன—முடிவுகளிலும் கொண்டுவிட்டன.

தனி நபர் புகழ்ச்சியாளர்கள், மார்க்ஸிய சித்தாந்த வளர்ச்சிக்குக்காரணம் ஒருசிலநபர்கள்தான் என்றும், மற்ற மனிதப்பிரக்ருதிகளெல்லாம் அந்த நபர்கள் சிருஷ்டித்தவைகளைப் புரிந்து கொண்டு பிரச்சாரம் செய்வதுதான் வேலை என்ருர்கள். இதன் விளைவாக மார்க்ஸிஸம் – லெனினிஸ வளர்ச்சியில் ஒரு அக்கரையற்ற போக்கு தோன்றியது; சிருஷ்டிபூர்வமான ஆராய்ச்சிக்குத் தடை ஏற்பட்டது. சித்தாந்தத் துறையில் பணிபுரிவோர் முன்கை எடுத்து இயங்க முடியாமல் செய்தது. வரட்டு வாதம் (Dogmatism) நடைமுறையற்றக் கொள்கைவாதம் (Doctrinairism) பரவத் தூண்டியது. இதன் விளைவாக புரட்சிகரமான சித்தாந்தத்தைவளர்ப்பதில்சோவியத்யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, ஏனைய சகோதரக் கட்சிகள், ஆகியோரின் கூட்டுச்சிந்தனையின் பங்கும், வெகுஜனங்களின் கூட்டு அனுபவத்தின் பங்கும் புறக்கணிக்கப் பட்டன.

அதனல்தான் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 20வது காங்கிரஸ் கூட்டுத்தலைமை என்ற கொள்கையைப் பலப்படுத்தியும், தனிநபர் புகழ்ச்சியைத் தீவிரமாக எதிர்த்தும், கட்சி வாழ்க்கையில் லெனினிஸக் கோட்பாடுகளை மீண்டும் அமுல் நடத்துவதில் மத்தியக் கமிட்டி ஆற்றியுள்ள முக்கியமான பணியை ஏகமனதுடன் ஆதரித்துள்ளது.

தனிநபர் புகழ்ச்சியின் மிச்சசொச்சங்களை எதிர்த்து நடக்கும் போராட்டத்தில் எவ்விதத் தளர்ச்சியும் ஏற்படக் கூடாதென்று மத்தியக் கமிட்டிக்குக் காங்கிரஸ் அறிவுறுத்தியது. கம்யூனிஸ்டுக் கட்சி தலைமையில் உள்ள மக்கள் தான் புதுவாழ்வின் உண்மையான சிருஷ்டி கர்த்தாக்கள் என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில்தான் அதன் எல்லா நடவடிக்கைகளும் இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தியது.

எல்லா தேசங்களிலு முள்ள கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியை, நிரந்தர வெற்றிக் கொடி நாட்டிவரும் மார்க்ஸிஸ-லெனினிஸ சித்தாந்தத்தை திட்டவட்டமான கொள்கையின் அடிப்படையில் தைர்யமாக வளர்க்கும் கட்சி என்று, உண்மையான மரியாதையுடன் நேசமனப்பான்மையுடன் பார்க்கிருர்கள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தஸ்தவேஜுகளில் ஆழ்ந்த புதிய அனுபவத்தையும் சமூகத்தை சோஷலிஸ ரீதியில் மாற்றும் நடைமுறை அனுபவத்திற்கு ஒரு உற்சாகம் தரும் உதாரணத்தையும் பார்க்கிருர்கள். கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளின் போராட்டமிக்க ஆயுதம் லெனினிஸம்; கோடி கோடிக் கணக்கான மக்கள் சமாதானத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும், சோஷலிஸத்திற்காகவும் நடத்தும் போராட்டத்தின் பதாகை லெனினிஸம்தான்.

# மான்யங்கள் பற்றிய விவாதத்தில்

## மக்களின் உரிமைகளுக்கான போராட்டம்

சட்டசபையிலே...

சட்டசபையில் பட்ஜெட் பற்றிய பொது விவாதம் முடிவடைந்தது. இப்போது 5-3-56 ஒவ்வொரு மான்யமாக எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதம் நடைபெறுகிறது.

வெட்டுப் பிரேரணைகள் மூலம் சர்க்கார் போக்குகளை ஆட்சேபித்தும், சீர்திருத்தங்கள் கோரியும் மக்களை அலைத்துவரும் பிரச்சினைகளை முன்வைத்தும் உறுப்பினர்கள் பேசி வருகிறார்கள்.

### ரெவின்யூ இலாக்கா

ரெவின்யூ நிர்வாக யந்திரத்தை ஜனநாயகத்திற்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும் என்று பல அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள். நிலவரிக்குப் பதில் விவசாய வருமான வரி விதிக்கலாம் எனவும் யோசனை கூறப்பட்டது.

வெட்டுப் பிரேரணை கொண்டு வந்த மணலி சி. கந்தசாமி நிலச் சீர்திருத்தத்தின் அவசியத்தை சர்க்கார் உணர்ந்திருப்பதை வரவேற்றார். எந்த முறையில் அமைத்தால் யதார்த்தத்தில் அமுல் நடத்த முடியும் என்பதை சர்க்கார் ஆலோசிக்க வேண்டும் என்றார்.

நாட்டில் மாறுதலுக்கு சாதக நிலைமையை விவசாய இயக்கம் உண்டாக்கி யிருக்கிறதென்றும் சட்டங்களை அமுல் நடத்துவதில் அதிகாரிகள் தயங்கக் கூடாதென்றும், நிலவெளியேற்றப் புகார்களை கவனித்து தடுக்கவும், ஏழை விவசாயிகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து தரவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கூறினார்.

லோயர் பவானி பிரதேசத்தில் விவசாயத்திற்காகக் கிணறுகள் வெட்டக்கூடாது என்று தடுக்கப் பட்டிருப்பதைக் குறிப்பிட்டார் தோழர் கே. டி. ராஜு. தண்ணீர் விடப்படாத ஆறு மாதங்களில் கிணறின்றி விவசாயம் சாத்தியமில்லை என்றார். ஆயக்கட்டுக்குள் சேராத விவசாயிகள் தம் நிலத்தின் வழி செல்லும் கசிவு நீரை உபயோகித்தால் ஏகருக்கு ரூ. 200 தண்டத் தீர்வை போடப்படுகிறது. இது பற்றிப் பிரதேச எம். எல். ஏக்களைக் கூட்டி சுமுகமான முடிவு எடுக்கக் கோரினார்.

அவலைக் கொடுத்துவிட்டு ஏன் மெல்லுகிறீர்கள் என்று எங்களைக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் குறை சொல்லுகிறார்கள் என்றும் தவறைக் கண்டிப்பது தவறா? என்று பி. ராமமூர்த்தி கேட்டார். இனம் பற்றிய சட்டங்களில் உள்ள கோளாறுகளைத் திருத்த சர்க்கார் முன்வரவில்லை என்றார். சர்க்கார் உண்மையில் நிலச்சுவான்தார் பக்கம் இல்லை என்றால் அதைத் தெள்ளத் தெளிவாக்கட்டும் என்றார்.

மந்திரி மாணிக்கவேலு நாயக்கர் பதிளித்தார்.

### கலால் இலாகா மான்யம்

மதுவிலக்குத் திட்டம் எவ்வளவு ஆரம்பத்தில் தோல்வியடைந்திருக்கிறது என்பதைப் பார்த்தறிந்து பிரச்சாரம் செய்ய வேண்டுமெனவும் தாறுமாறாகக் கிராம மக்கள்மீது நடவடிக்கை எடுத்துப் பயனில்லை என்றும் கே.டி. ராஜு கூறினார்.

ஸ்பிரிட் போன்ற வஸ்துக்களை உட்கொண்டு மக்கள் நோயால் வருந்துவதைத் தவிர்க்கவேண்டும் என்று கிருஷ்ணன் குறிப்பிட்டார்.

மந்திரி பரமேஸ்வரன் பதிலளித்தார்.

### ஸ்தல ஸ்தாபன மான்யம்

இந்த மான்யம் விவாதிக்கப்பட்டபொழுது பி. ராமமூர்த்தி ஈரோடு நகரசபைக் கமிஷனர் நடத்தைபற்றி பிரச்சினை எழுப்பினார். நகர சபையைக் கலக்காமல் அதன் விருப்பத்திற்கு எதிராக நகரசபைத் தலைவருக்கும் தெரியாமல் மஹாஜன கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார் என்பது குற்றச்சாட்டு.

இதுபற்றிப் பூரண விசாரணை நடத்தக் கோரினார்.

இதில் மந்திரி சுப்ரமண்யம் குறுக்கிட்டுப் பதிலளித்தார்! ராமமூர்த்தியின் குற்றச்சாட்டைஏற்று விசாரணை நடத்த மறுத்தார். ஆனால் நகரசபைகள்பற்றி பொது விசாரணை நடத்த ஒப்புக்கொண்டார்.

திருச்செங்கோடு பஞ்சாயத் போர்டு ஆதரவில் ஓர் ஆஸ்பத்திரியை கவர்னர் திறந்து வைத்த போது, எடுக்கப்பட்ட போட்டோவில் கவர்னருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஹரிஜன் அங்கத்தினர் உருவம் நீக்கப்பட்டுள்ளதாகவும் இது ஜாதிவேறுபாடு வேலை என்றும் கூறி விசாரணை கோரினார் ஸ்ரீ அர்த்தநாரி.

இது சம்பந்தமாக விசாரித்து சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதாக மந்திரி ராமசாமி படையாச்சி பதிலளித்தார்.

### விற்பனை வரி மான்யம்

விற்பனை வரி மான்யம் பற்றிய விவாதத்தில் எஸ். இராமலிங்கம் சட்டினிக்கும் வரியா? என்று கேட்டார்.

இந்த வரிக்கு இந்த சபையில் ஆதரவளிப்பவர்கள் சிலரே என்றும், 9 கோடி வருமானம் வருகிறதென்று அதிகாரத்தை துர் விநியோகம் செய்யும் அதிகாரிகளுக்கே மேலும் அதிகாரமளிக்கப்படுகிறது என்றும் பி. ராமமூர்த்தி கூறினார்.

### கே. டி. ராஜு

விற்பனை வரி பற்றிய மூன்றாவது திருத்த மசோதாவை சர்க்கார் கைவிடவேண்டும் என்பதற்காகவும், அம்மசோதாவின் பேரில் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகவும் நம் ராஜ்யத்திலுள்ள வியாபாரிகள் அனைவரும் மார்ச் 7-ந்தேதி ஹர்த்தால் செய்வதாக எடுத்த முடிவையும் இது சம்பந்தமாக கனம் நிதி மந்திரியைப் பேட்டி கண்டதையும், அவர் இது விஷயமாகக் கவனிப்பதாக உறுதிமொழி கொடுத்த காரணத்தால் அவர்கள் ஹர்த்தாலை ஒத்திப்போட்டதையும் குறிப்பிட்டு இம்மசோதா சட்டமானால் வியாபாரிகளைப் பெரிதும் பாதிக்கும் என்றும் கே. டி. ராஜு வலியுறுத்திக் கூறினார்.

சர்க்காருக்கு 9 முதல் 9½ கோடி ரூபாய் வருமானம் தரும் இதைக் குறைக்க வியாபாரிகள் விரும்பவில்லை என்றும் ஒருமுனை வரியாக இருந்தால் பல கணக்குகள் பல சங்கடங்கள் இன்றி வசூலிப்பது சுலபமாக இருக்கும் எனவும் அவர் கூறினார். வர்த்தகர்கள் சமூகத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் என்பதையும் நிவாரண வேலைகள், சர்க்கார் கடன் இவற்றில் பெரிதும் உதவியுள்ளவர்கள் என்பதையும் எடுத்துக்காட்டினார்.

விற்பனை வரி சம்பந்தமாக சர்க்கார் கொடுத்துள்ள ரிபோர்ட்டை அவர் சுட்டிக் காட்டினார்.

சென்னை ராஜ்யத்தில் விற்பனை வரி கொடுப்போர் 1954ம் வருடத்தில் 72,777 பேர். 1955ல் 60,187 பேர். வரி கொடுக்கவில்லை என்று வழக்குத் தொடரப்பட்டவர்கள் தொகை 1954ல் 549 பேர் 1955ல் 1142 பேர். குறிப்பிட்ட காலத்தில் வரி கொடுக்காதவர்கள் என்ற தலைப்பின்கீழ் 1954ல் 2505 பேர், 1955ல் 7,737 பேர். வரி கொடுக்க இஷ்டமில்லாதவர்கள்: 1954ல் 1183 பேர், 1955ல் 6527 பேர். குறிப்பிட்ட காலத்தில் வரி கொடுக்கவில்லை என்பதற்காக விற்பனை வரி அதிகாரிகளால் ரூ. 5 அல்லது ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 1954ல் 31,995 பேர். 1955ல் வரி வசூலிக்கமுடியாமல் பாக்கியிருக்கும் தொகை ரூ, 1,34,00,000 என்று புள்ளி விபரங்களைக் கூறினார்.

மொத்தம் 72,777 பேரில் 31,995 பேர்மீது அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பெருந்தொகையினர் தக்க காலத்தில் வரி கொடுக்க முடியாமலிருப்பதும் பெருந்தொகை பாக்கிநிற்பதும் வியாபாரிகளுக்கு இது உண்மையில் சங்கடம் விளைப்பதையே காட்டுகிறது என்றார்.

வருடத்தில் பத்தாயிரம் ரூபாய்க்கு வியாபாரம் செய்பவர்கள்தான் விற்பனைவரி கொடுக்க வேண்டும் என்று 1939ல் குறிப்பிடப்பட்டதையும் இன்று விலைவாசிகள் மாறிவிட்ட கட்டத்தில் 15 வருடங்களுக்கும் முன்னிருந்த நிர்ணயிப்பு சரியல்ல என்றும் இருபத்தையாயிரம் ரூபாய்க்கு' மேல் என்று சட்டத்தைத் திருத்தக் கூடாதா எனவும் அவர் கேட்டார். வரி வசூலிப்புக்கு இப்போதுள்ள அளவு பெரிய ஸ்தாபனம் தேவையா? என்றும் கேட்டார்.

பச்சை மிளகாய், இஞ்சி, பால் போன்ற பொருள்களுக்கும் தேங்காய்க்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

விவாதத்திற்குப் பதில் சொல்லும் போது கனம் ரெவின்யூ மந்திரி, பச்சை மிளகாய், இஞ்சி, பனை தென்னை வெல்லம் இவற்றுக்கு விலக்களிப்பதாக வாக்களித்தார்.

### போலீஸ் இலாகா

இதைப் பற்றி எழுந்த விவாதத்தில் கே. பி. கோபாலன் மலபாரில் பல ஏழை மக்கள் போலீசாரின் அத்துமீறிய செயல்களாலும், அக்கிரமங்களாலும் துன்புறுத்தப்படுவதாக உதாரணங்களுடன் கூறினார்.

போலீஸ் லாக்கப்களில் அடிக்கடி மரணங்கள் ஏற்படுவதாக எழும் புகார்களைச் சுட்டிக்காட்டி இவைபற்றித் தகுந்த விசாரணை நடத்தவேண்டும் என்று மணலி சி. கந்தசாமி கோரினார்.

20-ந்தேதி ஹர்த்தால் நடைபெற்ற பொழுது ஐலண்டு மைதானத்தில் நடந்த தடியடி பிரயோகம் ஆத்திர மூட்டத்தக்கதாகவும் விஷமத்தனமாகவும் நடந்திருக்கிறதெனவும், இதுபற்றி சர்க்கார் விசாரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

நிதிமந்திரி சுப்பிரமண்யம் பதிலளிக்கையில் ஜீவானந்தம், எம். ஆர். வெங்கட்ராமன் முதலியோர் அடிபட்டதுபற்றி வருந்துவதாகவும் இத்தகைய நிலைமையைத் தவிர்க்க ஆசைப்படுவதாகவும் ஐலண்டு மைதான தடியடிபற்றி மீண்டும் விசாரணை செய்யத் தயார் என்றும் கூறினார்.

### கூட்டுறவு இலாகா மான்யம்பற்றி

இதன்மீது நடைபெற்ற விவாதத்தில் விவசாயிகளுக்கு ரூ. 70 கோடி கடன் தேவைப்படுமென்றும் கூட்டுறவு இயக்க மூலம் 15 கோடிதான் கிடைக்கும் எனவும் இதன்விளைவாக அவர்கள் லேவாதேவிக்காரர்களை நம்பி அல்லல் படநேரிடும் எனவும், இது ரூ. 30 கோடியாகவாவது அதிகரிக்கப் படவேண்டுமென்று கே. டி. ராஜு கோரினார்.

கீழ் பவானி திட்ட விவசாயிகளுக்கு குடோன் வசதிகள், விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க உதவவேண்டுமென்றார். ஏழை விதவைகளுக்குப் பசுக்கள் வாங்கக் கடன் தரவேண்டும் என்றார்.

கூட்டுறவு சங்கங்கள் ஊழல்கள் பற்றியும் அவற்றை அகற்ற வேண்டித் தீவிர நடவடிக்கைகள் கோரியும் பலர் பேசினர். மந்திரி ஏ. பி. ஷெட்டி பதிலளித்தார். பசுக்கள் வாங்கி பால்விற்று கவுரவமாக வாழ்க்கை நடத்த விதவைகளுக்கு கடன் உதவப்படும் என்றார்.

### சர்க்காரின் காட்டிலாகாவிற்கு

ராஜ்யப் பரப்பில் 14 சதவிகிதமே காடுகள் உள்ள இங்கு காடுகள் வளர்ப்பதற்கான முயற்சிகளை மந்திரி பக்தவத்சலம் வர்ணித்தார்.

தனியார் காடுகளை தேசிமாக்க வேண்டும். எனவும் மரங்களைப் பற்றி ஆராய்ச்சி வேண்டுமென்றும் வனமஹோத்சவம் திட்டமிட்டு நடத்தப்பட வேண்டுமென்றும் டி. சீ நாராயணன் நம்பியார் கூறினார்.

வேதாரண்யத்தில் காடு வளர்த்து வெள்ளத்தைத் தடுக்கவும் விறகு கிடைக்கவும் வழி வகை செய்யவேண்டும் என்று எஸ். ராமலிங்கம் கேட்டுக்கொண்டார்.

---

## வியூர் சிறையில்

## தோழர் சி. ஏ. பாலனுடன் பேட்டி

தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு, மக்கள் கிளர்ச்சியால் ஆயுள் தண்டனைக் கைதியாக 6 வருடங்களாக சிறையில் வாடும் திருப்பூர் தொழிலாளர் தலைவர் தோழர் சி. ஏ. பாலனை, திருப்பூர் மில் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் ஏ. கணபதி அவர்கள் 16-1-56ல் கொச்சியிலுள்ள திருச்சூர் வியூர் ஜெயிலில் பேட்டி கண்டார். அவர் கூறுவதாவது:



"சி ஏ. பாலனை நாங்கள் நேரில் பார்க்கப் போகும் சமயத்தில் அவர் வாதநோயினால், ஆயுர்வேத வைத்திய சாலையில் இருந்தார். அவரை நானும், ஆபீஸ் காரியதரிசி ஜோஸப்பும், ஆர். காளியப்பனும் நேரில் பார்த்தோம். அப்பொழுது அவர் வாத நோயினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். அவரைப் பார்க்க மன வேதனை தாங்க முடியவில்லை. எங்கள் கண்களில் கண்ணீர் குபுகுபுவென வந்து விட்டது. அப்பொழுது அவர் எங்களுக்கு ஆறுதல் கூறியதோடு, "தொழிலாளர்களும், பொது மக்களும் தூக்கு தண்டனையிலிருந்து என்னை விடுதலை செய்தார்கள். அடுத்தபடியாக என்னை விடுதலை செய்து வெளியில் கொண்டுவரவும் நடவடிக்கை எடுப்பார்கள். நான் வந்து மீண்டும் சேவை செய்வது மக்களின் கையில்தான் இருக்கிறது. என்னை விடுவிக்கவும், வாதநோயைக் குணப்படுத்தவும், சேவை செய்வதற்குரிய வாய்ப்பைக் கொடுப்பதும் தொழிலாளி, விவசாயி, பொது மக்களுடைய கிளர்ச்சியைப் பொருத்துத்தான் இருக்கிறது.

எனது நன்றியை தமிழ் மக்களுக்கும், கேரள மக்களுக்கும் தெரிவியுங்கள்! தூக்கு தண்டனையை ரத்துசெய்ய அவர்கள் நடத்திய கிளர்ச்சியை என்றுமே மறவேன்" என்றார்.

அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று 8-3-56-ல் திருப்பூரில் என். கருப்பணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## கட்சி மகாநாடுகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களை முன் வைத்த பிறகு தீர்மானம் ஏற்கப்பட்டது.

மாகாணக் கமிட்டிச் செயலாளர் தோழர் என் எல். உபாத்யாயா சமர்ப்பித்த அறிக்கையும் விவாதிக்கப்பட்டது. கட்சி நடத்திய இயக்கங்கள் கட்சி உறுப்பினர் தொகை இருமடங்காகியுள்ள விபரம் கட்சியின் செல்வாக்கில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி இவை அறிக்கையில் ஸ்தூலமாக்கப்பட்டன.

விவசாயிகள் நிலை, தொழிற்சங்கப் பிரச்சினைகள், கோவா முதலியவை பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர்கள் என். எல் உபாத்யாயா, பி. வி. கக்கிலியா, எம். ஸி. நரஸிம்மன், எம். எஸ். கிருஷ்ணன், என். கே. உபாத்யாயா. சி. பி. பொன்னையா, டி. கே கங்கி ரெட்டி முதலியோரடங்கிய மாகாணக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் என். எல். உபாத்தியாயா காரியதரிசியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கட்சிக் காங்கிரஸிற்கு ஐந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 26-ந் தேதி ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. என். எல். உபாத்தியாயா தலைமை வகித்தார். தோழர் பி. ராமமூர்த்தி பேசினார்.

---

## டல்லஸும் ஹிட்லரும்

### கராச்சியில் ஒட்டகங்களின் வரவேற்பு

ஸீட்டோ மகாநாட்டுக்காக பாகிஸ்தானுக்கு டல்லஸ் வந்தபோது, கராச்சி விமான நிலையத்திலிருந்து கராச்சி நகரம் வரையிலும் வரவேற்புக்காக 100 ஒட்டகங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றின் கழுத்தில் "டல்லஸே வருக! வருக!" என்று போர்டுகள் மாட்டப்பட்டிருந்தன. ஆனால்...

டல்லஸ் விமானத்திலிருந்து இறங்கி காரில் பவனி வரும்போது திடீரென்று எல்லா போர்டுகளும் மாற்றப்பட்டன. அவற்றில் டல்லஸே வருக வருக என்பதற்குப் பதிலாக, "ஏ, ஹிட்லரே வருக! வருக!" என்ற கோஷங்கள் காணப்பட்டன. இது ஒரு எக்கச்சக்கமான நிலைமையை ஏற்படுத்தி விட்டது.

—பிளிட்ஸ்.

# நியாயவார சட்டத்தில் நீதிகிடைக்க

## அளந்த நெல்லுக்கு ரசீது வாங்குங்கள்

## நெல்லை ஜில்லா வழி காட்டுகிறது!

சென்ற வருடம் சென்னை அரசாங்கம் குடிவாரதார் பாதுகாப்புச் சட்டம் ஒன்று கொண்டுவந்தது. அதைத் தொடர்ந்து நியாய வாரச் சட்டம் ஒன்றும் கொண்டு வரப்பட்டு பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. இவ்வித சட்டங்கள் கொண்டுவரப்படுவதை முன்கூட்டியே சென்னை அரசாங்கம் அறிவித்ததை யொட்டி, நிலச்சுவான்தார்கள் தாங்களே சொந்தப் பயிர் செய்து வருவதாகவும், பண்ணைமுறை மூலம் விவசாயம் செய்யப்போவதாகவும் கூறி விவசாயிகளை வெளியேற்ற பெரும் முயற்சி செய்தார்கள், போலி தஸ்தாவேஜிகளும் தயாரிக்க ஆரம்பித்தார்கள். எதிர் அடவோலை முறையும், பெற்றுக்கொண்ட நெல்லுக்கு ரசீது கொடுக்கும் முறையும் இல்லாத காரணத்தால் விவசாயிகள் தாங்கள் பயிர் செய்ததாக நிரூபிப்பதற்கு எவ்வித 'தஸ்தாவேஜு'மில்லை. இந்நிலைமைகளை முன்கூட்டியே அறிந்த ஜில்லா விவசாயிகள் சங்கம் 5-12-55 கூடிய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் இந்தப் பிசான அறுவடையில் ரசீது வாங்காமல் எந்த நிலச்சுவானுக்கும் நெல் அளக்கக்கூடாது என விவசாயிகளை உஷாராயிருக்கும்படி வேண்டியது. அளந்த நெல்லுக்கு ரசீது பெறுவதோடு, ஆங்காங்குள்ள ஸ்தல நிலைமைகளுக்கேற்ப வார உயர்வு, பாட்டக் குறைப்பு பெறுவதற்கான இயக்கங்களைத் தாலூகா சங்கங்கள் திட்டமிட்டுச் செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### இயக்கம் பரவியது

இந்த முடிவை நிறைவேற்றும் முறையில் அம்பைத் தாலூகா விவசாயிகள் சங்கம் அறுவடை ஆரம்பிப்பதற்கு முன்பு தயாரிப்பு வேலைகளைச் செய்யத் தொடங்கியது. வார உயர்வு, பாட்டக் குறைப்பு, அளந்த நெல்லுக்கு ரசீது கோரிக்கைகளைப் பற்றி விளக்கி விவசாயிகளுக்கு நோட்டீஸ்களை கொடுத்ததோடு, கிராமம் கிராமமாக பிரச்சாரக் கூட்டங்கள் போட்டு விவசாயிகளையும் ஒன்றுதிரட்டியது.

அம்பைத் தாலூகாவில் மொத்தத்தில் சுமார் 20 கிராமங்களில் பாட்டக்குறைப்பு, வார உயர்வு, அளந்த நெல்லுக்கு ரசீதுபெறும் இயக்கம் பரவியது. மேலும் இயக்கம் விரிவடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆம்பூர் வட்டாரத்தில் சேமாதேவி ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் முன்னிலையில் 8 மரக்கால் 4 படி வாரம், வண்டிச் சத்தம், போர்க்கட்டு, கங்காணம், காவல் கிடையாதென்றும், அளந்த நெல்லுக்கு ரசீது கொடுக்க வேண்டும் எனவும், விவசாயிக்கு இஷ்டப்பட்ட ஆள்தான் களத்தில் நெல் அளக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தையும் சீர்குலைக்க நிலச்சுவான்தார்கள் முயற்சிக்கின்றனர். ஆம்பூர் வட்டார விவசாயிகள் சங்கம் ஆர்.டி.ஓ. முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமுலாக்க விவசாயிகளை ஒன்றுதிரட்டிக்கொண்டிருக்கிறது. விவசாயிகளின் ஒற்றுமைப் பலத்தைக் கண்ட நிலச்சுவான்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர். அளந்த நெல்லுக்கு ரசீது கொடுத்த நிலச்சுவான் மூன்றுவது பயிர் உழுந்து விதைக்கக் கூடாதென விவசாயிகளைத் தடுத்தார் என்ருலும் ஆண் பெண்கள் 300 பேர் 35 ஏர்களுடன் ஊர்வலமாக வயலுக்குச் சென்று உழுந்து விதைத்து வீடு திரும்பினர்.

### ரசீதுண்டு - சில்லரை வசூல் இல்லை

பாப்பாங்குளத்தில் விவசாய சங்கத்திற்கும், நிலச்சுவான்தார்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதன்படி 9 மரக்கால் 4 படி வார விவசாயிக்கும், 11 மரக்கால் 4 படி நிலச்சுவான்தாருக்குமாக பிரித்துக்கொள்வது என்றும், அளந்த நெல்லுக்கு ரசீது கொடுக்க வேண்டுமென்றும், வேறு எந்த சில்லரை வசூல்களும் கிடையாதென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்பின் ஸ்ரீ ஆனையப்பப் பிள்ளை, பெரிய பிள்ளை என்ற இரு நிலச்சுவான்தார்களும் விவசாயிக்கு 10 மரக்கால் வாரம் தருவதாகவும், அடையோலைப் பத்திரத்தில் அளந்த நெல்லுக்கு வரவு எழுதிக்கொடுப்பதாகவும், பேராமணி என்ற கிராம விவசாயிகளுக்கு தனது வயலிலுள்ள குடிதண்ணீர் கிணற்றுக்குச் செல்வதற்கான பாதையும் போட்டு மேற்படி நிலச்சுவான்தார் ஸ்ரீ ஆனையப்ப பிள்ளையே தனது சொந்த நிலத்தில் உள்ள கிணற்றை சர்வ சுதந்திர பாத்தியமாக கிராம விவசாய மக்கள் அனுபவிக்க பத்திரம் எழுதிக் கொடுப்பதாகவும் வாக்களித்துள்ளார்.

சென்ற வருடம் போராட்டம் நடத்தி 8 மரக்கால் ½ படி என வாரம் வாங்கப்பட்டது;

கோடாரங்குளம்: திருவாடுதுறை மடத்துக் குத்தகைதார், குத்தகையில் கோட்டைக்கு ⅛ கோட்டை தள்ளிக்கொடுப்பதாகவும், அளந்த நெல்லுக்கு ரசீது கொடுத்துவிடுவதாயும், தரிசுநிலமனைத்தையும் விவசாயிகள் மேய்ச்சல் தரையாக உடயோகித்துக்கொள்ளலாம் எனவும் சங்கத்திடம் ஒப்பந்தம் செய்துள்ளார்.

பிரமதேசம், மன்னார்கோவில், வாகைகுளம், அடைச்சாணி, இடைசால், பள்ளக்கால், பொதுக்குடி, சிவந்திபுரம், சிங்கை முதலிய இடங்களில் பாட்டக் குறைப்பும், வார உயர்வும், அளந்த நெல்லுக்கு ரசீதும் விவசாயிகள் பெற்று வருகிருர்கள். மேலே கண்ட கிராமங்களில் சில நிலச்சுவான்தார்கள், குத்தகைதார்கள் சமீபகாலங்களில் காங்கிரஸ் பிரமுகர்கள் என்று கடுகை கொள்பவர்கள் விவசாயிகளின் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ள மறுத்து அடம் செய்கிருர்கள். விவசாயிகள் நெல்லை களத்தில் அம்பாரமாக குவித்து வைத்துக்கொண்டு, கோரிக்கைகளைப் பெற ஸ்தாபன ரீதியாக உறுதியுடன் போராடிக் கொண்டிருக்கிருர்கள்.

சென்றமாத இறுதியில் செங்குளம், கபாலிபாரை, வழுதூர், ரெங்கசமுத்திரம், கிராமங்களிலும் விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப்பட்டு வார உயர்வு, பாட்டக்குறைப்பு, குறிப்பாக அளந்த நெல்லையும் ரசீது பெறுவதற்கான இயக்கத்தை ஒன்றுபட்டு நடத்துகிருர்கள்.

நாங்குனேரி தாலுக்காவில் நாங்குனேரி ஜீயருக்குச் சொந்தமான மலையடிப்புதூரில் குருணி விதைப்பாடுக்கு (8 செண்டுக்கு) 1½ மரக்கால் பாட்டக்குறைவும், மிகவும் பாதிக்கப்பட்டு பயிருக்கு நேரடியாகப் பார்த்து பாட்டக் குறைவு செய்வதென்றும் ஒப்பந்தம் நடைபெற்றுள்ளது. இத்தாலுக்காவில், திருக்குறுங்குடி வட்டாரத்தில் தீர்வுகளுக்கு குத்தகை வஜாவும் பாட்டக் குறைப்புக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட இடங்களில் சென்ற பல வருடங்களாகவே அளந்த நெல்லுக்கு ரசீது வாங்கப்படுகிறது. சில்லரை வசூல்களும் பல வருடங்களுக்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டன. இனும் ஆலங்குளத்தில் விவசாயிகள் கோரிக்கைகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர். நாங்குனேரி ஜீயர் ஏஜண்டு தோத்தாத்திரி அய்யங்காரும் மானேஜர் சங்கரய்யரும் 27–2–56 இரவு 7 மணிக்கு. விவசாயிகள் வாய்தாவுக்கு நாங்குனேரி சென்று திரும்புகையில் பல அடியாட்களை ஏவி பயங்கர ஆயுதங்களிஞல் தாக்கச் செய்தார்கள். இரண்டு விவசாயிகள் பலத்த காயங்களுடன் நாங்குனேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிட்சை பெற்று வருகிருர்கள் அன்று இரவு 2 மணிக்கு விவசாயியின் வீட்டிலும் மேற்படி அடியாட்கள் தீ வைத்தனர். இச்சம்பவங்களனைத்திற்கும் நாங்குனேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வரதாச்சாரி உடந்தை என விவசாயிகள் கூறுகிருர்கள். சென்ற பல மாதங்களாகவே மேற்படி ஜீயர் மடத்து அடியாட்கள் விவசாயிகளைப் பலவகையில் துன்புறுத்துவதை போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு புகார் செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஜீயரின் ஏஜண்டும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கூட்டாக சேர்ந்து விவசாயிகளை தாக்குவது பற்றி ஜில்லா போலீஸ் சூப்பிரண்டுக்கும், மதுரை டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் மகஜர்கள் அனுப்பியதுடன், சென்னை முதன் மந்திரியிடமும் நேரில் சொல்லப்பட்டிருக்கிறது.

காரியதரிசி,
ஜில்லா விவசாயிகள் சங்கம்,
திருநெல்வேலி.

## தமிழ் நாடு விவசாயிகள் சங்க மகாநாடு

### முசிரியில் நடக்த மும்முரமான ஏற்பாடுகள்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தமிழகத்திலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் கடந்த சுமார் 13 ஆண்டுகளாக விவசாயிகளின் நல உரிமைகளுக்காக மட்டுமல்ல சகல பகுதி ஜனநாயக இயக்கங்களின் உரிமைகளுக்காகவும். தேசவிடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதி இயக்கமாகவும், தனது வளர் நாட்களில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலைக்காகவும் தேசத்தின் பூரண அரசியல் உரிமைகளுக்காகவும், நிலப்பிரபுத்துவக் கொடுமைகளை எதிர்த்தும், அடிப்படை நிலசீர்திருத்தம் கோரியும் ஜமீன்-இனும் அமைப்புகளை எதிர்த்தும், லேவாதேவிக்காரர்களின் அனியாயச் சுரண்டல் முறைகளை எதிர்த்தும்; காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டபின் அதன் ஜனவிரோதக் கொள்கைகளை எதிர்த்தும் நல்ல காரியங்களை ஆதரித்தும், பிரஜா உரிமைகளை ஆதரித்தும், தொழிலாளர்–மற்றும் வெகுஜனங்களின் கோரிக்கைகளை ஆதரித்தும் யுத்த வெறியர்களை எதிர்த்து சமாதானத்திற்காகவும் செயலாற்றி வந்துள்ளது. இத்தகைய வேலை முறைகளில் விவசாயிகளுக்கு உடனடியாக குத்தகைக் குறைப்பு–வார உயர்வு போன்ற பிரதான லட்சியங்களை ஆளும் வர்க்கத்தினர் அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ளும்படி செய்திருக்கிறது.

த. வி. ச. மகாநாட்டை முசிரியில் வது என்று வரவேற்புக் கமிட்டி ஏகமனதாக ஏற்றுக்கொண்டு—மகாநாடு நடத்துவதற்கு 500 தொண்டர்களும் (நிரந்தர படையாக்க), 50,000 மக்களைத் திரட்டுவதும், ரூ. 10,000 வசூலிப்பது என்று கணக்குப் போட்டது. ஆனல், நடைமுறை நடவடிக்கைகளின் அனுபவங்கள் எதிர்பார்த்ததையும் தாண்டிச் செல்லுகின்றன. இதுவரை, குணசீலம், மஞ்சக்கோரை, கல்லூர், ஆமூர், மணப்பாளையம், வெள்ளூர், சுண்டக்காய், உமையபுரம் ஆகிய (முசிரி தாலூக்காவில் ஒரு பகுதி மட்டும் கொண்ட) கிராமங்களில் 204 தொண்டர்கள் சேர்ந்து விட்டனர். ஜில்லாவின் எல்லா கிளைகளும் தயாராகுகிறது (1,000 எதிர்பார்க்கிரேம்). மகாநாடு கோட்டா முசிரி தாலூக்கா 6,000, லால்குடி தாலூகா 1,000, திருச்சி தாலூகா 1,000, கரூர் தாலூகா 250, (மணப்பாரை, குளித்தலை) தாலூகா 750, புதுக்கோட்டை ஏரியா 500, திருச்சி டவுன், இதர வெகுஜன ஸ்தாபனங்கள், தனி நபர் முதலிய பகுதிகளில் 2,000—மொத்தம் 11,500. இவ்வாறு நிச்சயம் வசூலிக்க முடியும் என்று சபதமேற்று வேலைகள் ஜரூராக நடந்துவருகின்றன.

கடைசி நாள் பொது மகாநாட்டில் கலந்துகொள்ள 50 மைல் தூரங்களிலிருந்து விவசாயிகள், தொழிலாளர்கள், வெகுஜன இயக்கத்தின் தங்கள் ஸ்தாபனங்களின் கொடிகள், பாவட்டாக்களுடனும், கிராம வாத்தியங்கள் சகிதமாக வண்டிகள், சைக்கிள், கால்நடை முதலிய உருவங்களில் பல்வேறு தாலூக்காக்களிலிருந்தும், பல ஊர்வலங்கள் வருவதற்கு தயாராகிக்கொண்டிருக்கின்றனர். இந்த நோக்குடன் ஒரு லட்சம் மக்களைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றன.

### பிரண்டைக்குளம்

## இனும் விவசாயிகள் கைது

### ஹைகோர்ட் உத்தரவும் சப்-இன்ஸ்பெக்டர் தர்பாரும்!

அருப்புக்கோட்டைத் தாலூகா பிரண்டைக்குளம் இனும் கிராம விவசாயிகளுக்குச் சாதகமாக ட்ரிபியூனல் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து இனும்தார் வழக்குத் தொடர்ந்தார். "கேஸ் முடியும் வரை நிலத்தில் பிரவேசிக்க இனும்தாரை அனுமதிக்கக் கூடாது" என்று விவசாயிகள் ஹைகோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர். ஹைக்கோர்ட் அளித்த தீர்ப்பில், "வருஷம் ரூ. 700 டிபாசிட் கட்டவேண்டும்" என்று விவசாயிகளுக்கு உத்திரவிட்டது. அதன்படி பணம் கட்டினர்கள்.

இந்த அறுவடைக்காலம் சமீபித்துவிடவே, அறுவடை செய்யாதபடி விவசாயிகளைத் தடுக்க, நரிக்குடி சப்-இன்ஸ்பெக்டர் சீனிவாச நாயுடு மூலம் இனும்தார் ஏற்பாடு செய்தார். அறுவடையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீது 144 தடை உத்திரவு பெற்று அத்துமீறிப் பிரவேசித்தார்கள் என்ற காரணம் காட்டி 18–2–56 அன்று சப்-இன்ஸ்பெக்டர், 5 பெண்களையும், 3 கைக்குழந்தைகளையும், 7 ஆண்களையும் கைது செய்து அருப்புக்கோட்டை சப்-ஜெயிலில் ரிமாண்ட் செய்தார்.

தக்க தருணம் வாய்த்ததென்று விளைச்சலை இனும்தார் கொண்டு போய்விட்டார்.

சப்இன்ஸ்பெக்டரின் சேவைக்கு அன்பளிப்பாக 9 மூடை உயர்ரகச் சம்பா நெல்லை இனும்தார் கொடுத்திருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறதென்று விவசாயிகள் சொல்லுகிருர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியும், விவசாய சங்கமும் விவசாயிகளை நிபந்தனை பெயிலில் வெளியே எடுத்திருக்கிறது. "அறுவடையாகிக் கொண்டிருக்கும் பிரண்டைக் குளத்துக்குப் போகக்கூடாது" என்ற நிபந்தனையின்பேரில் விடுவிக்கப்பட்டிருக்கிருர்கள்.

## யாருடைய நிலம்?

### எட்டயபுரம் ஜமீன்தாரை எதிர்த்து ஆத்திக்கிணறு விவசாயிகள் கோரிக்கை

கோவில்பட்டித் தாலூகா ஆத்திக்கிணறு கிராமத்தில் சுமார் 300 ஏகர் நிலத்தை எட்டயபுரம் ஜமீன்தார், தன்னுடைய பண்ணை நிலம் என்று கூறி, உரிமையை ஸ்தாபிக்க தூத்துக்குடி சப் கோர்ட்டில் ஒரு வழக்கு தொடுத்திருக்கிருர்.

ஆனல் ஆத்திக்கிணறு விவசாயிகள், "இந்த நிலம் சர்க்காருடைய புறம்போக்கு நிலமாதலால் அதை நிரூபிக்க, சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளை சர்க்கார் விவசாயிகளுக்குக் கொடுத்து உதவவேண்டுமென்றும், சர்க்காரும் இதில் ஒரு கட்சியாகச் சேர்ந்து ஜமீன்தாரை எதிர்க்கவேண்டுமென்றும் கோரியுள்ளார்கள்.

இதுபற்றிய மகஜர்களை, எதிர்க்கட்சித் தலைவர். பி. ராமமூர்த்தியும், நெல்லை ஜில்லா விவசாய சங்கப் பொருளாளர் தோழர் பாலவிநாயகமும் மார்ச் 8, 9 தேதிகளில் ரெவினியூ மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலரையும், இதர ரெவினியூ இலாகா அதிகாரிகளையும், எஸ்டேட் செட்டில்மெண்ட் கமிஷனரையும் பார்த்து சமர்ப்பித்தார்கள்.

சென்னை ஹைக் கோர்ட்டில் ஜமீன்தாருக்கு எதிராக, சர்க்காரும் ஒரு கட்சியாக இருந்து வாதாடுவதற்கு,ஏற்கெனவே தக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக எஸ்டேட் செட்டில்மெண்ட் கமிஷனர் தெரிவித்தார்.

மேலும், தூத்துக்குடி சப் கோர்ட்டில் ஜமீன்தார் தொடுத்திருக்கும் வழக்கிலும், சர்க்காரை ஒரு கட்சியாகச் சேர்ப்பதற்கு, ஜில்லா கலெக்டரின் பதில் வந்தவுடன் நடவடிக்கை எடுப்பதாக மந்திரியும் அதிகாரிகளும் வாக்களித்துள்ளனர்.

## சின்னூர் விவசாயிகளும் எட்டயபுரம் ஜமீன்தாரும்

கோவில்பட்டி தாலுக்கா சின்னூர் கிராமத்தில், விவசாயிகள் அனுபவித்துவரும் ஜமீன் பண்ணை நிலத்தை, ஆறுமுகம் பிள்ளை, அவர் மகன் கர்ணம் சங்கரலிங்கப் பிள்ளை, மாவிலோடை கிருஷ்ண நாடார் வகையரு முதலியவர்களைக் கையில் போட்டுக்கொண்டு, எட்டயபுரம் ஜமீன்தார் சுமார் 42 ஏக்கர் நிலத்தை விற்று, விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்ற முன்வந்திருக்கிருர். விவசாயிகள் இதை வன்மையாகக் கண்டித்துக் கிளர்ச்சிசெய்து வருகிருர்கள்.

# சர்க்கார் கொள்கை மாறவேண்டும்

# தொழிலாளருக்கு நியாயம் கிடைக்கவேண்டும்

ரயில்வே பட்ஜெட்டைப் பற்றி **'நியூ ஏஜ்'** வாரப்பத்திரிகையில் தோழர் **கே. அனந்த நம்பியார் எம். பி.,** எழுதியுள்ள கட்டுரையின் சாரத்தைக் கீழே தருகிறோம்:

**1956** ஏப்ரல் 1ந் தேதி முதல் புதிய வரவு செலவுத் திட்ட ஆண்டு ஆரம்பமாகிறது. ரயில்வேத் துறையும் தனக்கு நிர்ணயிக்கப்பெற்றுள்ள ரூ. 1125 கோடியுடன் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் பிரவேசிக்கிறது.

ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்த நிதி போதாது என்றும், முடியுமானல் துண்டு விழுவதை ரயில்வேயின் சொந்தச் செல்வாதாரத்திலிருந்து எடுத்துச் சரிக்கட்டலாம் என்றும், ரயில்வே மந்திரி கூறித் தமது பட்ஜெட்டை சமர்ப்பித்தார்.

அடுத்த திட்டவேலைகளின் மூலம் ஏற்படும் நிலைமைகளுக்கு ஏற்ப பிரயாணிகளை ஏற்றிச் செல்வது சமான்களை ஏற்றிச்செல்வது என்ற விஷயத்தில் ரயில்வேக்கள் முழுப் பொறுப்பையும் அமுல் நடத்த முடியாது என்று எச்சரித்தார். வருடந்தோறும் ஆறு சத விகிதம் அதிகரித்துவரும் பிரயாணிகள் தொகையில் பாதியைத்தான் (மூன்று சத விகிதம்) ஏற்றிச் செல்ல முடியும்—சாமான் விஷயத்தில் 180 லட்சம் டன் அளவு குறைத்தே ஏற்றிச் செல்ல முடியும், என்பதை ஒப்புக்கொண்டார்.

ரயில்வேயின் ஏற்றிச் செல்லும் சக்தி ஐந்தாண்டுகளுக்குள் ஐம்பது சதவிகிதம் அதிகரிக்கவேண்டும் என்று கடந்த பட்ஜெட் விவாதத்தில் மந்திரி கூறியிருக்கிருர். ஆனல் இப்போது ரூ.355கோடிநிதி குறைக்கப்பட்டிருக்கிறது; 3000 மைல்களுக்குப் புதிய ரயில்பாதை போடத் திட்டமிடப்பட்டிருக்கிறது; 1000 மைல்களுக்கு இரட்டைப் பாதை போடமுடிவு செய்யப்பட்டிருக்கிறது, 300 மைல்களுக்கு மின்சார ரயில் விஸ்தரிக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. எனவே அதைர்யப்படாமல் நிதிகிடைக்கக் கிடைக்க எல்லைக்கோட்டை எட்டலாம் என்ற நம்பிக்கையுடன் இருக்குமாறு மந்திரி வேண்டுதல் செய்கிருர்.

### திட்டகர்த்தாக்கள் மீது குற்றமில்லை

இதையெல்லாம் பார்த்தால் திட்டக் கமிஷன் ஏதோ சதி செய்து மேலதிகமாக ரூ. 355 கோடியைத் தர மறுத்தது போலத் தோற்றும். ஆனல் உண்மையில் திட்டத்திற்காக மொத்தத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 4800 கோடியில் போக்கு வரத்துத் துறைக்கு மட்டுமே 29 சத விகிதம் கிடைக்கிறது. தொழில் வளர்ச்சி உலோக உற்பத்திக்கு 19 சதவிகிதம்தான்.

யுத்தத்தின் விளைவாக போக்கு வரத்துக்கள் சர்வநாசமாக்கப்பட்ட நாடுகளில்கூட இத்தனை பெரிய விகிதத்தில் ரயில்வேக்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் மூலதனச்செலவு ரூ. 900 கோடி. அடுத்த ஐந்தாண்டுகளில் மேலும் ரூ. 680 கோடி மூலதனச் செலவாகும். இன்று அமுலில் உள்ள மூலதனத்தில் இது 75 சத விகிதம். என்ருலும் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதில் 15 சத விகிதமும் சாமான்களை ஏற்றிச் செல்வதில் 35 சத விகிதமும்தான் அபிவிருத்தி ஏற்படப்போகிறது.

இதைத் தவிர ரயில்வே இலாகாவில் சேமிக்கப்படும் சகல பணங்களும் இதில் ஈடுபடுத்தப்படும்; தேய்மான நிதிகள் இதில் வந்து பாயும். அபிவிருத்தி நிதியிலிருந்து ரூ. 92 கோடி எடுக்கப்படும்.

### மூன்ரும் வகுப்பு பிரயாணிகள் துயரம்

மூன்ரும் வகுப்புப் பிரயாணிகள் இட நெருக்கடியாலும் வேறு பல தொல்லைகளாலும் இன்னும் துயரப்படுகிருர்கள். இரண்டே வகுப்புகள் என்று மாறுதல்கள் செய்வதால் இந்தக்கஷ்டம் குறையப் போவதில்லை. ரூ. 1125 கோடி செலவழித்தும் பிரயாணம் செய்யும் சாமான்ய மக்கள் பயனடைய வழியில்லை.

தொழிலாளர்களை எடுத்துக் கொள்வோம். சிப்பந்திகளின் உபகார நிதிக்கு வருடம் ஒரு ரூபாய் அதிகமாக ஒதுக்குவதைத் தவிர, ஊழியர்களின் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளங்கள் சில அனுமதிப்பதைத் தவிர, காசரோகிகளுக்குரிய படுக்கைகளை அதிகரித்து மொத்தம் 395 படுக்கைகளுக்கு வசதி செய்வதைத் தவிர வேறு உருப்படியான சலுகைகள் எதுவுமில்லை.

சம்பள விகிதங்களை மீண்டும் புதிய ரீதியில் நிர்ணயம் செய்வார்; குறைந்தபட்சம் ஒரு சம்பள கமிஷனையாவது நியமி[illegible] செய்வார்; ஓர் இடைக்கால உதவிக்கு ஏற்பாடு செய்வார் என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்தனர். பத்து லட்சம் ரயில்வேத் தொழிலாளர்கள் இதை எதிர்பார்க்க உரிமையுண்டு. ஆனல் அவர்கள் ஏமாற்றமடைய நேர்ந்தது.

1947ல் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டது முதல், ஏற்பட்ட சிக்கல்கள் பல. மீண்டும் புதிதாக சம்பள நிர்ணயம் செய்ய வேண்டும்; முழுப் பஞ்சப்படியை சம்பளத்துடன் இணைக்கவேண்டும் என்ற கிளர்ச்சி நடைபெற்று வருகிறது.

### லாபமும் ஊதியமும்

1948 முதல் ரயில்வேயின் மொத்த வருமானம் ரூ. 80 கோடிக்குமேலதிகரித் திருக்கிறது. அதாவது 37 சதவிகிதம் அதிகம். தேசியமாக்கப்பட்ட ஒரு தொழிலில் தேய்மானம், மூலதனத்திற்குரிய பங்கு இவற்றை நியாயமாகக் கொடுத்ததுபோக மீதியாகும் லாபத்தில் தொழிலாளர் பங்கு கோருவது நியாயமே. இதர தொழில்களில் தொழிலாளருக்குக் கிடைக்கும் போனஸ் ரயில்வேத் தொழிலாளருக்கு மறுக்கப்படுகிறது.

தேய்மானம் என்ற இனத்தில் 1954ல் ரூ. 35 கோடியும் இந்த பட்ஜெட்டில் ரூ. 40 கோடியுமாக உயர்த்தப்பட்டுள்ளது. மூலதனத்திற்குரிய பங்கு 4 சதவிகிதம் அதாவது ரூ. 36 கோடியாகும். இதுதவிர வருடாந்திர உபரிநிதியிலிருந்து பொதுநிதிக்கு அளிக்கப்படுகிறது.

இவை அல்லாமல் ரயில்வேக்களுக்கு ரிசர்வ் (சேமிப்பு) நிதியாக ரூ. 166 கோடி யிருக்கிறது.

இந்தப் பெருந்தொகை ரயில்வேத் தொழிலாளர் இரத்தத்தை வியர்வையாக்கித் திரட்டிய லாபமாகும். எனவே தொழிலாளர் வருமானத்தை உயர்த்துக! பிரயாணிகளுக்கு அதிக வசதிகள் செய்க! என்று கோருவது நியாயமல்லவா!

உழைப்பாளிகளுக்கு உற்சாக மூட்டவேண்டாமா? இல்லையேல் உற்பத்தி பாதிக்கப்படாதா? இன்றுள்ள லாபம் தேய்ந்துவிடாதா? இந்த சர்வ சாதாரண யதார்த்தத்தை மந்திரி காண மறுக்கிருர்.

இதுமட்டுமா! விலைவாசிகள் உயர்வாலும், பற்ருக்குறை நிதி நிலைமையால் ஏற்படும் காரணங்களாலும் வாங்கும் சம்பளத்தின் மதிப்பும் குறைகிறது. ரயில்வேக்கு லாபந் தேட உழைத்தவன் திண்டாடுகிருன்.

முதல்திட்ட காலத்தில் ரயில்வே தொழிலாளர் ஊதியத்தைப் பார்ப்போம். அதிகாரிகள் உட்பட 9,23,069 பேர்களுக்கு 1951–52ல் ஊதியமாகக் கிடைத்துள்ளது 121 கோடியே 71 லட்சம் ரூபாய், 1954–55 திட்டமுடிவு காலத்தில் 9,80,211 தொழிலாளருக்கு அளிக்கப்பட்ட ஊதியம் 140 கோடியே 22 லட்சம் ரூபாய். 57,142 பேர் அதிகமாகியிருக்கிருர்கள். சம்பளச் செலவு 18 கோடியே 51 லட்சம் ரூபாய் அதிகரித்திருக்கிறது.

இவை எல்லாமிருந்தும் ஒர்க்ஷாப் ஊழியர் தவிர உள்ள மூன்ரும் வகுப்பு ஊழியருக்கு சராசரி ரூ. 164, ஒர்க்ஷாப், கைத்தொழிலாளருக்கு ரூ. 136, நாலாம் வகுப்பு ஊழியருக்கு ரூ. 78 (சகல படிகளும் உட்பட)தான் கிடைக்கிறது.

ரயில்வே அபிவிருத்திக்கே நிதி இல்லை[illegible], போதாதே! இந்தப் புதிய [illegible]ரிக்கைகளை எப்படிச் சமாளிப்பது என்று கேள்வி எழுகிறது.

### நிதிக்கு வழியுண்டு

நாடு முற்றிலும் பரந்து பரவியுள்ள பொதுத் துறையிலுள்ள ரயில்வேயை தொழிலாளிகளின் பரிபூர்ண ஒத்துழைப்பு இல்லாமல் அபிவிருத்தி செய்ய முடியாது. தொழிலாளர்களை உறிஞ்சி சுரண்டி அபிவிருத்திகளை நிறைவேற்றுதல் கூடாது.

தொழிலாளருக்குச் சம்பள உயர்வு அளித்தால் அதற்கு மிகப் பெரிய அளவு ஈடு செய்யும் வகையில் லட்சியக் கோடுகளை நிறைவேற்ற மனப்பூர்வமுடன் உழைப்பார்கள்.

ரயில்வே நிர்வாகத்தில் ஊழல்கள், பொருள்களை வீணுக்குதல், கண்ட்ராக்டர்கள் சூறை, திருட்டு இவற்ருல் பெருநஷ்டம் ஏற்படுகிறது. நம்பிக்கையுடன் தொழிலாளர் ஒத்துழைப்பைப் பெற்ருல் இவற்றைத் தவிர்க்க முடியும்.

தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சரியான கண்ணேட்டம் இல்லாத காரணத்தால் ரூ 432 கோடி 70 லட்சம் செலவழித்தும் முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் திருப்திகரமான சாதனைகள் காணேம்.

ஆனல் தொழிலாளர் விஷயத்தில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? ரயில்வேமென் பெடரேஷனையும் ஒவ்வொரு பிராந்தியத்திலுள்ள ரயில்வே தொழிலாளர் சங்கங்களையும் பிளவுபடுத்தி ஐ. என். டி. யூ. சி. சங்கங்களைத் திணிக்க முற்பட்டது சர்க்கார். நீண்டகாலத் தொழிற் சங்க அனுபவமுள்ள ஸ்ரீ எஸ். குருசாமியைக்கூட வெளியேற்றியது ஐ. என். டி. யூ. சி. தலைமை. வாஸவாதா கோஷ்டியை அங்கீகரித்ததன் மூலம் மிகப் பெரும்பாலான தொழிலாளரின் நம்பிக்கைக்கும் ஆதரவுக்கும் பாத்திரமான சங்கங்களை அங்கீகரிக்க மறுத்துள்ளது சர்க்கார்.

### தொழிற் சங்கங்களின் ஒத்துழைப்பு

ரயில்வேத் தொழிற் சங்கங்கள் தொழில் தகராறு சட்டத்தை அமுல் நடத்தக் கோர முடியாத படி விலக்கப்பட்டிருக்கின்றன. அடிப்படைத் தொழிற் சங்க உரிமையையே மறுப்பதாகும் இது. ரெயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரியின் இந்த முடிவை பொதுத்துறை பூராவும் பின்பற்றினல் உண்மையான தொழிற்சங்கங்கள் இயங்குவது என்பதே முடியாமற் போகும்.

உற்சாகமூட்டப்பட்ட தொழிலாளர் ஒத்துழைப்பின்றி அதிகார வர்க்க கட்டளைகளுடன் 'பழிவாங்குதல், அடக்குமுறைகளுடன் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலாளர்களை ஈடுபடுத்த நினைப்பது வெறுங்கனவேயாகும்.

எனவே, இந்த ரூ. 1125 கோடி செலவழிப்பதுடன், ரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றத்தையும் கவனிப்பது அவசியம். தொழிலாளர்கள் ஒத்துழைப்பைப் பெறுவதால் மிக அதிக விலையில் எஞ்சின்கள், ரயில் பெட்டிகள் வாங்க நமது அந்நியச் செலாவணியை விரயமாக்க வேண்டுவதில்லை. இருக்கும் என்சின்கள் வண்டிகளைப் பழுதுபார்த்து உபயோகிக்க வழியுண்டு. அதோடு தொழிலாளருக்கு நிர்வாகத்தில் கலந்து கொண்டு உழைக்க வாய்ப்பளிக்க வேண்டும். இதுவும் அரை மனது குறைமனதாக இன்றி மனப்பூர்வமாக இருத்தல் வேண்டும்.

பரீட்சார்த்தமாகச் சில ஒர்க்ஷாப்புகளில் இந்தக் கூட்டுக் கமிட்டிகள் நிறுவப்போவதாகக் கூறப்படுகிறது. சகல ஒர்க்ஷாப்களிலும் இவை அனுமதிக்கப்பட வேண்டும். சாமான்களுக்குரிய கட்டணங்களை உயர்த்தத் திட்டமிடப்படுவதை நிறுத்தவேண்டும். தொழிலாளர் ஒத்துழைப்பு விஷயத்தில் உண்மையிலேயே தொழிலாளர் நம்பிக்கையைப் பெற்ற தொழிற்சங்கங்கள் மூலமே இதை சாதிக்க முடியும்.

## தண்ணீர்! தண்ணீர்! தண்ணீர்!

### தூத்துக்குடியில் 5000 பேர் மகஜர்

தூத்துக்குடி 4-வது வார்டில், தண்ணீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிருர்கள். ஏற்கெனவே முனிசிபல் கவுன்ஸில் 3 தடவைகள் தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பியிருந்தும் கூட, சென்னை சர்க்காரின் சானிட்டரி இன்ஜினீயர் அனுமதி கொடுக்க தொடர்ச்சியாக மறுத்துவந்தார்.

இதன் பேரில், 4-வது வார்டு மக்கள் வரி கொடுப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தனர்.

உடனடியாக 4-வது வார்டுக்கு 5 குழாய்கள் அமைக்க, சானிட்டரி இன்ஜினீயர் அனுமதி கொடுக்க வேண்டுமென்று ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீ எஸ். எஸ். ராமசாமி படையாச்சி அவர்கள் உத்திரவிட வேண்டுமென்று, தூத்துக்குடி மக்கள் 5000 பேர் கையெழுத்திட்டு அனுப்பிய மகஜரை, கம்யூனிஸ்ட் தலைவர்கள் மணலி கந்தசாமி எம். எல். ஏ. யும், கட்சியின் நெல்லை ஜில்லா கமிட்டி மெம்பர் தோழர் பாலவிநாயகமும் 12–3–56ல் மந்திரியிடம் சமர்ப்பித்தனர்.

மந்திரி பதிலளிக்கையில், "சானிட்டரி இன்ஜினீயரைக் கேட்டு, துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகவும், கூடிய சீக்கிரம் தண்ணீர் வசதி செய்து தருவதாகவும்" வாக்களித்தார்.

### கடலூர் துறைமுக தொழிலாளர் குமுறல்

கடலூர் துறைமுகத் தொழிலாளர் சங்கக் கமிட்டிக் கூட்டம், தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அப்போது, "மூன்ருவது ஆண்டு விழாவில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட கோரிக்கை தீர்மானங்களுக்கு, முதலாளிகளும் லேபர் ஆபீஸர் லேபர் கமிஷனர் முதலிய அதிகாரிகளும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனல் கோரிக்கைகளைப் பெறுவதற்கு வேலைநிறுத்தம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று தீர்மானம் நிறைவேற்றி தயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கிருர்கள்.

மற்றும் எஸ். எஸ். ஜலப்பிரதாப் என்ற கப்பலில் சாமியார் என்ற தொழிலாளி வேலை செய்து கொண்டிருக்கும்போது, கப்பலில் விழுந்து அடிபட்டு இறந்து போனர். அவரது குடும்பத்தாருக்கு நஷ்டஈடு கொடுக்க முதலாளி அப்பாசாமி முதலியார் அண்டு சன்ஸ் மறுத்து வருகிருர்கள். இதனல் தொழிலாளர்களிடையே பெரும் ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது.



## கோதண்டராம் வீவிங் மில் தொழிலாளர் வெற்றி

### கிராஜுவிடி கிடைத்தது

மதுரை கோதண்டராம் வீவிங் மில்லை மூடி 40 நாட்களாக 160 தொழிலாளர்களைப் பட்டினி போட்டதல்லாமல், அவர்களுக்குச் சட்டப்படி கொடுக்கவேண்டிய கிராஜுவிட்டிப் பணமும் கொடுக்காமல் பிடிவாதம் செய்தார்கள் மில் நிர்வாகத்தினர். மானேஜ்மெண்டாரின் போக்கை எதிர்த்து 3-3-56 முதல் மில் தொழிலாளி ராமுத் தேவர் உண்ணுவிரதமிருந்தார். பின்னர் மதுரை லேபர் ஆபிஸர் தலையிட்டு 6–3–56-ல் மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்துக்கும் மானேஜ்மெண்டாருக்கும் பேச்சுவார்த்தை நடந்ததின் விளைவாக:

#### ரூ. 140 முதல் 1300 வரை

ஒவ்வொரு தொழிலாளருக்கும் 140 ரூபாய் முதல் 1300 வரை நஷ்டஈடு கிடைத்தது. அதன் பேரில் உண்ணுவிரதம் 7–3–56 தேதியோடு முடிந்தது.

மீண்டும் மில்லைத் திறப்பதாயிருந்தால், பழைய தொழிலாளர்களையே வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தொழிலாளர்கள் பெருங்கிளர்ச்சிசெய்து வருகிருர்கள்.

### கிருஷ்ணகிரி நீர்த்தேக்க தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு தருக!

சேலம் ஜில்லா கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்தில் வேலை செய்யும் லாரி டிரைவர்களின் வீடுகள் 6–3–56ல் எரிந்து சாம்பலாகி விட்டன.

இந்த வீடுகளெல்லாம் மண் சுவர்கூட இல்லாத, தென்ன ஓலைகளால் ஆனவை. அதனல் சுலபத்தில் தீப்பிடித்துக் கொள்ள முடிந்தது. 3–3–56ல் தான் தொழிலாளர்கள் சம்பளம் வாங்கி வீட்டில் வைத்திருந்தார்கள். தீப்பிடித்த அவசரத்தில், குழந்தை குட்டிகளை வெளியேற்றுவதே கஷ்டமாகி விட்டபடியால், சாமான் சட்டுகளை எப்படி எடுக்க முடியும்?

அவர்களுக்கு நிர்வாக இன்ஜினீயர் அவர்கள், உடனடி உணவும், இருப்பிடமும் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளார். ஆனல் இது மட்டும் போதாது. அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவும் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் துணி மணி, பண்ட பாத்திரம் முதலியவற்றுக்கு ரொம்பவும் கஷ்டப்பட்டு விடுவார்கள்.

# நெய்வேலிச் சுரங்கம்

# தமிழகத்தின் செல்வ பூமி

## கிழக்கு ஜெர்மனியின் உதவி

**இதற்கு முந்திய இரு வார இதழ்களில், நீர் இறைப்பு வேலைகள், குவாரி, வெள்ளைக் களி மண்ணின் பயன் முதலியன பற்றி எழுதினேம். தொடர்ந்து படியுங்கள்!**

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க பரீட்சார்த்த குவாரியைப் பார்வையிட்ட பிறகு, 5,000 கிலோ வாட் உற்பத்தி செய்யும் மின்சார நிலையத்தைப் பார்வையிட்டோம். சுரங்கத்தின் மின்சாரத் தேவையை இதுதான் பூர்த்தி செய்து வருகிறது. இதில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி, எங்களை யார் என்று விசாரித்தார். பத்திரிகை நிருபர்கள் என்றேன். சுரங்கத்தைப் பற்றி மாத்திரமே எழுதாமல், எனக்கு மாதம் 45 ரூபாய்தான் சம்பளம், வேறு சலுகை எதுவுமில்லை, இதையும் பத்திரிகையில் போடுவீர்களா?' என்றார். போடுகிறோம் என்று சொல்லிவிட்டு வெளியே வந்தோம். பின்னும் கூடவே வந்து, "சம்பளம் ஜாஸ்தி கொடுக்கும் படியாக எழுதுங்க ஸார்!" என்றார். அதற்கும் சரி என்றோம். மாட்டேன் என்று எப்படிக் கூற முடியும்?

### பழுப்பு நிலக்கரி

பழுப்பு நிலக்கரிக்கு ஆங்கிலத்தில் லிக்னைட் என்று பெயர். லட்சக் கணக்கான வருஷங்களுக்குமுன், காடுகள் ஏராளமாக, துரிதமாகச் செழித்து வளர்ந்து அடர்த்தியாகி, பிறகு அவை அழிந்து மக்கிவிட்ட தென்றும்—பிறகு வெள்ளம், பூகம்பம் முதலிய மாறுதல்களுக்குட்பட்டு உருவம் மாறியதென்றும்—பிறகு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான அடி உயரம் வரை மண்மேடிட்டு, அக்கட்டைப் பொருள்களை அழுத்திக் கொண்டிருக்கிற தென்றும்—இந்த மாறுதலின் காரணமாக ஏற்படுவது தான் பழுப்பு நிலக்கரி என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். நெய்வேலியில்' பழுப்பு நிலக்கரிக்கு அடியில் ஏராளமாகத் தண்ணீர் தேங்கியிருப்பதாலும், ஆர்ட்டீஷியன் கிணறுகள் இருப்பதாலும், இந்தப் பழுப்பு நிலக்கரியானது தண்ணீர்மீது வளர்ந்த செ[illegible]காடிகளின் மாற்றுப்[illegible]தான் என்றும் ஆராய்ச்சி[illegible]ர் ஊகிக்கிறார்கள். நெய்வேலி பழுப்பு நிலக்கரியில் ஈரப்பதம் அதிகம். மிருதுவாக இருக்கிறது. சுலபத்தில் உடைக்க முடிகிறது.

இந்தப் பழுப்பு நிலக்கரியே, மேலும் பல லட்ச வருஷங்களாக, பூமி அழுத்தத்துக்கு ஆளாகி இறுகினால், கருப்பு நிறமாக, அசல் நிலக்கரி ஆகிறதாம்.

**ஐ. மாயாண்டி பாரதி**

### 200 கோடி டன்!

கடலூருக்கும் விருத்தாசலத்துக்கும் இடையில் 100 சதுர மைல் பிரதேசத்தில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி அகப்படுகிறது. வருஷந்தோறும் $32\frac{1}{2}$ லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை எடுக்க இந்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாம். இந்தத் திட்டத்துக்காக 70 கோடி ரூபாய் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளார்கள் 600 வருஷங்களுக்கு எடுக்கலாம்! பீகார், மே. வங்க நிலக்கரிக்கு 1 டன்னுக்கு ரூ 40, 50 ஆகிறது. இங்கு 8 ரூபாய்தான் ஆகிறது. எவ்வளவு லாபம்!......

### 2 லட்சம் கிலோவாட் மின்சார நிலையம்

நெய்வேலி பழுப்பு நிலக்கரியை எரி பொருளாகப் பயன்படுத்தி வருஷந்தோறும் 2 லக்ஷம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய தெர்மேல் ஸ்டேஷனை நிறுவப்போகிறார்கள்.

1960-ம் வருடத்தில் 50.000 KW சக்தி தரும் இயந்திரம் வேலை துவங்குமாம். இங்கு உற்பத்தியாகவிருக்கும் மின்சாரத்தை மேட்டூர், சென்னை மின்சார இணைப்புடன் சேர்த்தால், சென்னை ராஜ்யத்துக்கு மட்டுமின்றி, ஆந்திரா, மைசூர், திரு-கொச்சி முதலிய பிரதேசங்களுக்கும் பயன்படுமென்று முக்கிய நிர்வாக அதிகாரி ஸ்ரீ டி. எம். எஸ். மணி அவர்கள் தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல, இந்த மின்சார உற்பத்தியின் விளைவாக, தொழில் வளர்ச்சியில் பின் தங்கி நிற்கும் ராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற தென் ஜில்லாக்களும் பெரும் பயன் அடையுமென்றார். மேட்டூர் நீர் மட்டம் குறைந்துவிட்டதால் தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டு ஏற்பட்டுவருகிறது. இது நிறைவேற்றப்பட்டால் பெரிய அளவு உதவியாக இருந்து நெருக்கடியைத் தீர்க்கும்.

### 2 லட்சம் டன் உரம்

திருச்சி ஜில்லா அரியலூர் - மார்க்கத்தில் ஒதியம் கிராமத்துக்கு அருகில் எரு உற்பத்திக்குத் தேவைப்படும் கோலக்கட்டி எனக் கருதப்பட்ட ஜிப்சம் என்ற பொருள் 60 மைல் பரவியுள்ளது. இந்தியாவின் தேவைக்கு இங்கிருந்து 60 சதமானம் சப்ளை செய்கிறது. இந்த ஜிப்சத்தையும் நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் சேர்த்து தயாரித்தால், அமோனியம் சல்பேட் என்ற ரஸாயன உரமாகிறது. பழமரங்களும் புகையிலைச் செடியும் செழித்து வளர இந்த உரம் பேருதவிபுரியும்.

வருஷத்திற்கு 2 லட்சம் டன் உரம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும், 1960 ஜூனில் 70,000 டன் உரம் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை ஏற்படுமென்றும் இந்திய சர்க்கார் தெரிவிக்கிறது.

### அடுப்புக்கரி

இந்தப் பழுப்பு நிலக்கரியைக் கெட்டிப்படுத்தி, உருவப்படுத்தினால், அதற்கு பிரிக்கட் என்று பெயர். இந்தப் பிரிக்கட்டுகள் மலைக் கரிகளைவிட உயர்ந்தது. வீட்டு அடுப்புகளுக்கு ரொம்பவும் பயன்படும். புகையாது. நாற்றமடிக்காது. $7\frac{1}{2}$ லக்ஷம் டன் பழுப்பு நிலக்கரியை வருஷந்தோறும், இந்தப் பிரிக்கட்டுகள் செய்யப் பயன்படுத்துவார்களாம்! 1958-லேயே இந்த அடுப்புக்கரி உற்பத்தி தொடங்கிவிடுமாம்! 10 லட்சம் டன் பிரிக்கட்டுகள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்ய சர்க்கார் திட்டமிட்டுள்ளதாம்! சென்னை ராஜ்யத்தின் எரி பொருள் தேவையில் 80 சதமானம் இது சப்ளை செய்யும்.

மேலும், ரயில்கள், மின்சார நிலையங்கள், கப்பல்கள், பஞ்சாலைகள் போன்ற தொழில்களுக்கு இது பயன்படும்.

### காடுகள் அழியாது

வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தேவைப்படும் விறகுக்கு நாம் காடுகளை அழிக்கிறோம். பிரிக்கட்டுகளை உபயோகித்தால் காடுகளை அழிக்கவேண்டிய அவசியமில்லை. பயனுள்ள மரங்களை காடுகளில் வளர்க்கலாம். மழை பெய்யும். உஷ்ணமும் குறையும்.

அடுப்புக்கு வறட்டிகளை உபயோகித்து வருவதை நிறுத்தி. அவற்றை (மாட்டுச் சாணத்தை) நிலத்துக்கு உரம் போடலாம்.

### மற்றும் பல தொழில்கள்

இந்தக் கரியைக்கொண்டு பஸ்களை ஓட்டலாம். வேண்டிய அளவு தார் செய்யலாம். டீஸல் ஆயில், பெட்ரோல், குரூட் ஆயில், வெடி மருந்து செய்வதற்குத் தேவையான மொண்டான் மெழுகு, எசன்ஸ்கள் முதலியவை செய்யலாம். ஒரு டன் தார் ரூ. 400 வரையும் விற்கிறது என்பதை நினைவுப்படுத்துங்கள். அப்பொழுது தான் தெரியும், இதன் பயன் எவ்வளவு என்று!

இன்றுள்ள தொழில்கள் தட்டுத் தடங்கலின்றி இயங்கவும், மேலும் பல தொழில்கள் ஏற்படவும் நெய்வேலி உதவி செய்யும்.

1957-ம் வருட மத்தியிலிருந்து விசிரி வியூக வடிவத்தில் குவாரி வெட்டும் வேலை பரந்த அளவில் நடைபெறும் என்றும் தெரிவித்தார்கள்.

### கிழக்கு ஜெர்மனி உதவி ராமமூர்த்தி யோசனை

சர்வதேச பஞ்சாலைத் தொழிலாளர் மகாநாட்டுக்குத் தோழர் பி. ராமமூர்த்தி சென்றிருந்தபோது, கிழக்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். அங்கு பழுப்பு நிலக்கரியைக் கொண்டு இரும்பை உருக்குவதைக் கண்டார். இவ்விஷயத்தையும், அங்குள்ள மந்திரிகள் கூறிய விபரங்களையும், சென்னை சட்டசபையில் சென்ற வருஷம் தெரிவித்தார். சர்க்கார் நடவடிக்கை எடுத்தது.


அதன்பிறகு கிழக்கு ஜெர்மன் சர்க்கார் நிபுணர்களை அனுப்பியது. அந்த நிபுணர்கள் நெய்வேலிக்கு வந்து பிப்ரவரி வரையில் ஆராய்ச்சி செய்து சென்றதோடு, வேலைகள் சரியான பாதையில் நடைபெறுவதாகக் கூறி ஊக்குவித்துவிட்டுச் சென்றார்கள்.

ஜெர்மன் பழுப்பு நிலக்கரியைவிட, நெய்வேலி கரி, தரத்தில் தாழ்ந்ததல்ல. அதனால் இரும்பை உருக்க முடியும் என்று அபிப்பிராயப் பட்டார்கள் கிழக்கு ஜெர்மன் நிபுணர்கள்.


கடந்த பிப்ரவரி கடைசியில் தான், 30 டன் நெய்வேலி கரியுடன் கி. ஜெர்மனிக்குச் சென்றிருக்கிறார்கள் அவர்கள். அங்கு அதன் பல்வேறு பயன்களையும் பற்றி ஆராய்வார்களாம்.

அப்போது கூடவே இருந்து, விஷயங்களைத் தெரிந்துகொள்ள நெய்வேலி ரஸாயன நிபுணர். ஸ்ரீ சுப்புரத்தினம் அவர்கள் 15-3-56ல் கிழக்கு ஜெர்மனிக்குச் செல்வார் என்று எங்களிடம் தெரிவித்தார்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)



600 அடி நீளம், 600 அடி அகலமுள்ள பாதாளக் குவாரி! அதற்கும் கீழ் கிணறு! கிணற்றின் அடியில் பழுப்பு நிலக்கரி! பழுப்பு நிலக்கரி பரப்பிலிருந்து பூமி மட்டத்துக்கு $176\frac{1}{2}$ அடி.




## சுப்ரமண்யத்தின் பாதுகாப்பு

மந்திரிகளும், அதிகாரிகளும் சுற்றுப் பிரயாணம் செய்கிறபோது, ஆங்காங்குள்ள மக்கள், தத்தம் ஊர்களிலுள்ள குறைகளை மகஜர்கள் மூலம் சமர்ப்பிப்பது வழக்கம். இது ஒவ்வொருவருடைய உரிமை. இந்த வகையில், இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு மலபாருக்கு விஜயம் செய்தபோது, அவரிடம் பாலக்காடு நகர சோஷலிஸ்ட் கட்சியினர் மகஜர் சமர்ப்பிக்க விரும்பினார்கள். மகஜர் கொடுக்கக் கூடாது என்று கலைக்டர் தடுத்தார். தடுத்தது மட்டுமல்ல, மகஜர் கொடுக்க முயன்றவர்களை, சிறைக்குள் தள்ளினர். இது ஒரு நிகழ்ச்சி!

மலபாரிலுள்ள படகரையைச் சேர்ந்த வியாபாரி ஒருவர், பிரதமர் நேருவுக்கு மாலைசூட்ட முயன்றபோது, போலீஸ் அதிகாரிகள் அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று, நையப் புடைத்து சித்திரவதை செய்தார்கள். இது மற்றொரு நிகழ்ச்சி!!

இவ்விரு நிகழ்ச்சிகளையும்பற்றி சென்னை சட்டசபையில் பட்ஜெட் விவாதத்தின்போது, கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள் கேள்விகேட்டார்கள். பொறுப்பான மந்திரியிடமிருந்து புத்திசாலித்தனமான பதிலை அனைவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், மந்திரி சி. சுப்ரமண்யம் கூறிய பதில் என்ன தெரியுமா?

"சொந்தப் பிரதமர் நேருவின் பாதுகாப்புபற்றி கம்யூனிஸ்டுகளுக்கு அக்கறை இல்லை. ஆனால் சென்னை ராஜ்யத்துக்கு விஜயம் செய்த சோவியத் தலைவர்களின் பாதுகாப்புபற்றி அதிகக் கவலைப் பட்டார்கள்" என்று பதில் அளித்தார். நாம் சொல்லுகிறோம்; நேருவுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் விஷயத்தில், சுப்ரமண்யத்துக்கு எவ்வளவு அக்கறை உண்டோ, அதே அளவு அக்கறை இந்த நாட்டிலுள்ள $37\frac{1}{2}$ கோடி மக்களுக்கும் உண்டு. கம்யூனிஸ்டுகளுக்கு அக்கறையில்லை என்று கூறுவது நேர்மையற்ற பிரச்சாரமாகும். இங்கு விஜயம்செய்த சோவியத் தலைவர்களுக்கும் சரி அல்லது வேறுநாட்டு தலைவர்களுக்கும்சரி, தக்க பாதுகாப்புக் கொடுத்து அனுப்பிவைக்கவேண்டியது இந்த நாட்டு மக்களுடைய கடமை; சர்க்காருடைய கடமை. இதேபோல் நமது நாட்டுத் தலைவர்கள் வேறு நாடுகளுக்கு விஜயம்செய்தால், அவர்களைப் பாதுகாப்பது அந்த நாட்டு மக்களுடைய கடமை. சர்க்காருடைய கடமை. ஒரு நாட்டுத் தலைவரின் உயிருக்கு, இன்னொரு நாட்டில் ஆபத்து ஏற்படுமானால், அந்த நாட்டு மக்களுக்கும் சர்க்காருக்கும் பெருத்த அவமானமாகும்.

எனவே, சோவியத் தலைவர்களைப் பாதுகாக்கும் விஷயத்தை மக்களுடைய பிரச்னையென்றும், சர்க்காருடைய பிரச்னையென்றும் பாராமல், ஒரு கட்சிப்பிரச்னையாக்க ஸ்ரீ சுப்ரமண்ய' முயல்வது, நட்புறவு விஜயம் செய்த சோவியத் தலைவர்களை அகௌரவப்படுத்தியதாகும்' கேட்ட கேள்விக்கு நேரடியான, நேர்மையான பதில் சொல்லாமல்—மகஜர் கொடுக்க வந்தவருக்கு ஜெயிலும், மாலைபோட வந்தவருக்குச் சித்திரவதையும் செய்த கொடுமையை மூடிமறைப்பதற்காக, கம்யூனிஸ்டுகளின் தேச பக்திக்கு மாசு கற்பிக்க முயல்கிறார் மந்திரி சுப்ரமண்யம். அதற்காக மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் திருப்பணியில் மும்முரமாய்க் குதித்திருக்கிறார்.

பிரதமர் நேருவின் பாதுகாப்பு பற்றி கம்யூனிஸ்டுகளுக்கு அக்கறையில்லை யென்று குட்டையைக் குழப்புகிற நிதி மந்திரியைக் கேட்கிறோம். இந்தியாவின் சமாதான சகவாழ்வுக் கொள்கை உருவாகிய காலத்தில், அதைக் கண்டு ஏகாதிபத்தியவாதிகள் கலக்கங்கொண்டிருந்தபோது இங்கு அன்னிய உளவாளிகள் அதிகம் நடமாடுவதால், நேரு சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, தக்க பாதுகாப்புடன் செல்ல வேண்டும், என்று டில்லி மேல்சபையில், முன்னர் எச்சரித்தவர் கம்யூனிஸ்ட் தலைவர் பி. சுந்தரய்யா என்பது மந்திரி சுப்ரமண்யத்துக்கு நினைவூட்டுகிறோம்.

நேருவுக்குப் பாதுகாப்பு என்பதின் அர்த்தம் என்னவென்றால், மகஜர் கொடுக்க வருகிறவர்களையும், மாலைசூட்ட வருகிறவர்களையும் மண்டையை உடைத்து ஜெயிலில் தள்ளுவதுதான் என்று, மந்திரி சுப்ரமண்யம் சொல்வதிலிருந்து, மக்கள் புரிந்துகொள்ளுகிறார்கள். வெட்கம்! வெட்கம்!

ஐ. மா. பா.

# கூட்டணியில் நாம்

**ப. ஜீவானந்தம்**

பூர்வகட்சிக் கூட்டணியில், கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி, திராவிட சட்டசபைக் கட்சி, தமிழரசுக்கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், தமிழ்ப் பேரவை, வடக்கெல்லைப் பாதுகாப்புக்கமிட்டி, திரு-கொச்சித் தமிழ்ப் பிரதேச இணைப்புக் கமிட்டி, போன்ற கட்சிகளும், கழகங்களும், கமிட்டிகளும், ஸ்தாபனங்களும் இணைந்துள்ளன என்பது எல்லோருக்கும் தெரியும். இதில் முக்கிய அங்கம் வகிக்கிற கட்சிகள், கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் இடையில் அடிப்படையான கருத்து வேற்றுமைகள் உண்டு என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இவைகள் குறிப்பிட்ட ஒரு பிரச்னையில்தான் அந்தப்பிரச்னையை ஒட்டிய குறிப்பிட்ட கோரிக்கைகளில்தான், உடன்பட்டு ஒன்றுபட்டு நிற்கின்றன என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

தட்சிணப் பிரதேசத்தை எதிர்ப்போம். தமிழ்ராஜ்யத்தை அமைப்போம். எல்லையை வகுப்பதில் ஜனநாயக நீதியை நிலைநாட்டுவோம். சென்னை ராஜ்யத்தை தமிழ்நாடு என்று அழைப்போம்— **இந்தக் கோரிக்கைகளைப் பெற மட்டும் கூட்டணி பிறந்தது.** கூட்டு நடவடிக்கை எடுத்தது. தமிழகத்தின் சரித்திரம் கண்டு கேட்டறியாத பிரம்மாண்டமான ஹர்த்தால், ஏற்றவர் எதிர்த்தவர் எல்லோருடைய ஆருடங்களையும் ஏமாற்றி, மகத்தான வெற்றிபெற்றது. தட்சிணப்பிரதேச அவசகுன பூதம் வெளிக்கிளம்பாமல் தடுக்கப்பட்டது.

### நாம்

நாம் மொழிவழி ராஜ்ய கோரிக்கைக்காக நெடுகலும் முன்னுக்குப்பின் முரணின்றிப் போராடி வந்திருக்கிறோம். ஐக்கிய தமிழக கோஷத்தை முதன் முதலில் தமிழகத்தில் கிளப்பியது கம்யூனிஸ்ட் கட்சிதான். மொழிவழி ராஜ்யச் சிரமைப்பை வேண்டுகிற பொழுதே நாம் இந்திய ஒற்றுமையையும் உறுதியாக, ஐயந்திரிபுக்கிடமின்றி, வேண்டுகிறோம். மொழிவழி ராஜ்யச் சீரமைப்பால் இந்திய ஒற்றுமையும் இந்தியஜனநாயகமும் மென்மேலும் வளர்ந்து வளம்பெறும் என்பது எமது அழுத்தம் திருத்தமான கருத்து.

### தி. மு. கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்தார், நம்மோடு இணைந்து நின்று இந்திய ஒற்றுமையை அங்கீகரிக்கிற சர்வகட்சிக் கூட்டணியின் தமிழ் ராஜ்யக் கோரிக்கைக்காகப் போராடினார்கள்; போராடுகிறார்கள். அவர்கள் தங்களுடைய 'திராவிட நாடு—தனி நாடு' என்ற அவர்கள் லட்சியத்தை மறைத்து வைக்கவில்லை. அதுதான் அவர்களுடைய லட்சியம் என்பதை நாமும் மறந்துவிடவில்லை. மாறுதலைக் கணக்கிலெடுத்த முன்னேற்றக் கழகத்தார், 'திராவிட நாடு – தனிநாடு' என்று மட்டும் நின்ற நிலையில் மாறி, ஆந்திர ராஜ்யம் அமைந்த பிறகு, 'முதலில் மொழிவழி நாடு, முடிவில் திராவிட நாடு' என்ற நிலைக்கு வந்தனர். இன்று ஆந்திரம், விசால ஆந்திரமாக உருவாகிவிட்டது. திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழை, கோட்டயம், கொச்சி, எரணுகுளம் முதலிய திரு-கொச்சி ராஜ்யத்திலுள்ள பல நகரசபைத் தேர்தல்களில் ஐக்ய கேரள சக்திகள் காங்கிரஸைப் படுதோல்வியுறச் செய்து, வெற்றி பெற்றுவிட்டன. இந்த மாறிவரும் நிலைமைகளை தி. மு. க.வினர் அலட்சியப்படுத்த மாட்டார்களென்று எதிர்பார்க்கிறோம். கேரள – கர்நாடக இணைப்பை எதிர்த்து, சம்யுக்த கர்நாடகக் கிளர்ச்சி மதர்ந்து கிளர்ந்து வருவது அண்ணுத்துரையோ நெடுஞ்செழியனோ அறியாததல்ல. இந்தப் பிரத்தியட்சமான மாறுதல்களை யெல்லாம் கணக்கில் எடுக்காமல், அவர்கள், 'திராவிட நாடு – தனி நாடு' லட்சியத்தில் மாறுதல் வேண்டாதவர்களாகத்தான் நெடுகலும் இருப்பார்களென்று நாம் நினைக்க வேண்டியதில்லை.

இன்று மொழிவழி ராஜ்யப் பிரச்னையில்தான் கூட்டணி என்பது பட்டப்பகல் வெட்ட வெளிச்சம். இதனால் எதிர்காலத்தில் வேறு பிரச்சினைகளிலும் கூட்டணி சேரமாட்டோம் என்பதுண்டா? இல்லை. மாறாக, இன்றையக் கூட்டணியால் கிடைத்த இணைப்பு, மேலும் பல பிரச்சினைகளில் இணைந்து நிற்க வாய்ப்பு அளிக்கும் – அளிக்க வேண்டும் என்றே விரும்புகிறோம்.

தமிழ் ராஜ்யம் கிடைக்கமட்டுமல்ல, தமிழ்நாடு என்று பெயர் சூட்டமட்டுமல்ல — இவைகளோடு ஆங்கில மொழியை அதிகாரத்திலிருந்து இறக்கி நமது தாய்மொழியாம் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கும் கோரிக்கைக்காகவும் இந்தக் கூட்டணி போராட முடியும் என்றும் நினைக்கிறோம். தமிழகம் செழிக்க, தமிழகத்தின் பெருவாரி மக்களான உழவர்களும் தொழிலாளர்களும் வாழ்க்கையில் வாய்ப்பும் வசதியும் பெற உடனடி நிலச்சீர்திருத்தம், சரியான தொழிற் கொள்கை ஆகியவற்றிற்காக இந்தக் கூட்டணி போராட முடியும் என்றும் நினைக்கிறோம். இந்தத் திசையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தான் கூட்டணி நீடிக்குமா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் என்பது எங்கள் கருத்து.

### வேறு நோக்கமில்லை

சர்வ கட்சிக் கூட்டணியின் நோக்கம் காங்கிரஸை ஒழித்துக் கட்டுவதுமல்ல; காமராஜரையோ நேருவையோ அதிகாரத்திலிருந்து ஒழித்துக்கட்டுவதுமல்ல. மொழிவழி ராஜ்யக் கொள்கைக்கு எதிரிடையான, பிற்போக்கான, ஜனநாயக வி[...]மான பண்டித நேருவின், [...]கையை எதிர்க்கவே கூட்டணி[...]து. ஆகவே, ஹர்த்தாலில்சேரும்படி, காங்கிரஸ்காரர்களை, காங்கிரஸ்காரர்கள் என்ற முறையிலேயே கூட்டணி அழைத்தது. காங்கிரஸ் மக்களும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கலந்துகொண்டார்களென்பதும் குறிப்பிடத்தக்கது.

இதர ஜனநாயக மக்களோடு காங்கிரஸ் மக்களையும் குறிப்பிட்ட ஜனநாயகப் பிரச்னையில் கூட்டணியில் கொண்டுவரவேண்டும், கொண்டுவரமுடியும் என்பது தான் கூட்டணியின் நேர் அனுபவம். இந்த உண்மைக்குப் புறம்பாக நேருவோ, காமராஜரோ கூட்டணியைப்பற்றிக் குறை கூறி, தமிழ்ப் பொதுமக்களைக் குழப்பிவிட முடியாது என்பது உறுதி.

### தேர்தல் கூட்டணியா?

'இது தேர்தல் கூட்டணி' என்று காமராஜர், கூட்டணிமீது சந்தர்ப்பவாதச் சகதியை அள்ளி வீசுகிறார். 'இதைத் தேர்தல் கூட்டணியாக்க ஆவனசெய்வேன்' என்று அண்ணுத்துரை, காமராஜருக்குப் பதிலிறுக்கும்போது தமது உள்ளக்கிடக்கையை வெளியிடுகிறார். ஆனால், இந்தக் கூட்டணி தேர்தல் கூட்டணியாகப் பிறக்கவுமில்லை, இன்றுவரை அவ்வாறு உருவாகவும் இல்லை. ஆகவே, காமராஜர் கூற்று ஆதாரமற்றது; அண்ணுத்துரை கூற்று அவர் ஆசையைக் காட்டுவது.

தேர்தல் மிக முக்கியமான அரசியல் நிகழ்ச்சி. இந்தக் கூட்டணி, தேர்தல் கூட்டணியாக வேண்டும் என்று விரும்புவதும் நல்லதுதான். ஒரு கூட்டணி குறிப்பிட்ட ஒரு பிரச்னைக்காகத் தோன்றினால், அது பின்னர் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உடன்பாட்டோடு, தேர்தல் கூட்டணியாக உருவாகக் கூடாது என்ற நியதியும் இல்லை.

### அரசியல் பொருளாதார திட்டம் என்ன?

ஆனால் ஒன்று. குறிப்பிட்ட பிரச்னையில் இணைந்த இணைப்பை மட்டும் வைத்துக்கொண்டே, ஒரு கட்சியின் விருப்பத்தை அடிவாரமாக வைத்து ஒரு தேர்தல் கூட்டணி உருவாகிவிடாது. இந்தக் கூட்டணியை தேர்தல் கூட்டணியாக்க முன்முயற்சி எடுக்கும் கட்சியிடம்—அது எந்தக் கட்சியாயினும் சரி—ஒரு அரசியல், பொருளாதாரத் திட்டமும் அதையொட்டிய நடைமுறையும் காணப்படவேண்டும். அப்பொழுதுதான் இதர கட்சிகள் இதுபற்றித் தெரிந்துகொள்வதற்கும் சிந்திப்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்தமட்டில், கூட்டணியில் தொடர்ந்து ஈடுபடும்; கூட்டணியின் கோரிக்கைகளைப்பெற, ஜனநாயக இயக்கத்தை வளர்க்கும். தனது ஜனநாயகத் திட்டத்தை மக்கள் முன்வைத்து, கட்சி தனது சொந்த மேடையில் நின்று இடையருது கிளர்ச்சி செய்யும். தக்க தருணம் வரும்போது, தேர்தலில் கூட்டணிபற்றியும் கட்சி முடிவு செய்யும்.

### ராஜாஜியின் முயற்சி

மீண்டும் ராஜாஜி தட்சண பிரதேச பூதத்தைக் கிளப்பிவிட்டு ஆட்டங்காட்டத் தொடங்கியிருக்கிறார். நிதி அமைச்சர் சுப்ரமணியத்தைத் தட்டிக்கொடுத்துப் பலந்தேடுவதும், முதலமைச்சர் காமராஜரை குத்தலாகத் தாக்கி பலவீனப்படுத்துவதுமான பஞ்சதந்திர வித்தையில் இறங்கி இருக்கிறார். தட்சணப்பிரதேசம் திட்டவட்டமாகக் கைவிடப்பட்டதென்றும். தமிழ் ராஜ்யம் உருவாவது நிச்சயமென்றும் காமராஜர் வெளிப்படையாக அறுத்துச் சொல்லிவிடவேண்டியது அவசியம். தமிழ்மக்களின் முழுநிறை ஆதரவு தமிழ் ராஜ்ய அமைப்புக்குத்தான் உண்டு, தட்சிணப்பிரதேசத்துக்கு அல்ல.

இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி திண்டுக்கல் மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் தொடர்ந்து பிரசாரம் செய்யும். எல்லைப்பிரச்னையில் கட்சி, தான் முன்வைத்துள்ள ஜனநாயகக் கோட்பாட்டுக்கு எல்லாக் கட்சிகளிடமும் அங்கீகாரம் தேட முயற்சி செய்யும்.

# பிரிட்டனே வெளியேறு!

## ஸைப்பிரஸ் மக்களின் விடுதலைப் போர்

மத்தியதரைக் கடலில் உள்ள சின்னஞ் சிறு தீவு ஸைப்பிரஸ். ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கு இறங்கும் பாதையில் தலைவாயில் போல நிற்பது. முன்னாளைய துருக்கி சாம்ராஜ்யத்தின் பகுதியாகவும் கிரீஸின் பகுதியாகவும் இருந்து இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் ஆட்பட்டுக் கிடக்கிறது'

இதில் வாழும் மக்களில் பெரும்பாலோர் கிரேக்க வம்சாவளியில் வந்தவர்கள். சிறுபான்மையர் துருக்கி வம்சாவளியினர். கிரீசுடன் இணைக்கப்படவேண்டும். என்று மெஜாரிட்டியினர் விரும்புவது இயல்பே. ஆனால் இப்போது இணைப்பு யாருடன் என்பதல்ல பிரச்சினை.

ஸைப்ரஸ் மக்கள் கோருவது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து விடுதலை, சுயநிர்ணய உரிமை.

### பயங்கர அடக்குமுறை

தேசாபிமான ஆவேசத்துடன் ஸைப்பிரஸ் மக்கள் போராட்டக்கொடி உயர்த்தியுள்ளனர். 'பிரிட்டனே வெளியேறு' என்று போர் முழக்கம் செய்கின்றார்கள். பிரிட்டனோ குரூரமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. மதத்தின் சுதந்திரத்திற்காகவும் அதன் புனிதத் தன்மைக்காகவும் நிற்பதாகக் கூறும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் கிருஸ்துவ மத உற்சவங்களைத் தடை செய்துள்ளார்கள். ஏன்? அந்த உற்சவங்கூட விடுதலைக்கு ஆதரவாக உள்ளது என்பதால். ஊரடங்குசட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது இளைஞர் பலர் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகியுள்ளனர்.

இத்தீவு பொருளாதாரத்துறையில் பின்தங்கி நிற்பது. இதை ஒரு யுத்த தந்திர கேந்திரம்தான் என்ற முறையில் பிரிட்டன் வைத்திருக்கிறது. இத்தீவு கையிலிருந்தால் மத்தியதரைக் கடலைக் கட்டி ஆளலாம். கிழக்குக்கும் மேற்குக்கும் இடையில் காவல்புரியலாம். மூழ்காத கப்பல்போல இது காட்சியளிக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு ஒரு கேந்திர தளம்.

ஆசியாவிலும் அரபு நாடுகளிலும் மூக்குடைபடும் பிரிட்டன் மூர்க்கத்தனமாக இங்கு அடக்குமுறை நடத்துகிறது. கிரீக் வைதிக சர்ச் தலைவர் ஆர்ச் பிஷப் மக்கோரியஸ் உட்பட மதத் தலைவர் பலர் கைது செய்யப்பட்டு அவர்களது புனித சமய ஸ்தாபனங்களில் சோதனை நடக்கிறது. அவர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

### எல்லோரும் ஆதரிப்பர்

ஸைப்ரஸிலுள்ள பிரிட்டிஷ் கவர்னர் சர்ஜான் ஹார்டிங் இவர்களை பயங்கரவாதிகள் என்று பழி கூறுகிறார். சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களைப்பற்றி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கூறிவந்த நமக்குப் பழக்கமான குற்றச்சாட்டு. கிரீஸில் சகல கட்சிகளும் இதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வருகின்றன. சொந்த நாட்டில் கம்யூனிஸ்ட் முற்போக்கு சக்திகளை பாசிஸ அடக்குமுறையால் ஒடுக்கிய கிரீஸின் ஆளும்வர்க்கம் அலைமோதுகிறது. பிரிட்டனிடம் ஆட்சேபனை செய்யும் அளவிற்கு கிரீஸ் மக்களின் ஆவேசம் உந்தித் தள்ளி இருக்கிறது.

சுதந்திரப் பிரேமிகள், மக்களின் சுயநிர்ணய உரிமைகளை விழைவோர் அனைவரும் ஸைப்ரஸ் மக்கள் விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பர் என்பது நிச்சயம். பட்டாளத்தை வாபஸாக்கி பிரிட்டன் வெளியேற வேண்டும் என்று விரும்புவர்.

இந்தியாவின் தூதராக சர்வ தேச ஸ்தாபனங்களில் பணியாற்றும் மத்திய சர்க்கார் மந்திரி வி. கே. கிருஷ்ண மேனன். ஸைப்ரஸ் விடுதலை பெறவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளதை நம் நாட்டிலுள்ள சகல கட்சியினரும் ஆதரிப்பர்.

**கடைசிச் செய்தி**

## தூத்துக்குடி 4வது வார்டில் தண்ணீர் குழாய் வைக்க வரிகொடா போராட்டம் வெற்றி!

தூத்துக்குடி, மார்ச் 13—"குடிதண்ணீர் குழாய்கள் வைக்க சென்னை சுகாதார என்ஜினியர் அனுமதி தரும்வரை நகரசபைக்கு வரி கொடுக்கமாட்டோம்" என்று இந்நகர் 4-வது வார்டு மக்கள் வரிகொடா போராட்டம் நடத்திவந்தார்கள் அல்லவா? அந்த போராட்டம் வெற்றியடைந்துவிட்டது. குழாய்கள் வைக்க "தண்ணீர் வேகமில்லை" என்று கூறிய சென்னை சுகாதார என்ஜினியர் "தண்ணீர் வேகத்தை அதிகப்படுத்த சகல காரியங்களையும் செய்ய பரிசீலனை நடத்தவும்" என்று இங்குள்ள உதவி சுகாதார என்ஜினியருக்கு உத்தரவிட்டுள்ளார்.—ந. நி.

## காரைக்கால் மக்களுக்கு வேண்டுகோள்

### புதுவை ராஜ்ய சட்டசபை உபதேர்தல்

1956 மார்ச்சு 18-ந் தேதி காரைக்காலில் சட்டசபைக்கு உபதேர்தல் நடக்கிறது. வெகு முக்கியமான தேர்தல். காங்கிரசுக்கும், மக்கள் முன்னணிக்கும் நேரிடையான போட்டி. காங்கிரஸ் அபேட்சகர் பண வசதிபடைத்தவர், நிலப்பிரபு. மக்கள் முன்னணி அபேட்சகர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் சுப்ரமணியம். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலும் பொதுஜன சேவையிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ள இளைஞர். காரைக்கால் மக்களுக்கு அறிமுகமானவர். சட்டசபையில் மக்களின் நலனுக்காக மக்கள் முன்னணியின் ஜனநாயகத் திட்டத்தினடிப்படையில் போராடக்கூடியவர். காங்கிரஸ் கட்சி பெரும்பாலும் சாதிக் கட்டுப்பாடுகளையும் பணபலத்தையும், ஆளும் கட்சி என்ற கோஷத்தையுமே அடிப்படையாகக் கொண்டு வெற்றிகாண விரும்புகிறது. காரைக்கால் மக்கள் தங்கள் வாக்குகளை மக்கள் முன்னணி அபேட்சகருக்கே அளித்து ஜனநாயகம் வெற்றியடைய உதவ வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

வீரமிக்க காரைக்கால் மக்களே!

**மக்கள் முன்னணி அபேட்சகருக்கே உங்கள் ஓட்டு!**

**அவரது சின்னமான யானைப் பெட்டியில் உங்கள் ஓட்டுகளை 18—3—56 தேதியில் பதியுங்கள். தோழர் சுப்ரமண்யத்தின் வெற்றி உங்களது வெற்றியே!**

செயற்குழு
தமிழ்நாடு கமிட்டி
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

Regd. M. No. 5934 Printed & Published by G. ALAVANDAR, at Janasakthi Press, Subodhaya Buildings, 38, Mount Road, Madras-6.
OFFICE : 3, Anthony Street, Madras-14. Editor: K. MUTHIAH.
REGISTERED AS A NEWS PAPER IN CEYLON